பக்கங்கள்: 20

விலை: 30.00

THEEMPUNAL தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

www.theempunal.lk தீ : 01 புனல்:11 10.07.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION

BUILD THE NATION TOGETHER

தாமிரன்

“எல்லே குணவங்ச தேரர், சகல இன மக்களையும் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்குத் தயாராகுமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார். இவ்வாறான கோரிக்கைகள் பலவீனமானவை என்பது வெளிப்படை. சிறுபான்மை மக்களின் மீது அரசு மேற்கொள்கின்ற அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து குரல் கொடுக்காத நிலையில் நாடு வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றது என்னும் கொதிநிலையில் சிறுபான்மை மக்களை தம்மோடு இணையக் கோருவது அபத்தமானது.”

தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி தமிழர்களின் மீட்சிக்கானதா?

தமிழ்த்தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்துச் செயற்படுவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான முன் முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் இது வரவேற்கப்படத்தக்க விடயம். ஆனால் கடந்த காலங்களிலும் இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஒன்பது தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் நான்கு கட்சிகளே கூட்டத்தில் பங்கேற்றிருந்தன. இதில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச் சந்திரன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். பங்கேற்காத கட்சிகளுடன் தனித்தனியாகச் சந்தித்து உரையாட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தமது தனித்தனியான செயற்பாடுகள் தீர்வைப் பெற்றுத் தரப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்திருப்பது ஆரோக்கியமான விடயமாகவே பலராலும் பார்க்கப்படுகிறது. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம் எனக் கூறுவதால் மட்டும் ஒரு கட்சி தமிழ் மக்களுக்குரிய கட்சியாக இருந்துவிட முடியாது என்ற புரிதலினால் விளைந்த மாறுதலாகக் கூட இது இருக்கக்கூடும்.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனால்

▶15

இ.இராஜேஸ்கண்ணன்

கோவிட்-19 பேரவல காலத்து இளைஞர்கள்:



கரிசனை கொள்ள வேண்டிய பாதிப்புகளும் பரிகாரங்களும்

கோவிட்-19 பேரவலத்தின் விளைவுகள் உலகளாவிய சமூகத்தின் பல்வேறு பரிமாணங்களையும் பாதித்துள்ளது. ஆரம்பத்தில் கொரோனா வைரசின் பாதிப்பை உயிரியல் வயதின் அடிப்படையில் விளக்கினர். குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்களைப் பாதிக்கும் என்றும், அவர்களிடையே உயிரிழப்புகள் உயர்வாயிருக்கும் என்றும் முன்னர் தரப்பட்ட விழிப்புணர்வுக் கருத்துகள் இப்போது மாறியுள்ளன. பல்வேறு வயதுப் பிரிவினரும் உலகளாவிய ரீதியில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். கோவிட்-19 இளைஞர்கள் மீது செலுத்திவரும் தாக்கம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. வெறுமனே உயிரியல் ரீதியாக மாத்திரம் அதன் தாக்கத்தைப் பார்க்காது, இன்று அதன் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியாக பாதிப்புகள் மற்றும் மாற்றங்கள் குறித்து விரிவான ஆய்வுகளும் கருத்தாடல்களும் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் சமூகத்தின் மீது கோவிட்-19 இன் தாக்கம் குறித்து தனியான கவனம் தேவைப்படுகின்றது. ஏனெனில், எதிர்கால சமூகத்தில் முதிர் வகிபங்குகளை எடுக்கவுள்ள இன்றைய இளைஞர்கள் மீதான கோவிட்-19 இன் தாக்கத்தை வெறுமனே உயிரியல் ரீதியானதாக மாத்திரம் பார்க்க முடியாது. அதனை இளைஞர்களின் நல்வாழ்வு, நேர்முக மேம்பாடு, உள மேம்பாடு, ஆளுமை

“இளைஞர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களில் குறிப்பாக தந்தை, தாய் போன்றவர்களிலிருந்து தனிமைப்படுத்தப்படுவதால் பல உளரீதியான தாக்கங்களுக்கு உட்படுகின்றனர். தங்கிவாழும் நிலையில் குறித்த தனிமைப்படுத்தல்கள் அவர்களுக்கான அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுவதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.”

விருத்தி மற்றும் தலைமைத்துவப் பண்பிலான விருத்தி, பொருளாதார மேம்பாடு முதலான பல்வேறு விடயங்களை முன்னிறுத்திப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. சமூகத்தின் சக்திமிக்க பிரிவினராக இளைஞர்கள் விளங்கிவருகின்றனர். பொதுவாக 15 தொடக்கம் 24 வரையான வயதுடையவர்களை இளைஞர்கள் என்று வரையறுப்பர். இலங்கையைப் பொறுத்தவரை இந்த வயதெல்லை 15 தொடக்கம் 29 வரையென வரையறுக்கப் பட்டுள்ளது. ஆயினும், சில சமயங்களில் பண்புநிலையில் விளக்கமளிக்கவேண்டிய சூழ்நிலையில் உச்ச வயதெல்லையானது, இங்கு குறித்த எல்லையைக் கடந்து செல் லும் நிலையும் உள்ளது. எது எவ்வாறாயினும் திருமணம் செய்யாது பெற்றோருடன் வாழும் குறித்த வயதெல்லைக்குள் அடங்கும் ஆண்கள் மற்றும் பெண்களை

▶18

சீனாவின் அணுவாயுதக் குவிப்பு உலக வல்லரசுக்கான அறிவிப்பா?

● பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்தி வரும் சீனாவின் கதை இருபதாம் நூற்றாண்டின் அளப்பரிய வெற்றிக் கதைகளில் ஒன்று என அலெக்ஸாண்டர் நெல் குறிப்பிட்டிருந்தார். அதில் தொழில்நுட்ப வலுவுடைய ஆயுதங்களோடு அணிவகுத்த சீனப் படைகளின் நகர்வு ஜின் பிங் ஆட்சிக்கு வருகைதந்த போதே திட்டமிடப்பட்டு விட்டதுடன் 2049 இல் முழு நீள இராணுவ வலுவுடைய சக்தியாக வளந்து விடும் என 2015 இலேயே அலெக்ஸாண்டர் நெல் கணித்திருந்தார். அவரது கணிப்பு தவறவில்லை என்றே கூறலாம். 2049ற்கு முன்பே சீனாவின் இராணுவப் பலம் அதீதமாக உள்ளது என்பதை உலகளாவிய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இக்கட்டுரையும் சீனாவின் அணுவாயுத பெருக்கத்தைப் பற்றிய அமெரிக்காவின் குற்றச்சாட்டின் முக்கியத்துவத்தைத் தேடுவதாக உள்ளது.

சீனா அணுவாயுதங்களைக் குவித்து வருவது கவலை தருவதாக அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பாளர் நெட் பிறைஸ் தெரிவித்துள்ளார். சீனா மிக வேகமாக அணுவாயுதங்களைக் குவித்து வருவதை அதன் நடவடிக்கைகள் மூலம் அறிய முடிகிறது. சீனா தனது மேற்கு மாகாணத்தின் பாலைவனப் பகுதியில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைச் செலுத்த வல்ல சைலோ எனப்படும் தளங்களைக் கட்டமைத்து வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டிவருகிறது. இதனை ஆதாரப்படுத்தும் விதத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அணுவாயுத ஏவுகணைக் கிடங்குகளை மேற்குப் பாலைவனப் பகுதிகளில் நிறுவி வருவதாக வோசிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டிருந்தது. இதனை, செயற்கைக்கோள் படங்கள் மூலம் உறுதிப்படுத்தியதுடன் இவ்வாறான விடயங்களை சீனா மறைக்க முடியாதென வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இது சீனாவின் அணுவாயுதக் கொள்கையிலிருந்து மாறுபட்டுச் செல்கிறது என்பதைக் காட்டுவதுடன் அதிகளவான அணுவாயுதங்களை சீனா உருவாக்கியிருக்கலாம் எனவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இதற்குப் பதிலாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அமெரிக்க வெளியுறவுத் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

> **“இராணுவ வலிமையானது உலகளாவிய வல்லரசாக எழுச்சி பெறும் தேசத்தின் இருப்பையும் பிற தேசங்களுக்கு தெரியப்படுத்த முனைகிறது. எப்படி இரண்டாம் உலக போர் முடிவடைந்து ஜப்பான் சரணடைந்த போது அமெரிக்கா அணுவாயுதம் கொண்டு உலகத்தை தனது பிடிக்குள் கொண்டு வந்ததோ அவ்வாறான உபாயங்கள் பொருந்தியதாக சீனாவின் நகர்வு கோடிட்டுக் காட்டுகிறது.”**

சீனாவின் அணுவாயுதங்களின் தொகை ஏறக்குறைய 320-350ற்கு இடைப்பட்டதெனத் தெரிய வருகிறது. அதே நேரம் உலகளாவிய ரீதியில் அதிக அணுவாயுதத்தைக் கொண்ட நாடாக ரஷ்யாவும் அடுத்த இடத்தில் அமெரிக்காவும் உள்ளன. ஆனால் சீனா ஏன் அது விரைவாக அணுவாயுதங்களை உருவாக்க முயல்வதுடன் அதனை ஏவுகணைகளிலும் போர்க் கப்பல்களிலும் நீர்மூழ்கிகளிலும் இணைத்து வருகிறது? என்பதே பிரதான கேள்வியாகும்.

முதலாவது, சீன ஜனாதிபதி ஜின்பிங் கொம்யூனி ஸக் கட்சி அதிகாரிகளுடன் உரையாடும் போது தெரிவித்த விடயங்கள் கவனத்திற்குரியதாகும். (25.06.2021) குறிப்பாக, சீனா குறித்து கனிவான மென்மையான விம்பங்களை உருவாக்குமாறு பணித்துள்ளார். உலகளாவிய கருத்து மதிப்பீட்டின் அடிப்படையில் எமது தொனியைச் சரியாக அமைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். திறந்த மற்றும் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். ஆனால் அடக்கமாகவும் தாழ்மையாகவும் இருக்க வேண்டும். மேலும் சீனாவின் நம்பகமான மரியாதைக்குரிய விம்பத்தை உருவாக்க வேண்டும். இவை அனைத்தும் சீனாவின் உலகளாவிய வல்லரசுக்கான எழுச்சியைக் காட்டுகிறது. சீனா உலகத்தை ஆளுதல் என்ற இலக்கை எட்டிவிட்டதாகவே தெரிகிறது. அதற்கான அணுகு முறைகளை முதன்மைப்படுத்தி வருவதுடன் அதற்கான பலத்தை நிறுவுவதற்கு அணுவாயுதம் அவசியமானதாக அமைந்துள்ளது என்பதை சீனா உணர்ந்ததன் பிரதிபலிப்பே அணுவாயுதக் குவிப்பிற்கு காரணமாகும்.

இரண்டாவது, சீனா இரு பெரும் அணுவாயுத வல்லரசுகளுக்குச் சவாலாக எழுச்சி பெற வேண்டிய நிலையில் உள்ளதனால் அவற்றை எதிர் கொள்ள அணுவாயுதம் அவசியமாகிறது. அதாவது அமெரிக்கா மற்றும் ரஷ்யா எனும் இரு பெரும் வல்லரசுகள் அணுவாயுத வலிமையுடைய தேசங்களே. அதனால் அவற்றை எதிர்கொள்ளவும் உலகத்திற்கு அச்சத்தைத் தரவும் அடிப்படையான ஆயுதம் அணுவாயுதமாகும். அதனை நோக்கிய நகர்வையே சீனா மேற்கொண்டு வருகிறது. சீனாவின் அணுவாயுத எண்ணிக்கை மிகக் குறைந்தளவில் இருப்பதனால் அதனை ரஷ்யாவுக்கோ அமெரிக்காவுக்கோ நிகரானதாக ஆக்க வேண்டிய தேவை சீனாவுக்கு எழுந்துள்ளது.

மூன்றாவது, சீனா இராணுவ ரீதியில் தொழிநுட்ப ஆயுதங்களைக் குவிப்பதில் ஈடுபடுவதாக சிஐஏ குற்றம் சாட்டிவரும் சந்தர்ப்பத்தில் அணுவாயுதக் குவிப்பு அதன் இன்னோர் பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. இராணுவ வலிமையானது உலகளாவிய வல்லரசாக எழுச்சி பெறும் தேசத்தின் இருப்பையும் பிற தேசங்களுக்கு தெரியப்படுத்த முனைகிறது. எப்படி இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து ஜப்பான் சரணடைந்த போது அமெரிக்கா அணுவாயுதம் கொண்டு உலகத்தைத் தனது பிடிக்குள் கொண்டு வந்ததோ அவ்வாறான உபாயங்கள் பொருந்தியதாக சீனாவின் நகர்வு கோடிட்டுக் காட்டுகிறது. அதற்காக சீனா அணுவாயுதத்தைப் பிரயோகப்படுத்தும் என்பதல்ல விளக்கம். மாறாக அணுவாயுதத்தைக் கொண்டு பலமான உலகத்தில் அச்சத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்த முடியும் என்பதே சீனாவின் புரிதலாக உள்ளது. அது வல்லரசுக்காகப் போட்டியிடும் தேசத்திற்குத் தவிர்க்க முடியாத விடயமாகும்.

நான்காவது, 2017 இல் ஜின் பிங் கொம்யூனிஸக் கட்சியினர் மத்தியில் உரையாற்றும் போது சீனக் கம்யூனிஸக் கட்சி தனது சொந்த மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு பாடுபடுகின்ற அதேவேளை உலகின் பொதுவான அபிவிருத்தியை மேம்படுத்துவதிலும் பற்றுறுதி கொண்டிருக்கிறது. சீன மக்கள் தங்களுக்கும் அதே வேளை ஏனைய நாடுகளிலுள்ள மக்களுக்கும் சிறப்பான வாழ்வு கிட்ட எதிர்பார்க்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். 200 ஆம் ஆண்டு ஜின் பிங், பூஜியான் மாகாணத்தில் ஆளுநராக இருந்த போது பப்புவான் நீயூகெனிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக உருவாக்கிய ஐங்காவோ திட்டத்தை ஆரம்பித்திருந்தது டன் அத்திட்டத்தை ஆசியா, தென்பசுபிக் மற்றும் ஆபிரிக்காவில் உள்ள 100க்கு மேற்பட்ட நாடுகள் பின்பற்றி வருகின்றன. எனவே ஜின் பிங் குறிப்பிடுவது போல் உலகளாவிய கண்ணோட்டத்தில் சீனா வடிவமைக்கப் பட்டதுடன் உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் கவரும் விதத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. அதனால் சீனாவின் உலக விசையைப் பலப்படுத்தவும் பாதுகாக்கவும் அணுவாயுதம் மட்டுமன்றி இராணுவ வலிமை அவசியமாகிறது. அதனாலேயே அணுவாயுதங்களைக் குவிப்பதுடன் ஏவுகணைகளால் உலகத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைக் காட்ட சீனா முயலுகிறது.

ஐந்தாவது, சீனக் கம்யூனிஸக் கட்சி அரசியலிலும் பொருளாதாரத்திலும் வலுவான தேசமாக சீனாவை மாற்றிவிட்டது. பொருளாதார வலுவடைய ஒரு நாடு இராணுவ ரீதியான நகர்வையே முதன்மைப்படுத்த முயலும். அதனையே சர்வதேச அரசியலின் யதார்த்த வாதக் கோட்பாடு குறித்து நிற்கிறது. மேற்கின் ஆதிக்க வாதத்திற்குப் பின்னால் மாக்கியவல்லி மற்றும் ஹானஸ் மோகன்தோ நிற்பது போல் சுன்சூவின் இராணுவவாதம் சீனர்களின் யதார்த்தவாதமாகவுள்ளது. அதிகார மைய வாதத்தின் பலக்கோட்பாடாக இராணுவம் விளங்குவதனால் இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க முயலுவது அரசுகளின் பிரதான உத்தியாகவே உள்ளது. கடந்த காலத்தில் மேற்குலகம் தனது அணுவாற்றலை அதிகரிக்கும் போதும் பிறநாடுகளில் அதனைக் கொண்டு தாக்கும் போதும் எத்தகைய உபாயம் அமைத்ததோ அதே உபாயத்தை தற்போது சீனா கொண்டு நகருகிறது.

எனவே அலெக்ஸாண்டர் நெல் குறிப்பிடுவது போல் சீனாவை நோக்கி உலக வரலாறு சுழல ஆரம்பித்துள்ளது. 2019 இல் சீன ஜனாதிபதி ஜின் பிங், சாஜோ நகரில் சீனக் கடற்படை முகாமுக்குச் சென்றபோது போருக்கு தயாராகுங்கள். எல்லையில் மிகவும் விழிப்புடன் முழு விசுவாசமும் அர்ப்பணிப்பும் நம்பிக்கையும் கொண்டிருங்கள். அவைதான் நாட்டுக்குத் தேவை எனத் தெரிவித்தார். இதிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாவது சீனா ஒரு போருக்குத் தயாராகிறது என்பதாகும். அது தன்னை ஒரு வல்லரசாகப் பிரகடனப்படுத்த ஒரு போர் தேவை என்பதை உணரும் காலம் நெருங்குவதாகவே தெரிகிறது. மென் அதிகாரத்தையும் சமவலு உறவையும் (win-win) பேணிய சீனா இராணுவப் பலத்தை எட்டுவதற்கான காலத்தை நெருங்குகிறதாகவே அதன் நகர்வுகள் உணர்த்துகின்றன. தொழில்நுட்ப ஆயுதங்கள் மட்டுமன்றி அணுவாயுதங்களையும் ஏவுகணைகளையும் நிகராக பெருக்குவதன் மூலம் இராணுவ வலிமையைப் பலப்படுத்தி உலகத்தை அச்சுறுத்தித் தனது ஏகாதிபத்தியக் கனவை எட்ட முயலுகிறது. ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

தமிழரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க முடியுமா? முடியும் என்றால் எப்படி? முடியாது என்றால் ஏன்?

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக ஏதேனும் நல்லது செய்யவேண்டும் என்று நினைத்தால் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் முதலில் சிந்திக்கவேண்டும் என்பதனை காலம் உணர்த்தி நிற்கிறது. தமிழ் மக்களின் சனத்தொகையோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது தமிழ்த் தரப்பில் எழுந்துள்ள அரசியல்க் கட்சிகளின் எண்ணிக்கை அதிகம் என்றே தோன்றுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைச் சொல்லிக் கொண்டு தனித்தனியாக கட்சியமைத்துச் செல்லும் நிலையானது அண்மைக் காலங்களில் அதிகமானதாகவே உள்ளது. ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், சி.வி. விக்னேஸ்வரன் இப்படி இத்தகையோரின் பட்டியலைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஒருவகையில் யோசித்தால் வேட்பாளர்களைக் கட்சிக்குள் இருந்து தெரிவு செய்யாமல் வெளியிலிருந்து கொண்டுவருவது இதற்கெல்லாம் காரணம் கொள்ளத்தக்கதாகத் தோன்றுகிறது. அதாவது நீண்டகாலம் கட்சிக்குள் இருந்து கட்சியின் வளர்ச்சிக்காகச் செயற்பட்டவர்களை வேட்பாளர்களாகக் கொள்ளாமல் சமூகத்தில் பிரபலமானவர்கள் எனக் கருதத்தக்கவர்களை வேட்பாளர்களாகக் கொண்டுவருதல். இச் செயற்பாடானது அத்தகையவர்கள் மூலம் வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக மட்டுமே அமைகிறது. இத்தகைய செயற்பாடுகளே கட்சிக்கு உள்ளும் கட்சிக்கு வெளியிலும் பல்வேறு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. கட்சிக்கு வெளியிலிருந்து கொண்டுவந்து வேட்பாளர்களை நிறுத்துவதனால்தான் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற ஒரு சூழல் இருக்கிறது என்றால், ஏற்கனவே கட்சியில் உள்ளவர்கள் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போயிருக்கின்றது என்ற அர்த்தத்தினைப் புலப்படுத்துவதாகவே கொள்ளவேண்டியிருக்கிறது. இது ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் நிகழ்வதால் கட்சியில் உள்ளவர்களும் சரி கட்சிக்கு வெளியில் இருந்து வந்தவர்களும் சரி மக்களுக்கு நியாயமாக நடந்து கொள்ளவில்லை அல்லது மக்களின் எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்யவில்லை என்ற அர்த்தத்தினையே தமிழ்க் கட்சிகள் காலங்காலமாக வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு காலத்திலும் புதியவர்கள் வேட்பாளர்களாக நிரப்பப்படும் போது முன் கட்சிக்கு நிரப்பப்பட்டவர்கள் கட்சிதொடர்பில் அவதூறுகளை விதைக்கவோ அல்லது கட்சியிலிருந்து வெளியேறிப் புதிய கட்சியினை உருவாக்கவோ முனைப்புக் கொள்கின்றனர். இவர்கள் பின்னாலும் தமிழ் மக்களில் குறித்த தொகையினர் செல்லுகின்ற நிலையில் வாக்குகள் சிதறிப்போகும் நிலைமை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் மக்கள் ஒட்டுமொத்த தமிழர் சார்புநிலைக் கட்சிகள் மீதும் வெறுப்புற்றுக் கொள்ளும் நிலைமையும் ஏற்படுகிறது. இத்தகைய வெறுப்பு நிலையினைக் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் காணக்கூடியதாக இருந்தமை வெளிப்படை. என்றும் இல்லாதவாறு அரசு சார்பான கட்சிகள் பெருமளவு வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலை தொடர்ந்தும் நீடிக்குமானால் தமிழ் மக்களின் வாக்குகளை அரசாங்கம் தமதாக்கிக் கொள்ளும் நிலைமை ஏற்படும் சூழல் கிட்டும் என்பதும் கவனத்துக்குரியது.

இந்நிலையில்தான் அண்மையில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பது தொடர்பில் சிந்தித்து அவர்களுடன் கலந்துரையாடுவதற்காக ஒன்பது கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் ஆகியவர்களே அவர் அழைப்புக்குச் செவிசாய்த்து கலந்து கொண்டிருந்தனர். இதன் மூலம் இவ் ஒன்றுபடும் முயற்சி தோல்வியடைந்ததாகவே கருதப்படுகிறது. ஏன் மற்ற தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பங்குபற்றவில்லை என்பதற்கு அவரவர்கள் தம்மளவில் விளக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் விமர்சனத்துக்கு அப்பால் இப்போதைய அரசியல் சூழலில் தமிழ் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு அவசியமாகவே கருதப்படுகிறது. அதனையே தீம்புனல் பத்திரிகையில் கட்டுரைவாயிலாகவும் ஆசிரியர் தலையங்கம் வாயிலாகவும் நாங்களும் வலியுறுத்தியும் வந்திருக்கின்றோம்- வருகின்றோம்.

உண்மையில் தமிழர் தரப்பு அரசியல் பலமற்றதாகியிருக்கிறது என்பதனை ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். இவ்வாறு பிரிந்து நின்று செயலாற்றுவதனால் அதிக அளவிலான இலாபம் பெறுவது சிங்கள அரசும் அச்சிங்கள அரசு சார்ந்து செயற்படும் தமிழ்க் கட்சிகளும் என்பது தற்போதைய அரசியல் நிலவரம் தந்து நிற்கும் பாடமாகும். இத்தகைய நிலவரத்தினை மாற்றியமைப்பதற்கு புத்திபூர்வமான தந்திரோபாய முன்னகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். அதன் ஒரு அங்கமாகவே தனித்திருக்கும் ஒவ்வொரு கட்சியும் தமிழ் மக்களின் நலன் சார்ந்து ஒன்றிணைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் ஆகிறது. இதற்கான ஒரு முன்னெடுப்பினையே செல்வம் அடைக்கலநாதன் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் இதுவும் மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு, சரிந்திருக்கும் தமது செல்வாக்கினை மேற்கொண்டு வருவதற்கான முயற்சி, தமது எதிர்கால அரசியல் இருப்பினைத் தக்கவைப்பதற்குரிய கையாளுகை என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சிலவேளை அவையும் காரணமாக இருக்கலாம். ஆனால் இது வீண் முயற்சியல்ல, அவசியமான முயற்சி. இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இதய சுத்தியுடன் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படும் பக்குவத்தினைக் கையாள வேண்டும். இதுவும் விக்னேஸ்வரனைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் பேரவை ஒன்றிணைவுபோல ஒன்றுக்கும் ஆகாததாக இருந்துவிடக் கூடாது. ஏனைய கட்சித்தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் சிந்திக்கவேண்டும். ஏற்கனவே நடந்து முடிந்த கசப்பான அனுபவங்களையும் விருப்பு வெறுப்புக்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு ஆரோக்கியமான செயற்பாட்டினை நோக்கி ஒன்றாகச் சேர்ந்து பேசி பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இத்தகைய இணைப்பினைச் செய்வதற்கு மக்களும், பொது அமைப்புக்களும் தங்களின் குரல்களை உயர்த்தவேண்டும். தமிழ் அரசியல் செயற்பாடு என்பது மக்களுக்கானது என்ற மெய்மை இனியாவது புலப்படவேண்டும். இந்நிலையில் தான் இங்கு பிரதானமான கேள்வி எழுகிறது. தமிழரசியல் கட்சிகளை ஒன்றிணைக்க முடியுமா? முடியும் என்றால் எப்படி? முடியாது என்றால் ஏன்? ■

மீண்டும் மக்கள்முன் மாபெரும் நடிகன் தோன்றுகிறான்

✒ தந்திரன்

ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரே ஒரு தேசியப்பட்டியல் ஊடாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வந்து விட்டார். வழமையான தனது இராஜதந்திரத்தைக் கையில் எடுக்க முனைகிறார். ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளர்களும் தங்களுக்குப் பிரச்சினை வருகின்றபோது, தங்களை அரசியல் ரீதியாகத் தக்கவைக்கவேண்டிய தேவை ஏற்படம் போதுதான் தமிழர்களின் பிரச்சினையைக் கையிலெடுப்பார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயம் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று தமிழ்களை நம்ப வைக்க முனைவார்கள். அதே யுக்தியைத்தான் ரணிலும் கையில் எடுத்துள்ளார்.

அதன் அடிப்படையில்தான் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என நீலிக்கண்ணீர் வடிக்கின்றார். ஒருமித்த நாட்டுக்குள் அரசியல் தீர்வு ஒன்றுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்கின்றார். இதன் ஊடாகவே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்ட முடியும் என ஊடகங்களுக்கு நேர்காணலும் வழங்குகின்றார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தீர்க்க கூடிய தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்காது, காலத்தினை இழுத்தடித்து தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் ரணில் அரசாங்கம் ஏமாற்றியிருக்கிறது. புதிய அரசியல் யாப்பு என்ற பெயரில் அதன் உருவாக்கம், திருத்தம் என பல நாடகங்கள் அக்காலத்தில் அரங்கேறியும் இருக்கின்றன. ரணிலின் கபட நாடகம் புரியாமல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இலவு காத்த கிளிகள் போல இருந்து வந்திருக்கிறது. இதனை வாய்விட்டும் பல தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியுமுள்ளனர்.



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இன்றுவரை நல்லாட்சி அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து தமிழர்களை ஏமாற்றி இருக்கிறார்கள் என்ற அவப்பெயரை சுமந்து கொண்டே இருக்கிறார்கள். ரணிலை நம்பி ஏமாந்து விட்டோம் என அவருக்கு மிக நெருக்கமான பாராளுமன்ற உறுப்பினர்கூட தனது ஆற்றாமையை வெளிப்படையாகவே மக்கள் கலந்துரையாடலில் கூறியுமுள்ளார்.

இப்போது, தமிழ்மொழி தொடர்பான சட்ட அமுலாக்கம் உட்பட பல சட்ட மூலங்களில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என ரணில் புதிதாக கண்டுபிடித்தது போல் கூறுகின்றார். நல்லாட்சி அரசாங்கத்தில் ரணிலின் தன்முனைப்புச் செயற்பாடுகள் பங்காளிக்கட்சிகளை சீற்றம் கொள்ள வைத்ததன் விளைவே ஐக்கிய தேசியக்கட்சிக்குள் அக முரண்பாடு ஏற்படுவதற்கும் எதிர்க்கட்சிகள் கதிரையேறுவதற்கும் வழி சமைத்துக் கொடுத்தது. தற்போது எதிர்க்கட்சி நிலையை இழந்து ஒற்றைத் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் ஏற்படுத்தி இருந்தது.

தமிழர்தரப்புக்கு எந்த அரசியல் ரீதியான தீர்வுகளையும் நல்லாட்சி அரசாங்கம் கொடுக்காத போதும் மொட்டுக்கட்சியினதும் பங்காளிக்கட்சியினதும் தீவிரமான இனவாதப் பிரசாரங்களால் தமிழீழம் கொடுத்தது போன்ற பிரமை உருவாக்கப்பட்டிருந்தது. அதன் எதிரொலி ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி இழந்து இரண்டாக உடைந்தது.

தென்னிலங்கை அரசியல் கொதிநிலையில் உள்ள இன்றைய நிலையில் தமிழர்களுக்குத் தீர்வுகள் கொடுக்கப்பட வேண்டும் என்று ரணில் கூறிக்கொள்வது எதன்பாற்பட்டது? என விளங்கவில்லை. பிரச்சினைகள் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் பொதுவானதாகவே உள்ளது என்பதனை அனைத்துத் தரப்புக்களும் புரிந்து கொண்டுள்ள நிலையில் ரணில் அதனைச் சாதகமாக்கிக் கொண்டு தனது வழமையான தந்திரத்தினை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார் என்பது புல னாகிறது. இவரது ஊடகப் பிரசாரங்கள் அத்தகைய ஏற்பாட்டுக்குரியவை என்பதனை அவரை அறிந்தவர்கள் அனைவரும் விளங்கிக் கொள்வார்கள். இது இன்னுமொரு நல்லாட்சி முறைக்கு இட்டுச் செல்லக் கூடியதா? என்பதனையே சிங்கள மக்கள் நோக்கத் தொடங்கியுள்ளனர். எந்த ஆட்சி வந்தாலும் நாட்டுமக்களுக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை என்பது தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் நன்கு அறிவார்கள். இருந்தாலும் ரணில் தனது தந்திரச் செயற்பாட்டினை விடுவதாக இல்லை. இன்றைய நிலையினைப் பயன்படுத்தியாவது தான் விட்டதனைப் பிடித்துவிடலாம் என்று கனவு காண்கிறார் என்பது தெளிவு. இந்தமுறை பாராளுமன்றம் வருவதற்கு தேசியப்பட்டியலாவது கிடைத்தது. அடுத்தமுறை...

■

● கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப் பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இது தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் தொடக்கி வைக்கிறது.

- ஆசிரியர்

தொடரும் அநீதி நீதி மறுப்பும் நீதி கோரலும்

“நீதி வழங்காததையும் விட மோசமானது, நீதியைப் பற்றிய பசப்பு வார்த்தைகளாகும்”

(அறிமுகம்)

01

தென்னிலங்கையிலிருந்து வடக்கு நோக்கி வந்த மலையக மக்களின் தொடரும் பிரச்சினைகள், அவர்களுடைய சமூக பொருளாதார நிலைமைகள் மற்றும் அவர்கள் எதிர் கொள்கின்ற சவால்களைக் குறித்த உரையாடல்கள் அண்மைக் காலத்தில் சற்று உரத்த குரலில் கேட்க ஆரம் பித்துள்ளன. இது கொஞ்சம் ஆறுதலான விசயம். ஆனால் நிறைவடையக் கூடியதல்ல. ஏனென்றால் இன்னும் கூட அவர்களும் அவர்களுடைய பிரச்சினைகளும் அவர்களுடைய சமூக பொருளாதார நிலைமை, பண்பாடு போன்றவையும் மைய உரையாடலுக்கு உட்படுத்தப்படவில்லை. இப்போது நடக்கும் உரையாடல்கள் கூட மிகச் சிறியதொரு வட்டத்தினராலேயே மேற் கொள்ளப்படுகிறது. மைய உரையாடற்பரப்பிற்கு இந்த விசயம் வருவதற்கு இன்னும் நீண்ட நெடும் பயணம் செய்ய வேண்டும். அது சாதாரணமான தல்ல. கடினமான பயணம்.

ஏனென்றால் மலையக மக்களை யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் நோக்குகின்ற விதம் அப்படியானது. அவர்களைத் தங்களுக்கு அப்பாலான - பிறத்தியாரா கவே நோக்கி வருகிறது. அதாவது தங்களையும் விட குறைவானோர் - கீழானோர் என்ற நோக்கில். இதில் எல்லாச்சாதி, சமூகப் பிரிவினரும் ஒரே மாதிரியே செயற் படுகின்றனர். அதாவது தாங்கள் வேறு, அவர்கள் வேறு என்ற விதமாக.

இந்த வேற்றுமை நிலையை அகற்றுவதற்கு இந்த உரையாடல்கள் நல்லதொரு பங்கை ஆற்றும் என்று நம்பலாம். இங்கே இதைக்குறித்துப் பேச முற்படும்போது இன்றைய சூழலில் இது அவசியமற்ற ஒன்று எனப் பலரும் வாதிடக் கூடும். இதற்கான காரணமாக அவர் கள் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு இந்த உரை யாடல்களும் இந்த விசயத்தை முன்னெடுத்துப் பேசுவ தும் வாய்ப்பளிப்பதாக அமைந்து விடும். தமிழ்த்தேசிய வாதத்தையும் தமிழ்த் தரப்பையும் இது பலவீனப்படுத் தக் கூடும் என்றெல்லாம் கூறக்கூடும். ஆனால் இந்தக் காரணங்கள் ஏற்கக் கூடியவையல்ல. ஏனெனில் இந்த மக்களோ இந்த விசயத்தைப் பேசுகின்றவர்களோ ஒரு போதுமே அப்படியான எதிர்நிலை மனப்பாங்கோடும் சிந்தனையோடும் இதை முன்னெடுக்கவில்லை.

மாறாக, நீண்டகாலமாகவே இந்தப் பிரச்சினை பேசப் படாது தந்திரமாகக் கடந்து செல்லப்படுகிறது. தொடர்ந்து புறக்கணிப்பும் ஒடுக்குமுறையும் நிகழ்த்தப்படுகிறது. பண்பாடு, பொருளாதாரம், சமூக நிலை போன்றவற்றில் ஒடுக்கப்படுவது, சுரண்டப்படுவது மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் இவர்கள் சுரண்டப்படுகிறார்கள். இதை நேரடியாகவே சொல்வதாக இருந்தால் சமூக பொருளாதார ரீதியில் கூலிகளாக நடத்தப்படுவது மட்டுமல்ல அரசியற் கூலிகளா கவும் இவர்கள் நடத்தப்படுகிறார்கள். இப்படிக் கூலிகளாக நடத்தப்படுவதும் சுரண்டப்படுவதும் எந்த வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியது? இதற்கு என்ன நியாயமுண்டு? இதை மாற்றியமைப்பதற்கு யார் தயார்? அந்தத் தரப்புகளை யாராவது அடையாளப்படுத்த முடியுமா?

இதற்கு யாரும் பொருத்தமான பதிலைத் தரப்போவ தில்லை. எனவேதான் இதைப் பொது உரையாடற் பரப் பிற்கு எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

02

இந்த மக்கள் 1958 இலிருந்து வடக்கே வந்தவர்கள். முதலாவது வருகை 1958 இனவன்முறையினால் நிகழ்ந்தது. அடுத்த பெரிய வருகைகள் 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் நடந்த இன வன்முறையினால் ஏற்பட்டவை. இந்த மூன்று பெரு வருகைகளிலும் ஏறக்குறைய மூன்று லட்சம் மக்கள் வரையில் கட்டம் கட்டமாக வடக் குக்கு வந்தனர். வடக்குக்கு என்றால் கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு.

இந்தவன்முறைகளின்போதெல்லாம் தெற்கிலிருந்து (மேற்கு மற்றும் மத்திய, வடமத்திய, ஊவா மாகாணங்கள் உள்ளடங்கலாக) வடக்கு நோக்கி வந்த ஏனைய தமிழர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டனர். அல்லது உறவினர்களின் இடங்களுக்குச் சென்றனர். பெரும்பாலும் யாழ்ப்பா ணத்துக்குச் சென்று விட்டனர். இதற்கு நல்லதொரு உதாரணம், 1977 வன்முறை யினால் அகதியான தமிழர்களைக் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு ஏற்றி வந்த லங்கா ராணி என்ற கப்பலை மையமாக வைத்து எழுதப்பட்ட அருளரின் நாவல். நாவலின் பெயரும் “லங்கா ராணி” யே.

ஆனால், மலையக மக்கள் என்ற இந்திய வம்சா வழியினராக இருந்தவர்கள் அப்படிச் செல்ல முடிய வில்லை. அவர்களுக்கு ஏற்கனவே வடக்கில் சொந்த ஊர்களிருக்கவில்லை. உறவினர்களும் இருக்கவில்லை. இதனால் கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் இறக்கப்பட்டனர். சிறிய எண்ணிக்கையானோர் முல் லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு அழைத்துச் செல் லப்பட்டனர். இவர்க ளெல்லாம் பின்னர் இந்த இடங்களி லேயே குடியமர்த்தப்பட்டனர். சிலர் தாமாகவே அங் கங்கே தமக்கு வசதிப்பட்ட இடங்களில் குடியேறினர். வேறு வழி இருக்கவில்லை.

இந்தக் குடியமர்த்தலானது அநேகமாகச் சட்டபூர்வ மாக நடக்கவில்லை. ஆகவே கிடைத்த இடத்தில் குந்து வோம் என்று குடியேறினார்கள். ஒரு சிறிய தரப்பின ருக்கே காணிகள் கிடைத்தன. ஏனையோர் அரச காணிக ளைப் பிடித்துக் குடியேறினர். அதற்கே ஏராளம் கெடுபிடி களை நிர்வாக ரீதியில் சந்தித்தனர்.

1958 இல் வந்த முதலாவது வருகையினருக்கு பரந் தன் - முல்லைத்தீவு வீதியிலுள்ள தருமபுரம் என்ற இடத் தில் நிலம் வழங்கப்பட்டது. இதில் 680 குடும்பங்கள் குடியேறக் கூடியதாக இருந்தது. அப்பொழுது அது காட்டுப்பகுதி. காடென்றால் பெருங்காடு. யானையும் கரடியும் பாம்பும் உள்ள காடு. அதை இவர்கள் வெட்டித் துப்புரவு செய்தே குடியேறினார்கள். தண்ணீரை எடுப்பதே அப்போது பெரிய பிரச்சினையாக இருந்தது. சுற்றயல்க ளிலும் குடியிருப்புகளோ கிராமங்களோ இருக்கவில்லை. ஆகவே தனித்தே எல்லா நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வேறுவழியில்லை. எந்த நிலையை யும் சமாளித்தே - எதிர்கொண்டே ஆக வேண்டும் என்ற நிலை தொடர்ந்தது. ஆகவே எல்லாத் துயரங்கள், அவலங் களையும் சமாளித்துக் கொண்டே குடியேறினார்கள்.

பிறகு 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் வந்தவர்கள் விசுவமடு - ரெட்பானா, உழவனூர், கிளிநொச்சி தெற் கில் இப்போதுள்ள தொண்டமான் நகர், செல்வாநகர், மலையாளபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், அம்பாள்கு ளம், உதயநகர், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், மணியங்குளம், ஆனைவிழுந்தான், ஜெயபுரம், இயக்கச்சி போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். இதைப்போல வவுனியாவில் கன்னாட்டி, செட்டிகுளம் போன்ற கிரா மங்களிலும் நெடுங்கேணியில் டொலர் பாம், கென்பாம், நாவலர் பண்ணை உள்ளிட்ட பகுதிக ளிலும் முல்லைத்தீவில் மன்னாகண் டல், முத்தையன்கட்டு போன்ற இடங் களிலும் குடியமர்த்தல் செய்யப்பட்ட னர். அதிகமாக தாமாகவே காடுகளை வெட்டிக் குடி யேறினார்கள் என்றே சொல்ல வேண்டும்.

இதைத் தவிர ஒரு தொகுதியினர் வேலை வாய்ப்பு உள்ளிட்ட பிற தேவை களைக் கருதி வயல் நிலங்களை அண்டிய பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர். இந்த வயல் நிலங்கள் அனைத்தும் யாழ்ப் பாணத்தவர்களுக்கும் யாழ்ப்பாணத் திலிருந்து கிளிநொச்சி, நெடுங்கேணி, வவுனியா, கன்னாட்டி போன்ற இடங் களிலும் ஏற்கனவே அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் மூலமாகக் குடியேறியோருக்கும் சொந்தமா னவை. ஆகவே இங்கே இவர்கள் கூலிகளாகவே குடியேற்றப் பட்டனர். இன்னும் இவர்களுடைய தலைமுறைகள் இங்கு காணியற்ற நிலையிலேயே உள்ளனர்.

ஏனையோரும் கூலிகளாகவே இங்கே தங்களை ஒழுங் கமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. தாங்களாக வெட்டித் துப்புரவு செய்த காணிகளில் குடியிருந்தாலும் தொழிலுக்காக இவர்கள் நிலக்கிழார்களையே தஞ்சம டைய வேண்டியிருந்தது. ஏனென்றால் இவர்களுடைய குடியேற்றமானது அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட

> **“பண்பாடு, பொருளாதாரம், சமூக நிலை போன்றவற்றில் ஒடுக்குப்படுவது, சுரண்டப்படுவது மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் இவர்கள் சுரண்டப்படுகிறார்கள். இதை நேரடியாகவே சொல்வதாக இருந்தால் சமூக பொருளாதார ரீதியில் கூலிகளாக நடத்தப்படுவது மட்டுமல்ல அரசியற் கூலி களாக வும் இவர்கள் நடத்தப்படுகிறார்கள். இப்படி கூலிகளாக நடத்தப்படுவதும் சுரண்டப்படுவ தும் எந்த வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியது? இதற்கு என்ன நியாய முண்டு? இதை மாற்றியமைப்பதற்கு யார் தயார்? அந்தத் தரப்புகளை யாராவது அடையாளப்படுத்த முடியுமா?”**

முறையில் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குரிய வளங் கள் வழங்கப்படவுமில்லை. அரசாங்கத்தினால் திட்டமி டப்பட்ட குடியேற்றங்கள் என்றால் அதற்கு தொழில்வாய்ப்பு உட்பட அடிப்படைக் கட்டுமானங்கள் அத்தனையும் இருக்கும். குறிப்பாக நீர்ப்பாசனம், வீட்டு வசதி, பாசன நிலம் (வயல்), சிறு தானியப் பயிர்ச்செய்கைக்கும் குடியி ருப்புக்குமான மேட்டு நிலம், பாடசாலைகள், பஸ் போக் குவரத்து, கமநல சேவைகள் நிலையம், வீதி மற்றும் வடி காலமைப்பு வசதிகள், விளையாட்டு மைதானம், மருத்துவ மனை, பொதுச் சந்தை என அடிப்படை வசதிகள் இருக் கும். இதைப் பெற்றுக் குடியேறியவர்கள் யாழ்ப்பாணத் தவர்கள். இவர்கள் தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களும் மாத கல், வட்டுக்கோட்டை, பளை, கோப்பாய், இடைக்காடு, பருத்தித்துறை, தென்மராட்சி, காரைநகர் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாகும்.

மலையக மக்கள் அங்கீகரிக்கப்படாத குடியேற்றவாசி கள் என்பதால் இவர்கள் சுயாதீனமாகக் காடுகளை வெட் டிக் குடியிருப்புகளை அமைத்ததால் இந்த வசதிகள் எது வும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் இவர்கள் இந்தப் பிரதேசங்களில் - காடுகளின் மத்தியில் - சிறிய குடிசைகளை அமைத்துக் கொண்டு குடியிருந்தனர். தண்ணீருக்கு மிக மிகச் சிரமப்பட்டனர். இவர்களுடைய பிரதேசம் நீர்ப்பாசனத்துக்கு வெளியே - மேட்டுப்பகுதியில் இருந்ததால் தண்ணீரைக் காண்பதே அபூர்வமாக இருந் தது. இவ்வளவுக்கும் இவர்களே இந்த மாவட்டங்களில் உள்ள கிணறுகளை கடந்த ஐம்பது ஆண்டுகளாத் தோண்டியவர்கள்.

ஆனால் தங்களுக்கு ஒரு கிணறு இல்லாத நிலையில் வாழ்ந்தனர். பின்னர் மெல்ல மெல்ல தங்கள் காணிகளி லேயே கிணறுகளைத் தோண்டினாலும் இந்தக் கிணறு கள் மண் கிணறுகளாகவே இருந்தன. இந்த மண் கிணறு கள் ஆபத்தானவை. ஆண்டுதோறும் இந்தக் கிணறுக ளில் தவறி விழுவோரின் தொகை கூடிக் கொண்டேயிருந் தது. நீரும் சுத்தமானதில்லை. வேறு வழியின்றி இவற்றையே பயன்படுத்த வேண்டியிருந்தது. இதைப்போல வயல்களில் வேலை செய்வோரின் வீடுகள் வருடத்தின் பெரும்பாலான நாட்களிலும் பசியிலும் பட்டினியிலுமே வெந்தது. மாரி மழை வெள்ளத்தில் மூழ்கியது. பாம்புகளும் பன்றிகளும் யானைகளும் விரட்டியது. ஆனாலும் வேறுகதியில்லை. இதற்குள் தான் வாழ வேண்டும் என்ற விதி. மலையகத்தில் எப்படிக் கொத்தடிமை நிலை இருந்ததோ அதை ஒத்த - அதையும் விட மோசமான நிலையே இங்கே நிலவியது. அங்கே தொழிற்சங்கங்களாவது இருந்து ஏதோ சாட்டுக் காவது குரல் கொடுத்தன. இங்கே குரலற்ற மனிதர்களா கவே கிடந்துழல வேண்டியதாயிற்று.

(தொடரும்)

ஜமீல்

“ஆகக் குறைந்த பட்சம் ஒரு பொழுதை ஒப்பேற்றுவதென்பதே பெரும் போராட்டமாக இருக்கும் போது இவைகளைத் தாண்டி இது எங்கணம் அவளுக்கு சாத்தியமாகுமோ? கடவுள்தான் கருணை காட்ட வேண்டுமென பிரார்த்திக்கி றேன் அவளது அம்மா இப் போதும் சந்தேகத்தின் பேரில் இலங்கைப் படைகளால் பிடித்துச் சென்று இதுவரைக்கும் திரும்பி வராமல் போன தந்தைக்காக சுலோகங்களை ஏந்தி யபடி முச்சந்திகளில் நின்று போராடத் தவறவில்லை.”

திராய் விற்கும் சிறுமி

நிலவும் கும்மிருட்டினை மின்கம்ப விளக்குகள் கொட்டும் பனியிலும் கொடுகி விறைத் தபடி கண்கள் விழித்து விடிய விடிய ஆழ்ந்து வாசித்துக் கொண்டிருக்கின்றன. புகை கக்கியபடி விரைந்து செல் லும் வாகனங்களினதும் மாந்தர்களினதும் நெரிசலு மற்று பேரமைதியுடன் ராட்சத சரப்பமென ஊர்ந்து செல்கிறது ஊரை ஊடறுத்துச் செல்லும் பிரதான தார்ச் சாலை. சுபகுத் தொழுகை முடிந்த கையோடு உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க தினமும் தார்ச்சாலை வழி யாக ஊர் எல்லைவரை வியர்வை பூத்து வழிய வழிய வேகமாக நடந்து செல்வேன். சில சமயம் ஊர் எல்லை யினையும் தாண்டி மணியோசை ஒலிக்கும் அயல் கிராமத்திலிருக்கும் மதுச்சாலையினையும் கடந்து சென்று திரும்பி வருவேன்.

தார்ச்சாலை சுவரினில் வரையப்பட்டிருக்கும் பிரசித் தமான நிறுவனங்களின் விளம்பரங்கள் கண்களை பறித் தன. அதனை ரசித்தபடி வேகமாக நடந்து செல்கிறேன். உக்கிரமாகப் போர் மூண்ட காலங்களில் அதே சுவர் களில் வீரச்சாவடைந்த போராளிகளின் கண்ணீர் அஞ் சலிகளின் போஸ்ற்றர்களும் “திலீபா ஈழம் மலரும் அதில் உன் நினைவுகள் மலரும்” என்ற உணர்வெழுச்சி வாசகங் களும் என் நினைவுகளில் மீள மீள வந்து வந்து போனது. தெருநாய்களின் கெடுபிடிகளும் சில்லுறிகளின் ஓயாத இரைச்சலும் என்னை இடைக்கிடை பயமுறுத்தும்.

நெஞ்சு பதைபதைத்து ஈரல் கருகும். அதிலும் படை முகாமிட்டிருக்கும் நாற்சந்தி பயங்கரம் சூழ்ந்தாகவே இருக்கும் அவ் விடத்தில் யுத்த காலங்களில் அனேக கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தப் பீதிகளை யெல்லாம் கடந்து தினமும் செல்வேன். இதனை எனது வழக்கமாகவும் கொண்டிருந்தேன்.

செல்லும் வழியில் எரிபொருள் நிரப்பும் நிலையத் தில் பார்ப்பதற்கு கண்கள் எதுவுமின்றி தொலைக்காட்சி சும்மா ஓடிக்கொண்டிருக்கும் . கமறாக்கள் பொருத்தப் பட்டிருப்பதனால் அதில் பணி புரிபவர்கள் ஆழ்ந்து துயில்வார்கள் இடைக்கிடை சில வாகனங்கள் வந்து அவர்களை அரட்டி எழுப்பி பெற்றோல் நிரப்பிச் செல் லும். சுடச்சுட பாலப்பம் சாப்பிடவும் மணக்க மணக்க காச்சிய பசுப்பால் குடிக்கவும் நேரகாலத்துடன் தொழி லுக்குச் செல்லும் மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகளின தும் இதர பயணிகளினதும் படையெடுப்பால் தேநீர்க் கடை நிரம்பி வழியும் கடையிலிருந்து காற்றிடை பரவி வந்து மூக்கைத் துளைக்கும் ரஜனி பீடியின் வாசனை என்னையும் ஒரு தம்முக்கு அழைக்கும் இருந்தும் மனதை கட்டுப்படுத்தியவனாக குறித்த எல்லைவரை சென்று திரும்பி வருவேன். அவ்வாறு திரும்பி வரும்போது எனக்கும் சாயம் அதிகமிட்டு ஆவி பறக்க ஒரு தூக்க லான டீ அருந்த மனம் கிடந்து பதறும். இருந்தும் நடப்பதன்பாடும் வெளியேறிய வியர்வைத் துளிகளின் ஈரமும் எதுவிதப் பலனுமின்றி தூர்ந்து விடும் என்பதற் காக மனதை மீளவும் கட்டுப்படுத்தி கொள்வேன்.

சில நேரங்களில் தெரிந்தவர்கள் பாலப்பம் சாப்பிட அன்பின் நிமித்தம் கூப்பிட்டு மாய்வார்கள். நான் அவர் களின் அழைப்பை மறுத்து நேரடியாக வீட்டுக்கு வந்து விடுவேன். அவர்கள் என்னை என்ன நினைத்திருப்பார் களோ என்ற கேள்விகள் என்னை உறுத்திக்கொண்டே இருக்கும்.

கண் விழிக்காத ஒரு பூனைக் குட்டியைப்போல் கொடுகிச் சுறுண்டு படுக்கிறது அதிகாலை சூரியன் நெட்டி முறித்தெழ இன்னும் ஒரு மணித்தியாலமே மீதமிருக்கிறது. மின் விசிறிகளின் மெல்லிய சப்தத்தை தவிர வேறெந்த அரவமுமின்றி அமைதியாக இருந்தது வீடு. பூனை வளர்ப்பதனால் எலிகளின் அட்டகாசமோ கரப்பான் பூச்சிகளின் தொல்லைகளோ இல்லை. மனை வியும் சுபஹ் தொழுதுவிட்டு ஆழ்ந்து உறங்குகிறாள் அவளை அரட்டி எழுப்பி தேநீர் வைத்துத் தாருங்கள் என்று சொல்வது அவ்வளவு நல்லதாகப் படவில்லை. பிறரின் தூக்கத்தைக் கலைப்பதனை பாவமாக கருதுகி றேன். விடுமுறை தினம் என்பதனால் மகளையும் எழுப் பாமல் அப்படியே விட்டு விட்டு நானும் நடந்த அசதி யில் கட்டிலில் குப்புற விழுந்துவிடுகிறேன். மகள் எழும்பி பாடங்களுக்கு செல்ல அழைக்கும் நேரம் நெருங்குவதற்குள் ஒரு குட்டித் தூக்கம் போடலா மென்று கண்களை மூடுகிறேன். அத்தருணம் வீட்டு எல்லைக் கதவில் யாரோ சரசரவென கல்லெறிவது போன்று பெரும் சப்தம் கேட்டது. உடன் திடுக்கிட்டு எழுந்த நான் ஒருவாறு சுதாகரித்து பதட்டம் தணிந்த பின்னராக எழுந்து வந்து மெதுவாகக் கதவு இடுக்கினூ டாக கண்களை கசக்கி பார்வையினை மேய விட்டேன். பத்து அல்லது பன்னிரெண்டு வயது நிரம்பிய சிறுமி ஒருத்தி கையில் ஈரம் உலராத திராய் கத்தைகளும் பையில் ஒட்டிக் கிழங்குமாக வைத்திருந்தாள்.

உடன் கதவைத் திறந்து வெளியில் வந்து பார்த்தேன் அவள் படுவான் கரையிலிருந்து வந்திருப்பதை அவளது செருப்புகளற்ற பிஞ்சுப் பாதங்களில் அப்பியிருக்கும் வயற் காடுகளினதும் குளம் குட்டைகளினதும் சேறும் சகதியும் காட்டிக் கொடுத்தன. அவள் செய்வதறியாது பிதுங்கி நின்றாள். அவளது நாவற்பழக் கண்கள் ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகளை முன்வைத்துப் பேசி யும் வரைந்தும் காட்டியது. புழுப்பூச்சிகளின் ஊடாட் டமற்று வெறிச்சோடிக் கிடந்தது, எனது வீட்டை உரசிக் கொண்டு செல்லும் சாலை. இரவு பெய்த பனியின் ஈரம் இன்னும் உலரவில்லை. காலைப் பரிதியின் வெயில் இழை கள் மெதுமெதுவாக துளிர்த்து படர்ந்தது. அவை சாலை மருங்கில் அடர்ந்து வளர்ந்து நிற்கும் புல்லின் நுனி மீது தங்கியிருக்கும் பனித்துளிகளினுள் அடங்கி வைர மணிக ளென கதகதக்கிறது.

பறவைகள் கூடுகளை விட்டு இரைதேடி விரைந்து செல்கின்றன. நெசவு ஆலைக்குள் சேணியர்கள் நெய்யும் சக்கடி புக்கடிச் சப்தம் காதுகளில் இசையாக வந்து தேன் வார்க்கிறது. வானொலியில் தலைப்புச் செய்திகள் போய்க்கொண்டிருக்கிறது. அதனையும் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். தூரத்தில் கட்டாக்காலி நாய்கள் இரண்டு நடு வீதியில் அம்மணமாய் நின்று புணர்ந்து உடல் பசியை தீர்த்துக்கொள்வது மங்கலாக தெரிகிறது அது பூட்டிய பிறகு சிறுவர்கள் ஒன்று கூடி சாம்பல் இட்டு வேடிக்கை பார்த்து பின் கல்லெறிந்து துரத்தலாம். சிறுமியின் வாரி விடப்படாத நீண்ட பறட்டை முடி உரத்து வீசும் காற்றுக்குப் பறக்காமல் சப்பென்று கிடக்கிறது கசங்கிய குட்டைச் சட்டையும் பாவாடையும் அணிந்திருந்தாள் தாவணி அணிய வேண்டிய பருவம். அவளுடையது குண்டுமணியளவு நெகிளித் தோடின்றி அவளது காதுகள் தூர்ந்து போயிருந்தன. ஒரு துளிப் புன்னகையேனும் சொரியாமல் சிறுமியின் முகம் இன்னும் மலரவில்லை. எனது மகளின் வயதை ஒத்ததாக இருக்கும் அவளுக்கும் நிறையக் கனவுகளும் சேட்டைகளும் இருந்திருக்கக் கூடும். பட்டாம் பூச்சிக ளோடு அவளும் ஒரு பட்டாம்பூச்சியாக இந்த உலகை ஒரு முறையாவது வலம்வர நினைத்திருக்கலாம். பல வர்ணப் பலூன்களை ஊதிக் காற்றில் பறக்கவிட்டு அதனோடு அவளும் பரவசமாகப் பறக்கத் திட்டம் தீட்டி இருக்கலாம். பிராக்குகளினூடே பயணித்து ஊரின் சந்து பொந்தெல்லாம் பூந்து சக வகுப்பு நண்பர் நண்பிகளு டன் கூடி மகிழ்ந்து விளையாடித் திழைத்திருக்கலாம். மிக இலகுவில் சாத்தியமாகும் இப்படியான சின்னச் சின்ன மகிழ்ச்சிகளையும் தியாகம் செய்து அம்மாவின் பாடுகளில் சிறு பகுதியையேனும் தணிப்பதற்காக அன்றி ஒரு புத்தகப்பையை, ஒரு நிறப்பெட்டியை வாங்குவதற்காக அவளுக்கு தெரியாமல் இந்தத் திராய் கத்தைகளை தன்னந் தனியாக இன்னேரம் இவள் ஏந்தி வந்திருக்கக் கூடும். அவளை உடன் வீட்டுக்குள் அழைத்து அணுகி நலம் விசாரித்தேன்.

அதற்கு அவள் தான் வயிற்றில் இருக்கும் போது அப்பாவை ராணுவம் விசாரணைக்காக அழைத்துச் சென்றதாக அம்மா இடைக் கிடை சொல்லி அழுது புலம்புவதாக மன முருகிச் சொன்னாள் இப்போது “நான் தரம் ஐந்து படிக்கிறேன் மற்ற மாணவர்களைப் போன்று நான் தவறாது பாடசாலை செல்வதில்லை. இடைக்கிடை நின்று விடுவேன். நான் விரும்பி நிற்பதில்லை ஆடை மற்றும் இதர அத்தியாவசிய கற்றல் உப கரணங்கள் கிடைக்காமை” இப்படி அடுக்கிக்கொண்டு போனாள். அதற்கு குடும்பத்தில் நிலவும் கஸ்ரமான சூழல்தான் பிரதான காரணம் என்று மனம் வருந்திச் சொன்னாள். இப்போதும் அம்மா வீட்டுக்கு வீடு சென்று பத்துப் பாத்திரம் கழுவித்தான் தனது வயிற்றை கழுவுவதாகச் சொல்கையில் என் கண்களும் பனித்தன. சிறுமி திராய் வாங்கும்படி இரஞ்சினாள். அந்தத் திராய்கள் குளக் கரைகளில், வயற்காடுகளில் பிடுங்கி இருப்பதனால் அதனை உடன் வாங்க மனம் வரவில்லை. காரணம் அந்தத் திராய்கள் உயிருடன் நின்ற போது அதன் மீது கால்நடை கள் நடந்து மிதித்து சிறுநீர் பெய்து சாணி இட்டிருக்க லாம். அத்தோடு மனிதனும் சில சமயம் காலைக் கடன்க ளில் ஒன்றை அதன் மீது செய் திருக்கலாம். இப்படியான காரணங்களுக்காக வாங்கு வதைத் தவிர்த்து விட்டேன்.

எனக்கு ஒட்டிக் கிழங்கு சாப்பிடுவதில் எப்போதும் அலாதிப் பிரியமுண்டு சிறு பராயங்களில் உம்மா வாப் பாவிற்கு தெரியாமல் ஓதப்பள்ளிக்கு களவடித்து வகுப்பு நண்பர்களுடன் சேர்ந்து நவியான்குளம் மேட்டு வட்டை வயற்காடுகளெனச் சென்று கிழங்கு பிடுங்கி வந்து அவித்து திண்டு சேறு நெடி வாசமறிந்து அதற் காக வாப்பாவிடம் அடி வாங்கிய தழும்புகளின் ஞாப கங்கள் எனக்குள் அவிந்து மணத்தன. அந்த இனிமை யான காலங்களை இப்போது நினைத்தாலும் மனசின் வெளிகளில் பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறக் கின்றன.

உடன் அவளிடம் இருந்த ஒட்டிக் கிழங்குகளை அப்படியே மொத்தமாக அவள் கேட்ட காசுக்கு மேல திகமாகவும் கொடுத்து வாங்கினேன். அத்துடன் மகள் ஓரிரு தடவைகள் அணிந்து இறுக்கமாய்போன சில ஆடைகளையும் கொடுத்து அனுப்பினேன். அவள் என் னைக் கும்பிட்டு புன்னகை சொரிந்த முகத்துடன் அடுத்த வீட்டிற்கு செல்கிறாள். எப்படியாவது திராய்க் கத்தைகளை விற்றால்தான் நினைத்து வந்த காரியம் கை கூடி வரலாம் போலும். சேறு நெடிபோக நன்றாக கழுவி அவித்து உரித்தெடுத்தால் தெரியும் வெண்மை யான நிறம்போல் சிறுமியின் மனசும் இருந்தது. அவளுக்கும் மிடுக்கான ஆடைகளையும் ஆபரணங்க ளையும் அணிவித்தால் அவளும் எனது மகளைப்போல் குட்டித் தேவதைதான்.

இருந்தும் அவளது குடும்ப நிலைமையானது மிகுந்த அந்தரிப்புக்குள்ளானதாகும். ஆகக் குறைந்த பட்சம் ஒரு பொழுதை ஒப்பேற்றுவதென்பதே பெரும் போராட்ட மாக இருக்கும் போது இவைகளைத் தாண்டி இது எங்க ணம் அவளுக்கு சாத்தியமாகுமோ? கடவுள்தான் கருணை காட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறேன். அவளது அம்மா இப்போதும் சந்தேகத்தின் பேரில் இலங்கைப் படைக ளால் பிடித்துச் சென்று இது வரைக்கும் திரும்பி வராமல் போன தந்தைக்காக சுலோகங்களை ஏந்தியபடி முச்சந்தி களில் நின்று போராடத் தவறவில்லை . மூன்று தசாப்த போராட்டத்தின் வடுக்கள் போர் முடிந்து இத்தனை ஆண்டுகள் கடந்தும் இன்னும் நமது மனசை கலங்கடிக்கச் செய்கின்றதுதான். பாடத்திற்குப் புறப்பட்டுச்சென்ற மகளை அழைத்துவரச் சென்று கொண்டிருக்கிறேன். செல் லும் வழி நெடுகிலும் இறுதியாய் அவள் உதிர்த்திய புன்சிரிப்பு என்னை ஆற்றுப்படுத்துகிறது. ஆயினும் தனித்த தொரு சூழலில் நாதியற்றுச் சென்று இரஞ்சும் இந்த பட்டாம் பூச்சியின் சிறகுகளை குறி விறைத்த யாரேனும் ஒரு காட்டுமிராண்டி ரத்தம் சொட்டச் சொட்ட சிதைத்து விடலாம் என்பது பற்றிய பேரச்ச மும் கவலையும்தான் என் கண் முன் விரியும் அதே கணம் இன்னும் விற்கப்படாமல் அவள் கைகளிலிருந்து வாடி உதிரும் திராய் கத்தைகளென உதிர்கிறது என் மனது. ■

மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமா?

சி.அ.ஜோதிலிங்கம்

தமிழ் அரசியல் சூழலில் மாகாணசபை முறை மீண்டும் ஒரு பேசு பொருளாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, மாகாண அரசுக்குட்பட்ட பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றம் செய்தல் என்ற நடவடிக்கை மூலம் மத்திய அரசினுடைய அதிகாரத்துக்கு உட்படுத்துதல் மற்றும் வடபகுதியில் உள்ள குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரில் உள்ள பொது வைத்தியசாலைகளை மத்திய அரசினுடைய அதிகாரத்துக்குள் உட்படுத்திக் கொள்ள முனைப்புக் கொள்ளுதல். இரண்டாவது, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கும் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் இந்தியாத் தரப்பு வலியுறுத்தியிருந்தமை.

மாகாணசபை முறை என்பது 13 ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்று. அவ் ஒப்பந்தத்தில் உள்ள விடயத்தினை விடவும் அதில் இருந்த இணைப்புக் கடிதத்தில் உள்ள விடயங்கள்தான் முக்கியமானவை. அதில் முக்கியமானது இந்தியாவுக்கு எதிரான சர்வதேச சக்திகள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதனை அனுமதிக்கக் கூடாது என்பதாகும்.

அமெரிக்க அணிக்கும் சோவியத்யூனியன் அணிக்கும் இடையில் பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அமெரிக்காவுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்திருந்தோடு, இலங்கையின் பல பகுதிகளை அமெரிக்காவின் ஆளுகைக்கு வழங்கி வந்திருந்தது. குறிப்பாக வொய்ஸ் ஒவ் அமெரிக்கா என்ற வானொலி நிலையத்தினை இலங்கையில் அமைப்பதற்கான அனுமதியினை வழங்கியிருந்தமை. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்ததனால் இந்திய மத்திய அரசு இலங்கையினைக் கையாளுவதற்குரிய தந்திரோபாய நகர்வினை முன்னெடுத்திருந்தது. குறிப்பாக இந்திராகாந்தி இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினையைச் சாதகமாக்கிக் கொண்டு ஈழப்போராளிகளை வளர்ப்பதற்குரிய ஆயுதப் பயிற்சிகளையும் பின்தள உதவிகளையும் செய்து கொடுத்தமை வெளிப்படையான விடயமாகும். இந்திராகாந்தியின் மறைவுக்குப் பின்னர் ராஜீவ்காந்தி இலங்கையைக் கையாள்வதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் தமிழர் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக இந்திய நலன்களுக்காக உருவாக்கப் பட்ட ஒன்றாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் தான் 13 ஆவது திருத்தச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தில் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக் குட்பட்ட அரசியற்தீர்வே சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. இத்தீர்வில் முன்வைக்கப்பட்ட அதிகாரங்கள் போதுமானவை இல்லை என்று, அன்று தமிழர் மத்தியில் செல்வாக்கு நிலையில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி குறிப்பிட்டிருந்ததோடு மட்டுமல்லாது இத்திருத்தத்தில் உள்ள விடயங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கப் போதுமானவை அல்ல அதனால் தமிழ் மக்களுக்கு உயர்ந்த அதிகாரத்தை வழங்கக்கூடிய வகையில் மீள்பரிசீலனைக்குட்படுத்தி திருத்தத்தினை மேற்கொள்ளும் படி கோரிக்கையினை விடுத்திருந்தது. சம்பந்தன் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு ஒன்று ராஜீவ்காந்தியை நேரடியாகச் சந்தித்து முறையிட்டது. ராஜீவ்காந்தி கருத்தில் எடுத்துக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்த போதும் அதற்கான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ள வில்லை.

இதேவேளை இவ் ஒப்பந்தம் தொடர்பில் ஆயுதக் குழுக்களோடு ராஜீவ்காந்தி மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தையின் போது விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகள் அதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை முற்றாக நிராகரிப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். இந்நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முதல்நாள் நள்ளிரவு ராஜீவ்காந்தி புதுடில்லியில் பிரபாகரனோடு சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். பிரபாகரன் இவ் ஒப்பந்தம்



> இந்தியா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசுக்கு அழுத்தத்தினைக் கொடுத்து மாகாணசபைத் தேர்தலை நடத்துவதுவதன் மூலம் இந்தி இலங்கை ஒப்பந்தத்தின மீண் டும் உயிர்க்க வைக்க முனைப்புக் கொள்கிறது. உண்மையில் இத்தகைய அழுத்தத்தினை இந்தியாவே இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும். ஏனெனில் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் பொறுப்பை இந்தியாவே பெற் றுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு அழுத் தத் தினைக் கொடுத் திருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவர்கள் அதனைச் செய் யவில்லை.

தொடர்பிலான தமது அமைப்பு சார்ந்த அதிருப்தியினை வெளிப்படுத்தியிருந்தார். இதில் முக்கியமான விடயமாக வடக்கு-கிழக்கு இணைப்பானது தற்காலிகமானதாக இருப்பதால் அத னைத் தாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது என்ற கேள்வியினை முன்வைத்திருந்தார். ராஜீவ்காந்தி, இத் தற்காலிக இணைப் பானது சிங்களத் தரப்பினைத் திருப் திப்படுத்துவதற்குரியது, காலப் போக்கில் அது நிரந்தரமான இணைப் பாகவே இருக்கும் அதற்கு, தான் உத் தரவாதம் தருவதாகவும் குறிப்பிட்டி ருந்தார். இது பிரபாகரனுக்குத் திருப்தி யளிக்காதிருந்தபோதும் சம்மதம் தெரிவிக்காதவிடத்து கைது செய் யப்படும் சூழல் இருந்ததனால் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக சம்மதித்திருந்தார். உண்மையில் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்தி டப்படவேண்டிய தரப்பு தமிழ்த் தரப்பும் சிங்களத்தரப்புமாகும். இந்தியா நடுவராகச் செயற்பட்டி ருக்க வேண்டும். மாறாக தமிழ் மக்களை இவ்வொப்பந்தத்திலிருந்து ஒதுக்கிவிட்டு அவர்கள் சார்பாக இந்தியா கைச்சாத்திட்டிருந்தது. இங்கு தமிழ் மக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற பதவியை இந்தியா பலவந்தமாக எடுத்துக்கொண்டது. பொறுப்பினை இந்தியா சரியாக எடுத்துக்கொண்டதா? என்றால் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இந்தியா பெற்றெடுத்த குழந்தை. எனவே அதனைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்குரியது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்ட வடக்குக் கிழக்கு இணைப்பு தற்காலிக இணைப்பாக இருந்தாலும் கூட அதனை அரசியல் யாப்பினுடைய ஏற்பாடாகச் சேர்த் திருக்கவேண்டும். ஆனால் அது ஒரு வர்த்த மானி அறிவித்தலாக மட்டுமே இருந்தது. அதனை அடிப்படையாக கொண்டுதான் வடக்குக்கிழக்கை உயர்நீதிமன்றம் பிரித்தி ருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இடத்தில் இந்தியா தனது எதிர்வினையினைக் காட்டி வடக்குக்கிழக்கைப் பிரிக்காமல் இருப்பதற்குரிய ஒழுங்கைச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இந்தியா செய்யவில்லை.

மாகாணசபையின் தற்போதைய நிலையை நோக்கும் போது, இருந்த அதிகாரங்களையும் மத்திய அரசு கொள்கை உருவாக்கம் என்ற பெயரிலும் புதிய சட்டங்களை உருவாக்கல் என்ற பெயரிலும் குறைப்புச் செய்திருக்கிறது. சுருக்கமாகக் குறிப்பிடுவதென்றால் மாகாணசபை வெறும் எலும்புக்கூடாகத்தான் இருக்கின்றது. இந்த எலும்புக் கூட்டைப் பேணும் செயற்பாட்டினைத்தான் இந்தியா முன்னெடுக்க முனைகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில் மாகாணத்துக்கு அதிகாரம் இருக்கின்றதோ இல்லையோ, இலங்கையைத் தனது பிடிக்குள் வைத்திருப்பதற்கு மாகாணசபை பெயருக்கென்றாலும் இயங்க வேண்டும். ஏனெனில் இலங்கையினை பிடிக்குள் வைத்திருப்பதற்கு உள்ள ஒரே ஒரு சர்வதேச ஆவணமாக, இலங்கை இந்திய ஒப்பந்தமே இந்தியாவுக்கு இருக்கின்றது.

கோத்தபாயராஜபக்ச அரசு சிங்களத் தரப்பினரின் பெரும்பான்மை வாக்கின்மூலம் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் நிலையில் அவர்களின் எதிர்ப்பிற்கு அஞ்சி மாகாணசபையினை முற்றுமுழுதாகக் கைவிட்டுவிடுமோ என்ற அச்சம் இந்தியாவுக்குத் தற்போது ஏற்பட்டுள்ளமை வெளிப்படையாகின்றது.

இந் நிலையில்தான் இந்தியா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசுக்கு அழுத்தத்தினைக் கொடுத்து மாகாணசபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினை மீண்டும் உயிர்க்க வைக்க முனைப்புக் கொள்கிறது. உண்மையில் இத்தகைய அழுத்தத்தினை இந்தியாவே இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும். ஏனெனில் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம் பொறுப்பை இந்தியாவே பெற்றுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு அழுத்தத்தினைக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் இதுவரை அவர்கள் அதனைச் செய்யவில்லை.

மாகாணசபை முறையானது தமிழ் மக்களின் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்பப் புள்ளியாக இருக்கும் என்பது பலரது கருத்தாக இருக்கிறது. ஆனால் இது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட கட்டமைப்புடன் காணப்படுவதாலும் அதில் அதிகாரப்பகிர்வுக் கூறுகள் இல்லாமையாலும் ஆரம்பப்புள்ளியாகக்கூட இருக்க முடியாது. மாகாண சபை அதிகாரம் என்பது மத்தியஅரசிற்குட்பட்டது. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்டே மாகாண சபை, சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரத்தினை கொண்டுள்ளது. சுயமாக சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லை. அதேவேளை தென்னிலங்கை மக்களின் நலன்களைக் கவனத்தில் எடுத்து அங்குள்ள மாகாண சபைகளில் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளைக் கூட வடக்குக் கிழக்கு மாகாணசபைகளில் செய்யமுடியாதுள்ளது. குறிப்பாக தென்னிலங் கையில் முதலமைச்சர் நிதியம் உருவாக்குவதற்குத் தடையிருக்க வில்லை. ஆனால் இங்கு அதனை உருவாக்குவதற்கு அரசு தடையாக உள்ளது.

வட மாகாண சபையைப் பொறுத்தவரையில் மக்கள் மத்தியில் திருப்தியற்ற தன்மையே காணப்படுகின்றது. அது சரியாக இயங்கவில்லை என்பது பொதுவான அபிப்பிராயம் ஆகும். இந்த இடத்தில் அதிகமும் தமிழ் மக்கள் விமர்சனத்துக்குள்ளாகும் நபராக விக்கினேஸ் வரன் காணப்படுகின்றார். இவர் தனது பதவிக்காலத்தை சரியாக செயற்படுத்தவில்லை என்பது பொது விமர்சனமாக உள்ளது. ஆனால் அவர் செயற்படாமல் இருந்த தற்குக் குறிப்பாக இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்த உள்ளக முரண்பாடு. இரண்டாவது, மாகாணசபைக் கிருந்த அதிகாரக் குறைபாடு. இவை செயற்திறனான மாகாணசபை இயக்கத்தினைக் குழப்பியிருந்தமையினை அவதானிக்கலாம்.

இவ்வாறு குறைபாடு கொண்ட தன்மையில் மாகாணசபை அமைப்பு முறை இருந்தாலும் தமிழர்களைப் பொறுத்தவரையில் அரசியல் முக்கியத்துவம் காரணமாக அதனை நிராகரிக்க முடியாது. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று தென்னிலங்கை அரசின் அரசியல் செயற்பாடுகள் பேசப்படுவதற்கு பாராளு மன்றம் சிங்களத் தரப்பிற்கு ஒரு களமாக உள்ளது. அதே போல தமிழர்களின் பிரச்சினைகளைப் பேசுபொருளாக

(12ஆம் பக்கம் பார்க்க)

அவதானி

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?!

தமிழ் அரசியற் கட்சிகளை ஒன்றிணைத்து, வலிமையான இயக்கமாக மாற்றுவதற்கான முயற்சி சமகாலத்தில் இலங்கைத் தமிழர் தரப்பு அரசியலில் மீண்டும் பேசுபொருளாகியிருக்கிறது.

இம்முறை பூனைக்கு மணிகட்டுவதற்கு ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தயாராகியிருக்கிறார்.

"இலங்கைத் தமிழினத்தை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்" எனச் சொன்ன தந்தை செல்வநாயகமும் ஆண்டவனிடம் போய்ச்சேர்ந்து 44 வருடங்களாகி விட்டன.

அதனையும் நினைவுகூர்ந்து, அண்மையில் செல்வம் அடைக்கலநாதன், "ஆண்டவன் மீது எந்தப்பழியையும் போடமுடியாது, தமிழினத்திற்காக எந்த விலையும் கொடுக்கத்தயார்" என்று சூளுரைத்துள்ளார்.

இத்தகைய சூளுரைப்புகளை இலங்கைத் தமிழினம் குறிப்பாக வடக்கு - கிழக்கு வாழ் தமிழினம் கடந்த ஆறு தசாப்த காலத்திற்கும் மேலாக கேட்டுக்கேட்டு சலித்துவிட்டது.

அகிம்சையில் தொடங்கி, அது சரிவராது, "அடித்தால் திருப்பி அடி" என்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் வார்த்தைகளை நம்பி, அதன் வழியும் சென்று ஆயுதப்போராட்டத்தில் ஆரம்பித்து, 2009 மே மாதத்தில் அந்த ஆயுதமும் பல்லாயிரம் தமிழ் இன்னுயிர்களைக் காவுகொடுத்து மௌனித்துக் கொண்டபோது, "ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்ன தந்தையின் வழித்தோன்றலான சம்பந்தன் லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலில், ஈழப்போராட்டம் விவேக மற்றவர்களின் ஆயுதப்புரட்சியினால் தோல்வி கண்டது" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

தனது மதம்சார்ந்த பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மதியாபரணம் சுமந்திரன் அவர்களை தமது தலைமைத்துவத்தில் இயங்கிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளராகவும் சட்ட ஆலோசகராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆக்கி அழகு பார்த்ததும், இந்தப்பேச்சாளர், அகிம்சை போராட்டமும் தோல்வி - ஆயுதப்போராட்டமும் தோல்வி, இனி நாம் இராஜதந்திரப் போராட்டத்தில்தான் ஈடுபடவேண்டும் என்று பேசத்தொடங்கியும் பல ஆண்டுகளாகிவிட்டன.

எனினும் ஜெனீவா தொடர்பான தீர்மானத்திலும் அவருக்கும் அவருக்கு எதிராகத் தொடர்ந்து அறிக்கை விடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையில் ஒரு உடன்பாட்டுக்கு இன்னமும் வரமுடியவில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல், இதுவரையில் எத்தனை அரசியற் கட்சிகள் சட்டப்படி பதிவாகியிருக்கின்றன என்ற புள்ளிவிபரம் தேர்தல் ஆணையகத்தில் இருக்கும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இணைந்த சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க்காங்கிரஸ், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான

> **"ஒரு புறம் விலைவாசியேற்றத்தின் பயமுறுத்தல், மறுபுறத்தில் வாழ்வாதாரத்திற்கான போராட்டம், இடையில் அவர்களின் பிள்ளைகளின் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் நேர்ந்துள்ள தேக்கம். இத்தகைய துயர்மிகு நெருக்கடிக்கு மத்தியில் தமிழ் அரசியற் கட்சிகளை ஒன்றிணைக்கப் போகிறார்கள்."**

ரெலோ, சித்தார்த்தன் தலைமையிலான புளொட், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ. பி. ஆர். எல். எஃப் ஆகியன அவரது மறைவுக்குப்பின்னர் என்ன ஆனது என்பது வெளிச்சம்.

அந்தத் தேசியக்கூட்டமைப்பில் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி, வரதராஜப்பெருமாள் தலைமையிலான தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி, முருகேசு சந்திரகுமாரின் சமத்துவக்கட்சி என்பன இல்லை என்பதும் - அதற்கான காரணம் என்ன என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். இவை தவிர கிழக்கிலிருந்து உதயமான விநாயகமூர்த்தி முரளிதரனின் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, வியாழேந்திரனின் முற்போக்குத் தமிழர் கட்சி என்பனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில் வேண்டப்படாத கட்சிகள்தான். அன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மைத்திரி - ரணில் நல்லாட்சி (?) அரசுக்கு முண்டு கொடுத்தது போன்று, இன்றைய ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சிக்கு முண்டுகொடுக்கும் கட்சிகள்தான் இவை.

அதனால் த.தே.கூட்டமைப்புக்கு வேண்டப்படாத கட்சிகள்தான்.

ரெலோவிலிருந்து பிரிந்துசென்ற சிவாஜிலிங்கமும், சிறிகாந்தாவும் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தார்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தங்கத்தட்டில் வைத்து அழைத்த நீதியரசர் விக்னேஸ்வரனும் வடமாகாண சபையை ஆண்டுவிட்டு, புதிய கட்சி தொடங்கிக்கொண்டு நாடாளுமன்றம் சென்றுவிட்டார். அத்துடன் அனந்தி சசிதரனும் ஒரு கட்சி தொடங்கியிருக்கிறார்.

தந்தை செல்வாவின் வழித்தோன்றல்களை ஆண்டவன் காப்பாற்றுவரோ இல்லையோ, இவர்களின் பதவிச்சுகம் இவர்களை நிச்சயம் காப்பாற்றும். ஏனென்றால், மக்களுக்காக அல்ல, தத்தம் பதவிச் சுகத்திற்காகவே இவர்கள் புதுப்புதுக்கட்சிகளை ஆரம்பித்து தேர்தல்களில் போட்டியிட்டனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் வடபகுதியில் மாத்திரம் முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஆளுக்கொரு கட்சி வைத்துக் கொண்டு போட்டியிட்டனர்.

தற்போது, மீண்டும் ஒற்றுமைப் பல்லவியை பாடத் தொடங்கியிருக்கிறார் ரெலோ செல்வம் அடைக்கலநாதன்.

அத்துடன் எந்த விலையையும் கொடுக்கத்தயார் என்கிறார்!

இதுவரையில் மக்கள் கொடுத்த விலை போதாது எனச்சொல்ல வருகிறாரா..?

மக்கள் எதற்கும் தயாராகத்தான் இருந்தார்கள். அதனால்தான் தமது காணாமல்போன உறவுகளுக்காக ஆயிரம் நாட்களையும் கடந்து அறப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

முன்னைய நல்லாட்சி அரசுக்கு முண்டுகொடுத்த சம்பந்தன் அய்யாவின் தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எதனை சாதித்துக்கொடுத்தது? நீதியரசர் விக்னேஸ்வரனின் முதல்வர் பொறுப்பிலிருந்த வடமாகாண சபை, வடபகுதி தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த வரப்பிரசாதங்கள் எவை..? என்பது குறித்தெல்லாம் பேசி இவர்களுக்குக் கடுப்பேத்துவதற்கு தமிழ் மக்கள் தற்போது தயாரில்லை.

ஆனால், "விலைகொடுக்கத்தயார்" என்று மக்களை உசுப்பேத்துவதற்கு மாத்திரம் இவர்கள் எப்பொழுதும் தயார்! இந்த "உசுப்பேத்தல்" அகிம்சை முதல் ஆயுதம் வரையில் மாத்திரமல்ல, சமகால உளுத்துப்போன இராஜதந்திரம் வரையில் தொடர்கிறது.

மக்கள் சமகால கண்ணுக்குத் தெரியாத எதிரியான கொரோனா வைரசுடனும், தான் நீடித்திருப்பது போதாது என்று அழைத்து வந்திருக்கும் ரெல்டாவுடனும் எவ்வாறு போராடுவது என்று தெரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் இந்த எதிரிகளுடன்தான் தொடர்ந்தும் வாழப்போகிறோமோ..? என்ற பதட்டத்துடன் தமது அன்றாடப்பொழுதைக் கழித்து வருகின்றனர்.

ஒரு புறம் விலைவாசியேற்றத்தின் பயமுறுத்தல், மறுபுறத்தில் வாழ்வாதாரத்திற்கான போராட்டம், இடையில் அவர்களின் பிள்ளைகளின் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் நேர்ந்துள்ள தேக்கம். இத்தகைய துயர்மிகு நெருக்கடிக்கு மத்தியில் தமிழ் அரசியற் கட்சிகளை ஒன்றிணைக்கப்போகிறார்கள்.

ஏன் இந்தச் சுடலை ஞானம் கடந்த தேர்தலுக்கு முன்னர் உதயமாகவில்லை? தொகுதிகளின் ஆசனப் பங்கீடுகளில் இவர்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு இருந்திருந்தால், எத்தனை ஆசனங்களுடன் நாடாளுமன்றத்திற்குச் சென்றிருப்பார்கள்?

ஆட்சி அதிகாரத்திற்கு வருபவர்களுடன் பேரம் பேசுவதற்கு தகுதியற்ற நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டதற்கு யார் காரணம். மக்களா? அல்லது இவர்களின் தன்முனைப்பு ஆணவமா..?

"தம்பி எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும்" என்ற கனவில் மிதந்தவர்கள் அல்லவா இந்த தமிழ்த்தலைவர்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார்..? வடமாகாண சபையின் அடுத்த முதல்வர் யார்..? என்பதே இவர்களின் மனதில் மறைந்திருக்கும் உறைபொருள்.

இன்று ஒற்றுமைபற்றி பேசத்தொடங்கியிருக்கும் செல்வம் உட்பட இதர தலைவர்கள் அடுத்துவரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலாவது ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் தொகுதிகளில் ஆசனங்களைப் பெறுவார்களா..? குறைந்த பட்சம் அதற்காக ஒரு வேலைத்திட்டத்தையாவது தயாரித்து நடைமுறைப்படுத்துவார்களா..?

அவ்வாறு செய்தால் நீங்கள் ஆண்டவரிடத்தில் பழிபோடவும் தேவை வராது! எந்த விலை கொடுக்கவும் அவசியம் நேராது.!

அன்றோய்ட் குஞ்சப்பன் வேர்ஷன் 5.25

அபூர்வன்

Robot & Frank என்ற திரைப்படத்தின் அருட்டுணர்வால் உருவாக்கப்பட்ட மலையாள சினிமாவாக Android kunjappan version 5.25 அமைந்துள்ளது. முதியவருக்கும் எந்திரசாலிக்குமான (Robot) உறவின் நெருக்கத்தினை வெளிப்படுத்துகிறது. சுப்பிரமணியன் (சுராஜ்) முதுமைக்காலத்தை மகனின் உறவு நெருக்கத்தில் கழிக்க விரும்புகிறார். மகனான பாஸ்கரனோ (சௌபின் ஷாகிர்) தந்தைக்குத் துணையாகப் பணிப்பெண்ணை ஒழுங்கு செய்துவிட்டு ரஷ்யா சென்று விடுகின்றார். தந்தை பணிப்பெண்ணை வேலையை விட்டு நிறுத்திவிட, எந்திரசாலியொன்றை வாங்கிக் கொடுக்கிறார். எந்திரசாலியை மகனாகவே பாவனை செய்யும் சுப்பிரமணியன் அதற்குக் குஞ்சப்பன் எனப் பெயர் சூட்டுகிறார். இந்த நிலையில் குஞ்சப்பன் வகை எந்திரசாலிகள் ஏதேனும் ஒரு தருணத்தில் சுயமாக இயங்கி உயிராபத்தினை ஏற்படுத்தி விடுமென்பதை உற்பத்தி நிறுவனம் கண்டறிகிறது. எனவே பாஸ்கரன் தந்தையிடம் குஞ்சப்பனை மீளக் கோருகிறார். சுப்பிரமணியனோ கொடுக்க மறுக்கிறார். தன்னுடைய இடத்தினை குஞ்சப்பன் கைப்பற்றியதை பாஸ்கரன் உணர்கிறார். மனிதனுக்கும் எந்திர சாலிக்கும் இடையில் மெய்யான உறவு நெருக்கம் சாத்தியமில்லை என்பதை மதியுரையாலும், செயற்பாட்டாலும் 'குஞ்சப்பன்' தெளிவுபடுத்தப் படம் நிறைவு பெறுகிறது.

எந்திரசாலியை நடுவணாகக் கொண்ட சினிமாவைக் குறைந்த பாதீட்டிலே எடுத்த அறிமுக இயக்குநர் Ratheesh Balakrishnan பாராட்டுக்குரியவர். வேட்டி கட்டியவாறு குஞ்சப்பன் ஆலயம் செல்லல், குஞ்சப்பனுக்கு சோதிடம் கணித்தல் எனப் பல காட்சிகள் நகைச்சுவையூட்டுகின்றன. வேறு சில காட்சிகள் அவலச் சுவையைச் சுவறச் செய்கின்றன. உப கதையாக விரியும் முகநூற் காதலுக்கு இறுதி யுச்சக் காட்சியில் வைக்கின்ற முற்றுப்புள்ளி திரைச் சுவைஞனை ஈர்க்கும் வகையிலே அமைகின்றது. பின்னணி இசையும் சிறப்பாகவுள்ளது. குறிப்பாக ஜப்பானியக் காதலி அறிமுகமாகும் தருணத்திலே

வெளிப்படும் இசை அருமை! படத்தொகுப்பும் ஒளிப்பதிவும் படத்திற்குப் பலம் சேர்த்துள்ளன. சௌபின் ஷாகிர் மற்றும் சுராஜ் இருவரும் அற்புதமாக நடித்துள்ளனர். இத் திரைப்படம் "கூகுள் குட்டப்பன்" எனத் தமிழிலே நகலாக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

மெய்ந் நாயகத் தனத்தின் அடையாளம்

ஹொட்டல் ருவான்டா

இ.சு.முரளிதரன்

இனவெறியின் உச்சத்தை, மனிதநேயத்தின் மகத்துவத்தை, மெய்ந் நாயகத் தனத்தின் (Real Heroism) அடையாளத்தை Hotel Rwanda என்ற திரைப் படிமம் வெளிப்படுத்தி நிற்கிறது. உண்மைச் சம்பவத்தை நகரும் படிமமாகப் பிரதிபலிக்கிறது. இனவெறியைச் சந்தித்தவர்கள் தம் அனுபவங்களோடு நிச்சயம் பொருத்திப் பார்ப்பார்கள் ஊழிக் காலமொன்றின் ஒப்பனையோடு சீழ்வடிந்த நாட்களை அனுபவித்த ஒவ்வொரு ஈழத்தமிழனும் ஏதேனுமொரு காட்சியிலேனும் சுயவிம்பத்தைத் தரிசிப்பான். ஐ.நா. சபை என்பது வல்லரசின் கைப்பாவை என்ற புரிதலின்றி, இத்தனை நிகழ்வுகளுக் குப் பின்னரும் நம்பிக்கையோடு தமிழ் அரசியல் வாதிகள் அறிக்கை விடும் போது, "இன்னுமாடா இந்த ஊர் என்னை நம்பிக்கிட்டிருக்கு" என்ற கைப்புள்ள வடிவேலுவின் நகைச் சுவையே நினைவு வரும்; ஆனால், Hotel Rwanda அமைதிப் படையின் விம்பத்தை 2004ஆம் ஆண்டே ஓரளவேனும் உடைக்க எத்தனித்துள்ளது. அமெரிக்கா சாராதோரால் இத் திரைப்படம் உருவாக்கப்பட்டிருப்பின் அவ் விம்பம் முழுமையாகத் தகர்க்கப்பட்டிருக்கும் என்றே கருதுகின்றேன்.

Hutu என்ற பெரும்பான்மை இனமும், Tutsi என்ற சிறுபான்மை இனமும் சகோதரத்துவத்தோடு வாழ்கிறது. வானொலிச் செய்தி ஊடாக இன முரண்பாடு கட்டியெழுப்பப்படுகிறது. Hutu இனத்தவர் மீது பழி சுமத்தப்பட்டு இனக் கலவரம் வெடிக்கிறது. நட்சத்திர விடுதியின் முகாமையாளரான Paul என்பவர் Hutu இனத்தைச் சேர்ந்தவர். அவரது மனைவியோ Tutsi இனத்தவர். மனித நேயம் கொண்ட நாயகனான Paul தனது விடுதியில் மக்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார். 1268 பேரின் உயிரைக் காக்க பணம், நகை, மது என அனைத்தையும் படையினருக்கு வழங்கி, துணிச்சலோடு செயலாற்றி மெய்ந் நாயகனாக மிளிர்கிறார். இனவாதத்திற்கும் மனித நேயத்திற்குமான மோதுகையாகத் திரைப்படம் அமைந்துள்ளது.

புகை மூட்டமான தெருவிலே பிணங்களின் மீது, வாகனம் ஏறி இறங்குதல், நுளம்பு மருந்தடிப்பது போல மக்களைத் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுதல், புகைப்படத்தைக் கையிலேந்தி காணாமற்போன குழந்தைகளைத் தேடுதல், சிறுபான்மை மக்களின் உடைமைகளைச் சூறையாடி அவர்களைக் கொல்வதைக் கொண்டாட்ட உணர்வோடு செய்தல் என்பன அதிர்வினை ஏற்படுத்தும் காட்சிப் படிமங்களாக அமைகின்றன. Paul கதாபாத்திரத்திலே தோன்றும் Don Cheadle அற்புதமான அளிக்கையினைச் செய்துள்ளார். படையதிகாரியோடு வாதம் செய்தல், கழுத்துப்பட்டி அணியும் தருணத்திலான இயலாமை விசும்பல், மனைவியின் கழுத்திலிருக்கும் சிலுவையிடம் ஆற்றாமையைப் பகிர்தல், மனைவி மக்களைத் தேடிச் சலித்து துன்பியலின் எல்லையில் குளியலறையில் காணும் போதான உடல்மொழி வெளிப்பாடு என்ன நடிப்பின் பல்பரிமாணங்களைப் பதிவு செய்கின்றார். நாயகியான Sophie Okonedo தனது கண்களிலே சோகம், பயம், அந்தரிப்பு, காதல், வியப்பு என ஒவ்வொரு சட்டகத்திலும் மாறுபட்ட உணர்வுகளைப் பரிமாறுகிறார். மனித நேயத்தின் மாண்பினை, இனவாதத்தின்

நடப்பியலை திரைமொழியிலே சிறப்பாக வெளிப்படுத்திய இயக்குனர் Terry George பாராட்டுக்குரியவர். இத்திரைப்படத்திலே காட்டப்படுவதை விடக் கொடூரமான இனச்சுத்திகரிப்பினை நம் நாட்டிலே கண்ணுற்றோம். அத் தருணத்தில் பயந்து ஒதுங்கியிருந்தவர்களையே இன்று கூச்சமின்றித் தலைவர்களாகக் கொண்டாடுகின்றோம். இதுதான் தமிழினத்தின் சாபக்கேடு! ■

10,06,02,01 உம், 11,06 உம்

வேதநாயகம் தபேந்திரன்



“யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற ஆசனம் ஒன்றால் குறைக்கப்பட்டு ஆறு ஆகி விட்டது. ”

இது அண்மைய பத்திரிகைச் செய்தி.

1977ஆம் ஆண்டில் இறுதியாகத் தொகுதி முறையினுள் தேர்தல் நடைபெற்ற போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி இணைந்த மாவட்டத்தில் 11 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

வாக்காளர் எண்ணிக்கைக்கு ஏற்ப தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டன. பின்னர் 1989 இல் முதன் முறையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல் நடைபெற்ற போது 10 உறுப்பினர்கள் தெரிவானார்கள்.

இறுதியாக 05.08.2020 இல் தேர்தல் நடைபெற்ற போது 7 உறுப்பினர்கள் உள்ள மாவட்டமாகி விட்டது.

வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதால் எமக்குரிய ஆசனமொன்று கம்பஹா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு விட்டது.

இதனால் எமது மாவட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீடு, பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவு எண்ணிக்கை என்பவை பாதிக்கப்படுகின்றன.

போர் தந்த உயிரிழப்பு, இடம் பெயர்வு, புலம் பெயர்வு, குறைந்த பிள்ளைகள் உள்ள குடும்ப அமைப்பு, வயது 30 ஐக் கடந்த பின்பான திருமணங்கள், வாக்காளராகத் தம்மைப் பதிவதில் சில ஆயிரம் மக்கள் காட்டும் அக்கறையின்மை ஆகியவையே காரணங்களாகும்.

இற்றைக்கு அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்பதாக குடும்பங்களில் 10 பிள்ளைகள் சராசரியாக இருந்ததைக் காண முடிந்தது. கூட்டுக் குடும்பக் கட்டமைப்பு சிறப்பாகப் பேணப்பட்டமை. தேவைகள் மிகவும் குறைந்த எளிமையான வாழ்க்கை முறை, ஆணும் பெண்ணும் 25 வயதுக்குள் திருமணம் செய்யும் முறைமை கூடுதலாக இருந்தமையால் கருவளம் உயர்வாகப் பேணப்பட்டது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் துலா மிதிக்க இரு ஆண்கள், பட்டை கோலித் தண்ணீர் பாய்ச்ச ஒருவர், வாய்க்கால் வழி வரும் தண்ணீரைப் பயிர்களுக்குக் கட்ட ஒருவர் என 4 ஆண்பிள்ளைகள் தேவைப்பட்டதும் ஒரு காரணம்.

இதனால் 4 ஆண்பிள்ளைகள் தேவைப்பட ,ஆடு மாடு கோழிகள் வளர்க்கவென வீட்டு வேலைகளுக்குப் பெண்பிள்ளைகள் தேவைப்பட குடும்பக் கட்டமைப்பு 10 பிள்ளைகள் உள்ளதாகத் தேவைப்பட்டது.

குழந்தை பெற்ற ஒரு தாய்க்கு அரைத்த கறியுடன் பத்தியச் சாப்பாடு கொடுத்து நன்றாகப் பராமரித்தார்கள். இதனால் அதிகப் பிள்ளைகள் பெறுவது பெண்களது ஆயுளைக் குறைக்குமென்ற மேற்கத்தையக் கோட்பாடுகள் பொய்யாகிப் போனது. எமது உணவுப் பாரம்பரியத்தின் சிறப்புக் காரணமாக பெண்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள்.

போர் தீவிரம் பெற முன்பாகவே 10 பிள்ளைக் குடும்ப அமைப்பு 6, 4 பிள்ளைகள் என ஆகியது. பின்னாளில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை சிதைந்து போக 3, 2 பிள்ளைகளுடன் குடும்ப அமைப்பு நின்று போனது. இப்போது சிலர் ஒன்றுடன் நிற்கின்றனர்.

போரினால் இறப்புகள், வடக்கு கிழக்கு தவிர்ந்த மாகாணங்களுக்கு இடப்பெயர்வு, வெளிநாடுகளுக்குச் சில இலட்சம் பேர் புலம் பெயர்வு ஆகிய காரணங்களால் தமிழர் வாக்காளர் தொகை வேகமாகக் குறைவடைந்தது.

இங்குள்ளவர்கள் அதிக பிள்ளைகளைப் பெற்றுச் சனத்தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற கோசம் காலாதி காலமாகக் கூறப்பட்டு வருகிறது.

அதிக பிள்ளைகள் பெறுவதற்கு முன்னைய காலத்தைப் போல 25 வயதுக்கு முதல் திருமணம் செய்யும் நிலை இருக்கிறதா என்றால் அது கேள்விக்குரியதே.

படிப்பு, உத்தியோகம், சீதனம், சாத்திரம் போன்ற காரணங்களால் திருமண வயது ஏறி ஏறிச் செல்கிறது.

இளையோரது புலம் பெயர்வு தொடர்ச்சியாகவே நடைபெறுகிறது. சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் செங்கன் விசா வலயத்தில் வந்து விட்டன. இதனால் அந்த நாடுகள் ஊடாகப் புலம் பெயர்வு தொடர்கின்றது. புலம் பெயர்ந்து சென்றால் கோடீஸ்வர வாழ்க்கை வாழலாமென்ற மனப்பாங்கே காரணம்.

> **“விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் துலா மிதிக்க இரு ஆண்கள், பட்டை கோலித் தண்ணீர் பாய்ச்ச ஒருவர், வாய்க்கால் வழி வரும் தண்ணீரைப் பயிர்களுக்குக் கட்ட ஒருவர் என 4 ஆண் பிள்ளைகள் தேவைப்பட்டதும் ஒரு காரணம்.**
> **இதனால் 4 ஆண்பிள்ளைகள் தேவைப்பட ,ஆடு மாடு கோழிகள் வளர்க்கவென வீட்டு வேலைகளுக்குப் பெண்கள் தேவைப்படக் குடும்பக் கட்டமைப்பு 10 பிள்ளைகள் உள்ளதாகத் தேவைப்பட்டது.”**

முதியவர் ஒருவர் இறந்தால் ஒரு மனிதன் இறப்பான். இளைஞன் ஒருவன் இறந்தால் சந்ததி ஒன்று இறக்கும். அது போலவே இளையவர்களது புலம் பெயர்வு தமிழர் தரப்பில் தொடர்ந்து நடைபெறுவதால் சந்ததிகளின் பெருக்கம் தடைப்படுகிறது.

இரண்டு பிள்ளைகளுக்கு மேலாகப் பெறுவோருக்கு விசேட உதவித் தொகை மாதாந்தம் வழங்க வசதி படைத்த தன்னார்வம் கொண்டவர்கள் முன்வரல் வேண்டும்.

இதற்கென முறைமையான பொறிமுறை தேவை.

வாக்காளர் டாப்பில் பெயர்களைப் பதியும் காலத்தில் அக்கறையீனமாக இருப்பவர்கள் பல்லாயிரம் பேர் உள்ளனர்.

தேர்தல்கள் நடைபெறும் போது ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் “வாக்கு கோரிய போதும் வாக்காளர் டாப்பில் பெயர் இல்லாத காரணத்தால் வாக்கு வழங்கப்படாத வாக்காளர் நிரல் ” எனும் படிவம் சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலரால் தயாரிக்கப்படுகிறது.

தேர்தல் முடிவடைந்ததும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு யூன், யூலை மாதத்திலும் வாக்காளர் டாப்பைத் தயாரித்தாலும் பதியப்படாத அந்தச் சில ஆயிரம் வாக்காளரைப் பதிவு செய்யலாம். சிலவேளை இந்த வருடம் இழக்கப்பட்ட அந்த 7 ஆவது ஆசனத்தை அடுத்த வருடம் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

மலையகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் பெருந்தோட்டங்களில், நகரப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களை ஒருவர் விடாமல் அனைவரையும் வாக்காளராகப் பதிவு செய்து கொள்வார்கள். தமது கட்சியின் தொண்டர்களை இதற்கெனக் கிராம சேவகர்களுடன் இணைந்து பணியாற்ற அனுப்புவார்கள்.

சுற்றிவரச் சிங்கள மக்கள் வாழும் பிரதேசத்தில் மலையகத் தமிழ் கட்சிகளுக்கு ஒவ்வொரு தமிழ் வாக்குகளும் பெறுமதியானவை. அரசியல் பிரதிநிதித்துவம் ஊடாகவே அவர்களது வாழ்வும் வளமும் தீர்மானிக்கப்படுவதால் ஒவ்வொரு வாக்குகளையும் தவற விட மாட்டார்கள். மிகச் சரியாக எவ்வாறு வாக்களிப்பது என்பதையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

ஆனால் வடக்கு, கிழக்கில் முஸ்லிம் கட்சிகள் மட்டுமே இது போன்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றன. தமிழர் கட்சிகள் இந்த விடயத்தில் அக்கறை குறைவாகவே நடந்து கொள்கின்றன.

சென்ற 2020 ஓகஸ்ட் 05 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் படித்தவர்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 11.5 வீதம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இது இலங்கையிலேயே ஆகக் கூடிய நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக இருந்தது.

அதே வேளை இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தைத் தலைமையிடமாகக் கொண்ட பிராந்தியக் கட்சி ஒன்று 5000 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றிருந்தால் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெற்றிருக்க முடியும்.

அவ்வாறு பெற்றிருந்தால் வடக்கின் அபிவிருத்தி மேலும் உயரும்.

சனத்தொகையை அதிகரித்தல், வாக்காளர்களாக யாவரையும் பதிதல், வாக்களிப்பைச் சரியாகச் சொல்லிக் கொடுத்தல் போன்ற முறைகளைத் திறம்பட நாம் கடைப்பிடிக்கா விட்டால் வடக்கின் அபிவிருத்தி என்பது தேய்பிறை தான் .

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இலங்கையின் மீட்பர்கள் யார்? இனவாதிகளா? இடதுசாரிகளா?

இடதுசாரிகளை விட இனவாதிகளே மக்களை ஈர்த்தனர். அதனால் நாடு நாசமானது" என்று ஒரு பதிவைத் தன்னுடைய முகப்புத்தகத்தில் போட்டிருந்தார் ஜீவன் பிரசாத். ஒரு காலம் ஈழப்போராட்டத்தோடு இணைந்திருந்தவர் ஜீவன். அதேவேளை கலை, ஊடகவியல்துறை எனப் பல துறைகளிலும் ஆளுமை மிக்கவர். ஜனநாயகவாதி. மாற்றங்களை எப்போதும் விரும்புகின்றவர். அவர் தன்னுடைய அவதானங்களின் வழியே கண்டடைந்த உண்மை இது. அவருக்கு மட்டுமல்ல, நமக்கும் இது நூற்றுக்கு நூறு உண்மை என் பார்களே, அதையும் விட உண்மையானது.

ஏனென்றால், இந்த ஈர்ப்பு இனரீதியான மேம்பாட்டை எந்த இனத்துக்கும் தரவில்லை. இனப்பாதுகாப்புக்கு இதுதான் சிறந்த வழி என்று தோன்றினாலும் இந்த வகையான நிலைப்பாட்டினால் அல்லது வழிமுறையினால் நாடும் நெருக்கடிக் குள்ளாகியது. இனங்களாகப் பிளவுண்டது. ஒவ்வொரு இனமும் நெருக்கடியைச் சந்தித்தன. அழிவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய தாயிற்று. இன்று பிளவுண்ட மனதோடுதான் ஒவ்வொருவரும் உள்ளோம். எல்லோரிடத்திலும் சந்தேகமும் அச்சமும் பகையுணர்ச்சியுமே மேலோங்கியுள்ளன. இலங்கையின் குடிமக்களுக்குக் கிடைத்த வரமிதுவாகியுள்ளது.

பதிலாக இடதுசாரிகளை ஆதரித்திருந்தால் ஜனநாயகம் செழுமையாக இருந்திருக்கும். போரும் இடைவெளிகளும் உருவாகியிருக்காது. அல்லது இந்தளவுக்கு நீறு பூத்த நெருப்பாக இருந்திருக்காது. சுய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். அறிவியலும் பண்பாடும் புதிய வளர்ச்சி நிலையை எட்டியிருக்கும். அந்நியத் தலையீடுகள் இந்தளவுக்கு ஏற்பட்டிருக்காது. கல்வி, பொருளாதாரம், பண்பாடு உள்ளிட்ட விசயங்களில் சுதேசத்தன்மை உள்ள மக்களாக நாம் வாழ்ந்திருப்போம். அதேவேளை சர்வதேசத் தன்மை வாய்ந்தோராகவும் இருந்திருப்போம். இலங்கைத்தீவு பல்லினத் தன்மையும் பன்மைத்துவமும் உள்ள அமைதித்தீவாக இருந்திருக்கும்.

> **இனத்துவ ரீதியில் இடதுசாரிகள் சோரம் போனதும் இன்னமும் போய்க்கொண்டிருப்பதும் இடதுசாரிகள் மீதான அவநம்பிக்கைகளையும் மதிப்புக்குறைவையும் ஏற்படுத்தியிருப்பது உண்மையே. இன வன்முறைகளையும் இன ஒடுக்குமுறையையும் இடதுசாரிகள் கண்டிக்கவும் தடுக்கவும் தவறினர் என்பதும் உண்மையே. மட்டுமல்ல இனச் சமனிலையைப் பேணுவதற்கான அதிகாரப் பகிர்வு - அரசியலமைப்பு உருவாக்கம் - போன்றவற்றிலும் இடதுசாரிகளின் பாத்திரம் பலவீனமானதே.**

இப்படி எழுதும்போது "இது ஒரு அற்புதக் கனவு" என ஒரு சாராரும் "இல்லை இது, சுத்தமான அபத்தக் கனவு" என இன்னொரு சாராரும் கூறுவர். ஏனெனில் இரண்டுக்கும் இதில் சாத்தியங்கள் உண்டு. இடதுசாரித்துவத்தில் முற்போக்குத் தன்மையும் மக்கள் நேயமும் மானுட விகசிப்பும் விடுதலையுணர்வும் இருக்கின்ற அதேவேளை அதில் எல்லையற்ற அதிகாரத்தைப் பிரயோகிக்கின்ற மூடத்தனமும் உண்டு. இரண்டுக்கும் ஏராளமான உலக உதாரணங்களும் வரலாற்று அனுபவங்களும் உண்டு.

ஆகவே இரண்டுக்குமான சாத்தியங்களை - நன்மை தீமைகளை - மனதிற் கொண்டே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

இலங்கையின் எழுபது ஆண்டுகால அரசியல் வரலாற்றில் இடதுசாரிகள் பங்கேற்ற அரசாங்கத்துக்கும் - ஆட்சிக்கும் - இடதுசாரிகளில்லாத ஆட்சிக்குமிடையில் உள்ள வேறுபாடுகளையும் இந்தக் கட்டுரை நோக்குகிறது.

இனத்துவ ரீதியில் இடதுசாரிகள் சோரம்போனதும் இன்னமும் போய்க்கொண்டிருப்பதும் இடதுசாரிகள் மீதான அவநம்பிக்கைகளையும் மதிப்புக்குறைவையும் ஏற்படுத்தியிருப்பது உண்மையே. இன வன்முறைகளையும் இன ஒடுக்குமுறையையும் இடதுசாரிகள் கண்டிக்கவும் தடுக்கவும் தவறினர் என்பதும் உண்மையே. மட்டுமல்ல இனச் சமனிலையைப் பேணுவதற்கான அதிகாரப் பகிர்வு - அரசியலமைப்பு உருவாக்கம் - போன்றவற்றிலும் இடதுசாரிகளின் பாத்திரம் பலவீனமானதே.

இப்படித் தவறுகளை இழைத்திருக்கும் - இன்னமும் இழைத்துக் கொண்டிருக்கும் இடதுசாரிகளை பிறகு எப்படி முன்னிலைப்படுத்தலாம். இவர்களால் எப்படி அற்புதமான - அதிசயமான ஒரு இலங்கையை உருவாக்கியிருக்க முடியும்? என்று இடதுசாரிகளை நோக்கி உங்களில் யாரும் கேள்வி எழுப்பலாம்.

ஆனால் இந்தக் கேள்விக்குப் பின்னுள்ள உண்மைகளை மனந்திறந்து கண்டறிய வேண்டும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சமஸ்டி முறை பற்றி முதன்முதலில் பேசியவர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா. ஆனால் அவரே பின்னர் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து கொந்தளிக்கும் நிலைமைக்கு வழியேற்படுத்தினார். அந்தக் கொந்தளிக்கும் நிலைமையின் வளர்ச்சியே இன்று சமஸ்டியைப் பற்றிய பேச்சையே எடுக்க முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

ஏன் இப்படிப் பண்டாரநாயக்கா இரண்டு நிலைப்பாடு எடுக்க வேண்டியிருந்தது? இடையில் நடந்தது என்ன? என்பதைக் கண்டறிந்தால் இடதுசாரிகளிடம் ஏற்பட்ட - ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வரலாற்றுத் தவறு எப்படி நிகழ்ந்தது, நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வளவுக்கும் பண்டாரநாயக்கா ஒன்றும் முற்போக்குவாதியோ சீர்திருத்தவாதியோ கிடையாது. ஐ.தே.கவின் பிரதிநிதி யாக இருந்தவரே. பின்னர் அதிலிருந்து விலகி தனியாகச் சுதந்திரக் கட்சியை உருவாக்கியவர். ஐ.தே.கவுக்கும் சு.கவுக்கும் இடையில் வேறுபாடுகள் கட்சியின் நிறக்கொடிகளில் மட்டுமல்ல நடைமுறை சார்ந்த கொள்கையிலும் இருந்ததுண்டு. ஆனால், அது அதிக வேறுபாடாக இல்லாமல் பின்னாளில் கரைந்து விட்டது. இதற்குக் காரணம், ஐதேகவின் இனவாத அலைக்கு நிகரலையை சு.கவும் இனவாத அலையை உருவாக்க முற் பட்டதேயாகும்.

இந்த இரண்டு கட்சிகளும் இனவாத அலையை உச்ச நிலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது இதை எதிர்த்து நிற்கும் திராணியை இடதுசாரிகள் கொண்டிருக்கவில்லை. ஆனால் 1948க்குப் பின்னான இலங்கை அரசியற் பரப்பில் இடதுசாரிகளுக்கென்றொரு தனித்துவ அடையாளம் இருந்தது. இடதுசாரித் தலைவர்கள் சிங்கள - தமிழ் சமூக வெளியில் பேரடையாளத்தோடிருந்தனர். நம்பிக்கை ஒளியூட்டினர்.

ஆனால் இனவாத அலையானது கொந்தளிக்கும் உணர்ச்சியின் மையத்தில் சுழன்று கொண்டிருப்பது என்பதால், தவிர்க்க முடியாமல் இடதுசாரிகளும் அதனோடு சமரசம் செய்ய வேண்டியேற்பட்டது. அல்லது அதைக் கண்டும் காணாதிருக்க வேண்டியேற்பட்டது. அல்லது அதனோடு சேர்ந்து இழுபட வேண்டியிருந்தது. இதில் இவர்கள் தவிர்க்க முடியாமல் இரண்டு சிக்கல்களுக்குள்ளாகினர். ஒன்று அப்போது ஏற்பட்ட ரஸ்ய - சீன சார்புப் பிளவு. இரண்டாவது ஐ.தே.கவை எதிர்த்துத் தோற்கடிக்க வேண்டும் என்ற முனைப்பில் சு.கவுடன் செய்து கொண்ட சமரசம். இரண்டுமே இடதுசாரிகளைப் பலவீனப்படுத்தின என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது. இவர்கள் பிரதான எதிரியாக ஐ.தே.கவையும் அதனுடைய மேற்குச் சாய்வையும் வெளிவெளியான அந்நியத்தனத்தையும் எதிர்க்க வேண்டும் என்று கருதினர். இதனால் சு.கவின் ஏனைய தவறுகள், போக்குகளுக்கு தவிர்க்க முடியாமல் உடன்பட்டனர்.

இரண்டாவது தமிழ்ச்சமூகத்தின் மீதான இனவன்முறை, இன ஒடுக்குமுறை போன்றவற்றில் சரியான நிலைப்பாட்டினை எடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியதாகும். இதனால் தமிழ் இடதுசாரிகள் தனியான நிலைப்பாட்டை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கையின் இடதுசாரித்துவம் மூன்றாக வகைப்பட்டது. ஒன்று, ரஸ்ய சார்புவாதிகள். இரண்டாவது சீனச் சார்புடையோர். மூன்றாவது இவர்களில் தமிழ்நிலைப்பட்டுச் சிந்திக்கும் இடதுசாரிய நிலைப்பட்டோர் ஆக.

ஆகவே வரலாற்றுப் பொறியிலிருந்து மீளமுடியாத சுழலுக்குள் இவர்கள் சிக்குண்டனர். இதன் விளைவாக வரலாற்றுத் தவறுகளுக்குட்பட வேண்டியதாயிற்று. இடதுசாரியம் ஒரு விஞ்ஞானத்துவம். அது தூர நோக்கோடு சிந்திக்கும் ஆற்றலையும் பண்பையும் கொண்டது என்பதை இவர்கள் தவறவிட்டனர். இதில் தவறிழைத்தனர். இந்தத் தவறே இடதுசாரிகளை முன்னிலைச் சக்தியாக இன்னும் மாற விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் ஒப்பீட்டளவில் இடதுசாரிகளின் இடம் பெரியதே.

எப்படியென்றால் ஒரு போதுமே அவர்கள் பன்மைத்துவத்தை மறுதலிக்கவில்லை. சிறுபான்மைத் தேசிய இனங்களின் உரிமைகளை நிராகரித்ததில்லை. மட்டுமல்ல, இலங்கையின் இந்தளவுக்கான அரசியல் நிலைமைக்கு - கட்டறுந்த அதிகார வெறிக்கும் மக்கள் விரோதப் போக்குக்கும் எதிராக இடதுசாரிகளே இடையில் நிற்கிறார்கள். ஒரு தரப்பு ஆட்சியில் பங்கேற்று விவாதங்களை நடத்துகிறது. கட்டுப்படுத்துகிறது. மறுதரப்பு மக்கள் போராட்டங்களை நடத்துகிறது.

இந்த இடத்தில் இடதுசாரிகளையும் இடதுசாரித்துவத்தையும் வகைப்படுத்திப் புரிந்து கொள்வது அவசியம். ஒன்று உண்மையில் இடதுசாரிகள் சமகால நிலவரங்களுக்குள் சிக்கப்படாது தெளிவாக அரசியலை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனாலும் சமகாலத்தை அவர்களால் புறக்கணிக்க முடியாத நிலை இருந்ததையும் புரிந்து கொள்வது அவசியம். இதில்தான் இடதுசாரிகளிடையே பிளவுண்டாகியது. இந்தப் பாராளுமன்ற அரசியல் என்பது தரகு முதலாளித்துவத்தை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடே என இடது சாரிகளில் ஒருசாரார் தொடர்ந்தும் வலியுறுத்தினர். இன்னொரு சாராரர் இதில் பங்கேற்று இடையீடு செய்யவில்லை என்றால் மிகப் பாதகமான நிலைமையே ஏற்படும் என்றனர். ஆகவே இடதுசாரிகளில் இரு நிலைப்பட்டோர் உண்டு என்பதை மனங் கொள்ள வேண்டும்.

ஒரு சாரார் ஆட்சி அதிகாரத்தோடு சமரசம் செய்தோர், ஒத்தோடிகளாக இருந்தோர், இருப்போர். இதற்கு சமகால உதாரணம் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார போன்றோர். இன்னொரு கோணத்தில் அரச எதிர்ப்பு - புரட்சி என்ற கோதாவில் வந்த விமல் வீரவன்ஸ.

ஏனையோர் அரசை எதிர்த்து ,அதனுடைய மக்கள் விரோதப்போக்கைக் கண்டித்துக் கொண்டிருப்போர். இங்கே உள்ள கவலையும் துரதிருஷ்டமும் என்னவென்றால் இவர்கள் பல அணிகளாக - குழுக்களாகச் சிதறுண்டிருப்பதே. உண்மையில் இது மக்கள் விரோதமானது. அரச அதிகாரத்துக்குச் சார்பானது. ஒடுக்கு முறைக்கு ஒத்துழைப்பது. தவறுகளுக்கு வழிவிடுவது. இதனால்தான் எதிர்த்தரப்பில் இருந்தாலும் சரி, ஆளுந்தரப்பில் (தேர்தல் அரசியலில்) இருந்தாலும் சரி இடதுசாரிகள் மீதான மதிப்புக்குறைந்தமைக்குக் காரணம். கூடவே எழுந்தெரியும் இனவாத அலையை அணைக்கக் கூடிய எந்தச் சக்தியும் கருத்து நிலையும் தந்திரோபாயமும் இடதுசாரிகளிடம் இல்லை என்பதாகும். ஆனால் இடதுசாரித்துவம் என்பது விஞ்ஞானம் என விளங்கிக் கொள்வோமாயின் அதனிடம் -அந்த தரப்பிடம் அறிவு பூர்வமான - விஞ்ஞான பூர்வமான ஆற்றல் மிக்க சிந்தனையும் செயல் வழிமுறையும் அதற்கான வடிவமும் கிடைத்திருக்கும் அல்லவா. இங்கே அது நிகழவில்லை என்றால் இது அந்த அறிவுபூர்மான - விஞ்ஞான பூர்வமான தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்றே அர்த்தமாகும். இதைக்குறித்த உரையாடல்களும் விமர்சனங்களும் மதிப்பீடுகளும் விசாரணைகளும் நடக்கவில்லை என்றால் அது இடதுசாரித்துவத்தின் அடிப்படைக்கும் அதன் பண்புக்கும் எதிரானதே.

அப்படியென்றால் இங்கே என்னதான் நடந்தது? என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?

(தொடரும்)

பறக்கும் பயங்கரவாதம்

தீவிரமாகும் தீவிரவாத ட்ரோன்கள் (AVTP)

● எல்றோய் அமலதாஸ்

காஷ்மீர் எல்லைப் பகுதியில் மீண்டும் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதையடுத்து எல்லை பாதுகாப்புப் படையினர் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர். இதற்கு முன்பு...

“ஜூன் 27 அன்று நள்ளிரவில் நடந்த சம்பவம் இந்திய பாதுகாப்பு துறைக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. கடந்த காலங்களில் பல்வேறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து வந்த இந்தியாவுக்கு அன்றைய செய்தி புதிது. ஆனால் நவீன உலக தொழில்நுட்ப யுகத்தில் பயங்கரவாதத் தாலும் கையாளப்பட்ட இந்த யுத்தி புதியதல்ல!”

இந்திய விமானப்படையின் ஜம்மு விமானத் தளத்தின் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல், இந்தியாவின் பாதுகாப்பு அமைப்புகளுக்கு எச்சரிக்கையாக அமைந்தது. ட்ரோனில் வெடிபொருட்களை வைத்து இந்திய ராணுவத்தைக் குறிவைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட இத்தகைய சம்பவம் இது தான் முதல் முறை என்று கூறப்படுகிறது.

ஜம்மு விமானப்படைத் தளத்தின் தொழில்நுட்பப் பிரிவில் இரண்டு குறைந்த தீவிர வெடிப்புகள் ஏற்பட்டதாக இந்திய விமானப்படை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ள நிலையில், ட்ரோன்களைப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது தெளிவாகியுள்ளது. எந்தவிதமான உயிரிழப்புகளும் ஏற்படவில்லை. இரண்டு இராணுவ வீரர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தத் தாக்குதலை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் நடத்தும் மறைமுகப் போரின் புதிய அத்தியாயமாகப் போரியல் சார்ந்த பாதுகாப்பு வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இதற்கு முன்பும் கடந்த சில ஆண்டுகளாகவே, பாகிஸ்தானிலிருந்து ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் எல்லைகளுக்கு போதைப்பொருட்களை, ஆயுதங்களை, வெடிமருந்துகளை கடத்த ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் அவை நேரடி இராணுவ இலக்குகளாக

இருந்ததில்லை. ஆனால் ஒரு விமானத் தளத்தின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, ட்ரோன்களின் துல்லியமான பயன்பாட்டுத் திறன் அதிகரித்துள்ளதையே காட்டுகிறது. இலக்கு ஒரு விமானப்படைத் தளமாக இருப்பது கடுமையான பொருட்சேதத்தை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.

தாக்குதல் நோக்கம் முழுமையாக நிறைவேற்றப்படாவிட்டாலும், பாகிஸ்தான் எல்லைக்கு நெருக்கமான இந்திய விமானத் தளங்கள் இனி பாதிக்கப்படக்கூடும் என்ற செய்தி தாக்குதல்தாரிகளால் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சிறிதான ட்ரோன்கள் குறைவான உயரத்தில் பறப்பதால், அவற்றை ரேடார்கள் மூலம் கண்டறிவதும் மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளால் அடையாளம் காண்பதும் சிக்கலானது. தாக்குதல்களுக்கான ட்ரோன்கள் கொடிய விளைவுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன,

அண்மைய எடுத்துக்காட்டாக, 2018 ஆம் ஆண்டில், சிரிய கிளர்ச்சியாளர்கள் சிரியாவில் உள்ள ரஷ்ய இராணுவத் தளங்களைத் தாக்க ட்ரோன்களைப் பயன்படுத்தினர். அதே ஆண்டு, வெனிசுலா அதிபர் நிக்கோலா மதுரோ அவரை நோக்கி பறக்கும் ஒரு ட்ரோன் சிறிது தூரத்தில் வெடித்ததைத் தொடர்ந்து மயிரிழையில் உயிர் தப்பினார்.

2019 ஆம் ஆண்டில் யேமனில் உள்ள ஈரான் ஆதரவு அமைப்பான ஹவுதி போராளிகள் சவுதி எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் உற்பத்தி ஆலைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்.

2020 ஆம் ஆண்டில் நாகோர்னோ-கராபாக்கில் ஆர்மீனியர்களுக்கு எதிராக துருக்கி ஆதரவு அஜர்பைஜான் படைகள் பெரும் வெற்றியைப் பெற்றன. அதற்கு காரணம் துருக்கியின் ட்ரோன்களின் வினைத்திறனான ஒருங்கிணைந்த தாக்குதலே. அவை ஆர்மீனிய படைகளுக்கு கடும் சேதத்தை விளைவித்திருந்தது.

அதே ஆண்டு ஒரு உயர் பதவியில் இருக்கும் இராணுவ அதிகாரியான ஈரானிய ஜெனரல் காசெம் சுலைமானியை கொல்வதற்கு அமெரிக்கா பயன்படுத்தியமை.

அண்மைக்காலமாக லடாக்கில் வான்வழி கண்காணிப்புக்கு சீனர்கள் அதிகமாக ட்ரோன்களைப் பயன்படுத்தியமை.

பல வருடங்களாக அமெரிக்கப்படைகள் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் ஆயுதமேந்திய ட்ரோன்கள் பயங்கரவாதிகளை ஒழிக்கப் பயன்படுத்தியது. இவ்வாறு...

ஒரு இராணுவக் கட்டமைப்பில் பல கூறுகள் இருப்பதுபோல் ட்ரோன் திரள்கள் இப்போது ஒரு நாட்டின் இராணுவ ஆயுதக் களஞ்சியத்தின் ஒரு பகுதியாகும். இந்தியாவும் கடல் பாதுகாப்புக்காக அமெரிக்காவிலிருந்து ஆயுத ட்ரோன்களை வாங்கியது. வாங்குவதற்கான பல ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட்டது.

புதிய பாது காப்புச் சவாலை திறம்பட எதிர்கொள்ள தனது ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு முறைமைகளின் அமைப்பு ட்ரோன்களை பயன்படுத்தியுள்ளதை இந்திய பாதுகாப்பு தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் விமானப்படைத்தளத்தில் நடைபெற்ற தாக்குதலின் பின்னணியிலும் அந்த அமைப்பு இருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாத தாக்குதல்களின் புதிய முறைகளை எதிர்ப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

தொழில்நுட்பத்தால் இயக்கப்பட்ட புதிய முறைமையிலான நாசவேலை மற்றும் வன்முறை வடிவங்கள் பயங்கரவாதிகளின் செயற்திறன்களாய் அதிகரிக்கும் போது அவை அவர்களின் செலவுகள் மற்றும் தங்கள் அமைப்புக்களையும் அடையாளம் காணும் அபாயத்தைக் குறைக்கின்றன. அதேசமயம், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் வழக்கமான கருவிகளை விடப் புதிய கருவிகளை பாதுகாப்பு அமைப்புகள் கண்டுபிடிக்கும் வரை நிலைமை சிக்கலானது. ஏனெனில் போதுமான திறமையும், தேர்ச்சியும் உள்ள தனி நபர் கூட இத்தகைய தாக்குதல்களை நடத்தலாம். ஆயுதம் ஏந்தக்கூடிய தொழில்நுட்பத்தின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தற்போதைய சர்வதேசக் கட்டமைப்பான ட்ரோன் எதிர்ப்பு ஏற்பாடு மற்றும் ஏவுகணைத் தொழில்நுட்பக் கட்டுப்பாடு போன்றவை வளர்ந்து வரும் சூழ்நிலையில் பெரும்பாலும் பயனற்றவை.

2001 ஆம் ஆண்டில் பயணிகள் விமானங்களை ஏவுகணைகளாக மாற்றுவதில் இருந்து, பயங்கரவாதம் வெகுதூரம் சென்றுவிட்டது, அது அடுத்த இடத்திற்கு எங்கு செல்லும் என்பதை முன்னறிவிக்க முடியாது. சவாலை சமாளிக்க மேம்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்பங்களின் வளர்ச்சி வரிசைப்படுத்தல் குறித்த ஒருமித்த கருத்து தேவை. இந்தச் செயற்பாட்டில் இந்தியா மாத்திரமல்ல, அமைதியை விரும்பும் அனைத்து நாடுகளினதும் ஏகோபித்த வகிபாகம் இனிவரும் காலங்களில் அவசியமாகின்றது. இந்தச் சவால்களைத் திறம்பட எதிர்கொள்வதன் மூலம் மட்டுமே, நவீன தொழில்நுட்பத்தின் விளைவாகக் கிடைத்திருக்கும் ட்ரோன்களை மனித குலத்தின் நலனுக்காக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த முடியும். ■

ஆளில்லா விமானங்கள்

ட்ரோன் என்றால் ஆளில்லாத சிறிய விமானம் என்று பொருள். ட்ரோன்களில் பல வகைகள் இருக்கின்றன. தொடக்கத்தில் இவை ராணுவச் செயல்பாட்டிலும் உளவுப் பணிகளிலும்தான் பயன்படுத்தப்பட்டுவந்தன. மற்றும் விண்வெளி ஆராய்ச்சிக்காகவும் மேம்படுத்தப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த வகை ட்ரோன்கள் மக்கள் மயப்பட்டு தனிப் பிரிவாகிவிட்டன. சிவிலியன் ட்ரோன்கள் எனப்படும் அன்றாடப் பணிகளுக்கான ட்ரோன்களில்தான் மேற்குலக நாடுகளில் பரவலாகக் கவனம் செலுத்தப்பட்டது.

மென்பொருள், செயலி மூலம் இவற்றை இயக்கலாம். ட்ரோன்கள் பேட்டரி மூலம் இயங்குகின்றன. அடிப்படையில் இவை இரண்டு வகைப்படும். நிலையான இறக்கைகள் கொண்ட விமான ரகம், சுழலும் இறக்கைகள் கொண்ட ஹெலிகாப்டர் ரகம். சுழலும் சக்கர வகையில் நான்கு சக்கரங்கள், ஆறு சக்கரங்கள், எட்டுச் சக்கரங்கள் கொண்ட காப்டர்கள் உள்ளன. பெரும்பாலும் சிவிலியன் பயன்பாட்டில் இந்த வகை காப்டர் ட்ரோன்களைத்தான் பார்க்க முடிகிறது. இவற்றின் தலைப் பகுதியில் சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கும். அவை தரும் வேகத்தில் இவை பயணிக்கும்.

மென்பொருளைக்கொண்டு பறக்கும் திசை உள்ளிட்ட செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தலாம். எந்த இடத்துக்கு வந்துசேர வேண்டும், எங்கே செல்ல வேண்டும் எனும் கட்டளைகளைச் செயலி மூலம் பிறப்பிக்கலாம். இந்த கட்டளைகளை ஆளற்ற அந்த வாகனம் செயற்படுத்தும்.

எழுத்தின் இயங்கியல்

மொழியும் அர்த்தமும்

● ந.மயூரரூபன்

எழுதுபவர் → எழுதுபவரின் மொழி → பிரதி → வாசிப்பவரின் மொழி → அர்த்தம் என்கிற புரிதல் பாதையில், எழுதுபவரினூடாக எழுதுபவரின் மொழி எவ்வாறு பிரதிக்குள் அமைகிறது என்பதை மிகச் சுருக்கமாகப் பார்க்க முடிந்தது.

அதேபோல் உருவாக்கப்பட்ட அல்லது உருப்பெற்ற பிரதியிலிருந்து வாசிப்பவர் தனக்கான அர்த்தங்களைக் கண்டு கொள்கிற அல்லது அந்த அர்த்தங்களை உருவாக்குகின்ற அமைப்பு என்பது பிரதியின் முழுமைக்கு மிக இன்றியமையாததாகும். வாசிப்பவரின் மொழி என்பது எப்போதும் எழுதுபவரின் மொழியாக இருப்பதற்குச் சாத்தியமில்லை. அந்த மொழிக்கு மிக நெருக்கமாக அவர் வர முடியும் அல்லது மிகத் தொலைவில் நின்று விட முடியும். எவ்வாறெனினும் அந்த மொழி கண்டடைகின்ற அர்த்த வேறுபாடுகளிலேயே பிரதியின் இயக்கம் அதாவது எழுத்தின் இயக்கம் இருக்கிறது. எழுதுபவரின் மொழியை மிக அச்சொட்டாக வரிக்கு வரி வாசிப்பவர் உணர்ந்து கொள்வது என்பது இயந்திரத் தன்மை வாய்ந்தது. அது மனித இயல்புக்கு அப்பாற்பட்டது. ஒவ்வாரு மனிதனின் இயல்பும் ஒவ்வாரு வகைமையைக் கொண்டது.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும்

- தனித்தனிப் பூமி உள்ளது.
- தனித்தனி காற்று
- தனித்தனியாக மரங்கள், செடிகள், பறவைகள்
- பிரத்தியேகமான வர்ணங்கள்
- வேறு யாரும் பிரதி எடுக்கமுடியாத நினைவுகள், சம்பவங்கள், கற்பனைகள்
- தனியான அரசியற் சித்தாந்த நம்பிக்கைகள்
- பாலியல் இச்சைகள்
- சமூக வாழ்க்கை தொடர்பான எண்ணங்கள்
- கடவுள், மனிதன், இயற்கை என அனைத்தும் தொடர்பான மதிப்பீடுகள்

என நாம் பார்க்கின்ற அனைத்துக் கூறுகளும் தனித்தனியானவையாக, ஒவ்வொரு மனிதனுக்கும் பிரத்தியோகமானவையாக அமைந்து விடுகின்றன. அவ்வாறிருக்கும் போது மொழியின் வழியாகப் பிரதியைக் கண்டடை கின்ற ஒருவனுக்கு, அவனுக்கான பிரதிதான் கிடைக் கிறது. எழுதியவனின் பிரதி அல்லது வாசிக்கின்ற இன் னொருவர் கண்டடைகின்ற பிரதி கிடைப்பதற்கான சாத்தியங்கள் இல்லை.

நாங்கள் மொழி என்பது அர்த்தங்களை உருவாக்குகின்ற ஒன்று என்பதை அறிகிறோம். மொழி எனக்கான அர்த்தத்தையும் உனக்கான அர்த்தத்தையும் அவனுக்கான அர்த்தத்தையும் உருவாக்கிக் கொள்கிறது. சில சந்தர்ப்பங்களில் எங்களுக்கான அர்த்தங்களையும் அவர்களுக்கான அர்த்தங்களையும் உருவாக்கவும் கடமைப்பட்டிருக்கிறது. இன்றும் விளக்கமாக நாம் இதனைப் புரிந்து கொள்வதெனில் பின்வருமாறு நோக்க முடியும். அர்த்தங்கள் இரண்டு தளங்களில் உணரப்படக்கூடியது.

1. தனிமனித நிலையில் உணர்வது
2. கூட்டு மனித நிலையில் உணர்வது

இங்கு தனிமனித நிலையில் உணர்வது என்பது, ஒரு தனிமனிதன் தனது அனுபவங்களின் ஞாபகங்களை ஒரு குறித்த எழுத்திலிருந்து அடையாளப்படுத்திப் பெற்றுக் கொள்வது.

"திருவெம்பாவை நாட்களை ஓட்டிவந்த ஒரு வெள்ளிக் கிழமை, புத்தம் புதிய பனிமலராக, நீண்டு நெளிந்த பஸ் கியூவில் " அவள் நின்றாள்.கலகலப்பான காலையில் உடலைத்தடவி புத்துணர்ச்சி ஊட்டிச் செல்லும் இனிய குளிர்ந்த தென்றலில் அருவியாகச் சொரியும் சுவர்ப்பாத்தில் குளிர்த்து ஈரச் சுவடு மாறாமல் அவள் நின்றாள். ஈரம் கலையாத தலையை வாரி, நேர்வகிடிட்டு, ஒற்றைப் பின்னலாகப் பின்னி, பச்சை றிபன் கட்டியிருந்தாள். என்கிற காட்சி வர்ணனை ஒன்று கும்பிளான் ஐ.சண்முகம் சிறுகதை ஒன்றில் வருகிறது.

இதில் வருகின்ற பஸ்தரிப்பிடம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பஸ் தரிப்பிடத்தின் காலைக் காட்சியை ஞாபகப்படுத்தக் கூடியது. அது யாழ்ப்பாண பஸ் நிலையமாக, மட்டக்களப்பு பஸ் நிலையமாக, மதுரை பஸ் நிலையமாகவும் அவ்வவ் மனங்களில் காட்சியை விரிக்கக் கூடியது. அங்கு வர்ணிக்கப்படுகின்ற பெண்ணின் தோற்றத்தில் ஒவ்வொருவருக்கு தமது மனதில் நின்ற ஒரு பெண்ணின் முகம் சட்டென ஞாபகம் வந்து போகும்.

இது ஒவ்வொரு தனிமனிதனும் தமது தனித்தனி அனுபவங்களில், எண்ணங்களில் தாம் கண்டவற்றை ஒரு வாசிப்பிலிருந்து உருவாக்கிக் கொள்வது.

"அவர்களுடைய முற்றத்து நிலத்தில் ஒரு தறித்த வாழைத்துண்டு ஊன்றப்பட்டிருந்தது. மேலே நெய் தழும்பத் தழும்ப ஒரு தீச்சட்டி அதற்குள் நெய்யூற்றியிருந்த துணிப்பந்தில் வெள்ளையன் தீ மூட்டினான். சொற்ப நேரத்தில் நெருப்பு மூண்டெழுந்தது. அது துமித்துக் கொண்டிருந்த மழைத் துமிகளை எரித்தவாறே மிளாசியது. நெருப்பின் செம்மை முகத்தில் படர அவன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியவாறு அமைதியாக நின்றான். அத்தாருக்கு கண் கலங்கிற்று."

இது சயந்தனின் ஆதிரை நாவலில் வருகின்ற சில வரிகள். இந்த வரிகள் ஒரு இனத்தின் கூட்டு நினைவை ஞாபகப்படுத்துகின்ற வரிகள். மாவீரர் தின நிகழ்வை ஒரு இனத்தின் குழும நிகழ்வாக அடையாளப்படுத்தி ஞாபகப்படுத்துகின்ற எழுத்துகள்.

மேற்குறித்த வகையில் மொழி என்பது அர்த்தங்களை மீளுற்பத்தி செய்கின்றமையினையும் நாம் உணர் கின்றோம். ஒரு சமூகத்திற்கு, ஒரு குழுவிற்கு, ஒரு இனத்திற்கு மொழியால் மேற்கொள்ளப்படுகின்ற அர்த்த மீளுற்பத்தி என்பது அவசியமாகப்படுகிறது. அது அந்தக் குழுவின் நம்பிக்கையை, கூட்டுணர்வை, தேசிய பக்தியை, அரசியல் நெருக்கத்தை, மக்களை ஒன்று திரட் டுகிற பணியை உருவாக்க வல்லது.

இந்த அர்த்த மீளுற்பத்தி என்பது ஒரு நிறுவன மயப்பட்ட அமைப்புத் தன்மையை கொண்டது. இந்தப் பணியை தன்னிச்சையாகச் செய்வதற்கு குறித்த குழுவின் பலர் செயற்படுவர். இது இரண்டு தளங்களில் செயற்படக் கூடியது.

1. நம்பிக்கையூட்டும் தளம்
2. அவநம்பிக்கையை அல்லது எதிரான கருத்து நிலையைக்கொண்ட தளம்

இங்கு நம்பிக்கையூட்டும் தளம் என்பது பண்பாடு, விழுமியம், நியமம், மதம், தேசியம், ஐக்கியம், என்கிற அமைப்புப் பண்புகளால் அறியப்படக்கூடியது.

இதற்கு முன்னர் எடுத்துக் காட்டிய குப்பிளான் ஐ.சண்முகன் அவர்களின் சிறுகதைப் பகுதியில் குறித்த பெண் தொடர்பான வருணனை என்பது இந்த பண்பாட்டு அடிப்படைகளால் இனங்காணப்படக் கூடியது.

அதேபோல் சயந்தனின் நாவலின் மேற்குறித்த பகுதியானது தேசியம், ஐக்கியம், என்கின்ற பண்புகளால் அறிந்து கொள்ளக் கூடியது.

உண்மையில் இந்த அர்த்த மீளுற்பத்தி என்பது கூட்டுமனித நிலையில் சமூக அமைப்புத் தொடர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் அல்லது உருவாக்கப்படும் எழுத்துக்களாக காணப்படுகின்றன.

அவநம்பிக்கையைத் தருகின்ற அல்லது இதுவரை பேசப்பட்டு வந்த நம்பிக்கைகள் மீதான விமர்சனமாக வருகின்ற அர்த்த மீளுற்பத்தி நிறையவே உண்டு.



கடவுள் எதிர்ப்பு, மார்க்கிய எதிர்ப்பு, சாதிப்படி நிலைகள் அடக்குமுறைகளுக்கான எதிர்ப்பு, புலியெதிர்ப்பு என எதிர்வு வகை அதிகம் உண்டு. எனினும் அவை தருகின்ற விளைவுத் தளங்கள் வேறு வேறானவை. இங்கு தனி மனிதப் பண்புகளின் அடையாளம் அதிகம் இருக்கிறது. எனினும் அவ் வகை அர்த்த விளைவுகள் ஒரு கூட்டு நிலையை நோக்கி நகர எத்தனிப்பவை.

மொழியை நாம் ஒரு தொடர்பு கொள்ளுகின்ற ஊடகமாகவே பெரும்பாலும் பார்க்கிறோம். அது ஒரு வகைச் சமூகப் பரிமாற்றத் தன்மையை தனக்குள் வைத்திருக் கிறது. எனினும், மொழிக்கும் மனிதனுக்குமான தொடர்பு என்ன? என்பது மிக முக்கியமான கேள்வி மொழி வெறுமனே மனிதனின்றி இயங்க முடியுமா? மனிதனால் தான் மொழிக்கான அர்த்தம் அமைகிறது. மொழியை உருவாக்கிய மனிதன் அதற்கான அர்த்தங் களையும் உருவாக்கினான்.

மனிதனையும் மொழியையும் இணைக்கின்ற ஒரு விடயம் மிக முக்கியமானது. அது அடிமனப் பிரக்ஞை இந்த அடி மனப் பிரக்ஞை தான் மொழிக்கான அனைத்து சாத்தியங்களையும் தருகிறது. மொழியை உயிர்ப்புடன் இயங்கச் செய்கிறது.

இந்த அடி மனப் பிரக்ஞை எதில் உள்ளது. என்கிற கேள்விக்கு பதில், அது அனைத்திலும் உள்ளது அதனைத் தான் நாம் இங்கு பார்த்தோம். வரலாறு, இனம், சாதி, பால், அரசியல், கலை, அறிவியல் என அனைத்துக் கூறுகளும் ஒவ்வொரு தனியனிலும் ஏற்படுத்துகின்ற ஒரு ஆள் மன அறிதல் அவனது மொழியை அதற்குரிய வகையில் வெளிப்பட வைக்கிறது. தனக்குரிய சமூகத்தை, தனக்குரிய நம்பிக்கையை தனக்குரிய வாழ்வைத்தன் இயல்பிலிருந்து எழுத வைக்கிறது. உணர வைக்கிறது. ■

மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமா?

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

குவதற்கு இருக்கின்ற ஒரே ஒரு களமாக வடமாகாணசபையே இருக்கிறது. இரண்டாவது, சர்வதேச அரசியல் இராஜதந்திரிகளை அணுகுவதற்குரிய களமாக இது இருக்கின்றமையாகும். குறிப்பாக வட மாகாணசபைக்கு அந்த அந்தஸ்து உண்டு. வடபகுதியிலிருந்து வரும் இராஜ தந்திரிகள் வடமா காண முதலமைச்சரை சந்திப்பதற்கு ஒருபோதும் தவறுவதில்லை.

இரண்டாவது, இந்தியாவைப் பூட்டுக்குள் வைத்திருப்பதற்கும் மாகாணசபை முறை உதவுகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை முன்னரும் கூறியது போல இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற ஆவணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் தான். இவ் ஒப்பந்தம் உயிர்ப்போடு இருக்க வேண்டுமென்றால் மாகாணசபை முறை செயற்பட வேண்டும். அது அதிகாரங்களுடன் இருக்க வேண்டும் என்பதில் இந்தியாவிற்கு பெரிய அக்கறை கிடையாது. பெயருக்காவது அது இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். இதனால்தான் இந்தியாவை பூட்டுக்குள் வைத்திருக்க மாகாணசபை முறை உதவுகின்றது எனக் கூறப்படுகிறது.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஒரு காரணம். மாகாணசபை தொடர்பாக புதிய சட்டத்தினை நல்லாட்சி அரசு பாராளுமன்றத்தில் அரசு கொண்டுவரும் போது இவர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்திருந்தார்கள். இந்தநிலையில் இப்போது புதியமுறையில் தேல்தலை நடத்துவதா? அல்லது பழையமுறையில் தேர்தலை நடத்துவதா? என்ற குழப்பநிலை அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது. கலப்பு தேர்தல் முறையான புதிய தேர்தல் முறை சிபார்சுகள் பாராளுமன்றத்தில் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டுள்ளன. இக் கலப்புத் தேர்தல்முறை சிபார்சுகள் பாராளுமன்றத்தில் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டுள்ளன. இக் கலப்புத் தேர்தல் முறையை மலையக, முஸ்லீம் கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணியும் கடுமையாக எதிர்க்கின்றன. அவை பழைய விகிதாசாரப்

பிரதிநிதித்துவ தேர்தல் முறையையே மேற்கொள்ளும்படி வற்புறுத்துகின்றன. இதனை மேற்கொள்வதாயினும்கூட பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்படல் வேண்டும். பெரும்தேசியவாதிகளின் எதிர்ப்பினால் அரசாங்கம் இச் சட்டத்தைக் கொண்டு வர தயங்குகின்றது. மாகாணசபைத் தேர்தல் நடைபெறுமென தற்போதைக்கு உறுதியாகக் கூறமுடியாது. ■

தமிழ்க்கவி

என்ன உலகமடா பரமானந்தா?

> எல்லாச் சாமானுக்கும் கொன்றோல் பிறைசாம் எண்டு கவுண்மேந்து சொல்லட்டன் இஞ்ச அவங்கள் அடிச்சான் பிறைஸ் எண்டு தங்கட கணக்குத்தான். உந்த கிளிநொச்சி வவனியாவெல்லாம் நெல்லு விளையுதுதானே. அரிசி விலையக் கேட்டுப்பாரன். கடைக்காரர் கடைக்கும் சேத்துத்தான் விலை சொல்லுறாங்கள்.

ரோட்டால சாரதாதான் போறாள். எடி எப்பன் நில்லடி காசத்தாறன் எனக்கும் ஏதும் கறிபுளி வாங்கிக் கொண்டு வாடி எண்டு கூப்பிடப்போனா அவளெங்க பிள்ளையக் கிணத்துமிதியில கிடத்திப் போட்டு வந்தவள் மாதிரி பாயுறாள். மெய்யே பொடியா..அதென்ன, நான் சந்தைக்கு வெளிக்கிட்டா நாலுபேருக்கு சாமானச் சட்ட வாங்கிக் கொணந்து குடுக்கிறனான்தானே. எனக்கேன் மற்றவை செய்யினமில்லை. ச்சீக் என்ன பிழைப்பப்பா.

ணேய் என்ன புறுபுறுக்கிறியே ணா ஆரும் வாங்கிக் கொணந்தா ஆயிரம் நொட்டை சொல்லுவாய். அதுகள் உதுக்குப் பயந்துதான் போகுதுகள் எண்ணுறான் என்ர சின்னவன். ம் அதெல்லாம் ஒரு காலந்தான் முந்தியொரு காலம் மூத்தண்ணன் இருந்தகாலமெண்டு சாமான் சக்கட்டுகளை ஞாயமாப்பேசி வாங்கின காலம். இப்ப ஏலுமே. எட பொடியா நீ சொல்லுறாய் உவன் அறுணாயிலங் கடையில அந்தநாளையில என்ன சாமான் வாங்கேலாது? பெரியகடைத்தெருவில் என்ன விலை விக்குதோ அந்த விலைதான். இப்ப மூலைக்கு மூலை கடை கிடந்தென்ன ஆளுக்கொரு விலை கண்டியோ!

எல்லாச் சாமானுக்கும் கொன்றோல் பிறைசாம் எண்டு கவுண்மேந்து சொல்லட்டன் இஞ்ச அவங்கள் அடிச்சான் பிறைஸ் எண்டு தங்கட கணக்குத்தான். உந்த கிளிநொச்சி வவனியாவெல்லாம் நெல்லு விளையுது தானே. அரிசி விலையக் கேட்டுப்பாரன். கடைக்காரர் கடைக்கும் சேத்துத்தான் விலை சொல்லுறாங்கள். “சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி” எண்டு அரிசிக்கு ஏன் அடாவடியா விலை போடுறியள். உதில பக்கத்தில கோப்பிறட்டிக்கடையில தொண்ணூத்து மூண்டு ரூவா விக்கிற அரிசிய ஒரு அம்பது நூறு மீட்டருக்க வச்சு நூத்தி இருவது ரூவா விக்கிறியள். எண்டு துருதுருத்த வாய் கிடக்க மாட்டாமல் கேட்டிட்டன். எட அவன் கட்டினசாமானையும் போட்டிட்டு போய் அங்க வாங்கணை எண்டு போட்டான்.

யாவாரஞ்செய்யவெண்டு லைசெஞ்சு கொழுவி கடையத்திறந்தா விக்கிற சாமான வச்சுக்கொண்டு வாங்க வாறவைக்கு இல்லை எண்டு சொல்லுறது, குற்றம். பதுக்கல் குற்றம். நல்லாத் தெரியும் ஆனா என்னேயிற கொரோனா உந்தப்போடு போடுது. கடைக்க கனநேரம் நிக்கிறதே மனச்சாட்சியில்லாத வேலை இதுக்க ஞாயம் பிழக்க ஏலுமே. விட்டிட்டு போய் அவன் சொன்னபடி மற்றக்கடையில வாங்கினது தான். இல்ல உந்த உணவுக்கட்டுப்பாடு, விலைக்கட்டுப்பாடெல்லாம் பாக்க வேண்டியவைக்கு இப்பத்தானே யப்பா வேலை கூட வரும். எங்கதான் போட்டாங்கள். ம்.. பாவம் அவங்களும் கொரோனாப் பயத்தில வீடுவாசலை மனிசிபிள்ளையள பாக்க வேணுந்தானே.

சொன்னாப்போல பொடியள் போன திங்கக்கிழமை செய்தியில கொரோனாத் தொற்றாளர்கள் குறைஞ்சு போச்சினமாம் எண்டொரு தலைப்புச்செய்தி. எனக்கு சில்லெண்டு இருந்துது. பிறகு பாத்தா கொரோனாவைச் சோதிக்க மருத்துவப் பணியாளர்கள் இல்லையாம். அவையும் எரியிற வீட்டில பிடுங்கினது லாவமெண்டு. வேலைநிறுத்தப் போராட்டமாம். லெச்சக்கணக்கில சம்பளம் எடுக்கிறவை போதாதெண்டா அண்டாடம் கூலிக்கு போறவனும் மனிசன்தானேடாப்பா. என்ன சொல்லு அரசாங்க வேலை செய்யிற ஏராளமான பணியாளர்களுக்கு குருச்சந்திர யோகம். வேலையில்லாத ஊதியம். பாவம் உந்த மருத்துவத் துறையில உள்ளவைக்கு தின்னக்குடிக்கவும் நேரமில்லை. அவங்கட வெப்பியாரத்தை எப்பிடி காட்டுறதெண்டு தெரியேல்ல. ஆனா இந்தக் கொடுமையான நேரம் அவங்கள் செய்த சேவையாலதான் ஏதோ உலகம் தப்பிக்கிடக்குது.

பொருளுகள நாங்களே தயாரிக்கிற அல்லது உற்பத்தி செய்யிற காலம் இது எல்லாராலும் ஏலும். ஆனா என்ன செய்யிறமெண்டா முப்பத்திரண்டும் காசைக் குடுத்து வாங்கிப்போட நினைக்கிறம். அங்கதான் நாங்கள் எங்கட சோம்பலால நட்டப்படுறம். பாருங்கோ இந்தியாவில ஏன் தென்னிலங்கைப் பக்கமெல்லாம் மாடித்தோட்டங்களாம்.

பின்ன நானும் விட்டனோ பாரெண்டு கத்தரி, மிளகாய் காய்கறி நட்டுட்டன். இப்ப பக்கத்து வீடுகளுக்கும் குடுக்கேலாமக்கிடக்கு. அது நான் செய்த பேய் வேலைதான்ராப்பா கத்தரி, தக்காளி எல்லாம் நாத்துப் போட்டன். அதை நட்டுப் போட்டுப் பாத்தன் கண்டு மிச்சம். முன்வளவு பின் வளவு பக்கத்து வளவெண்டு எல்லாருக்கு சகட்டுமேனிக்கு அஞ்சு பத்துக் கண்டுகளை குடுத்து நடச் சொன்னன். உந்த மரம் நாட்டு விழாக்களில வரிசாவரிசம் மரக்கன்றுகள் நடப்படுமே அந்த மாதிரி கொண்டு போன அயல் வீட்டுக்காரரும் பட வைச்சிருப்பினம் எண்டே நினைக்கிறாய். அட போடா. அவரவர் கொண்டு போன கண்டுகளெல்லாம் பூத்து காய்க்குதாமடா. நான் இப்ப கத்தரிக்காயள ரெண்டு வீடு தள்ளி இருக்கிற குஞ்சாத்தைக்கு அனுப்பிறன். பின்ன, மரக்கறிக்கடைக்குப் போறதே இல்லை.

உதைச் சொல்லுறாயடா எங்க ஊருக்க தேங்காயெண்ணை உற்பத்தி கொடிகட்டிப் பறக்குதடா. என்ன சந்தையப் பூட்டி வச்சதால தேங்காய் தேங்கிப்போச்சு. வீட்டுக்கு வீடு உள்ளவை இல்லாதவைக்கு கடை விலைக்கும் குறைவா எண்ணை விக்கினமாம். எடஎட அதுக்காக லொறியக் கொண்டு வந்திடாதையுங்கோ. எங்கட பொண்டுகளின்ர கெட்டித்தனத்தைத்தான் சொன்னன்.

‘வரவர மாமியார் கழுதைபோல போறாவாம்’ எங்கட பிள்ளையளின்ர பழக்கவழக்கமும் அப்பிடித்தான் போகுது. “எடேய் அவள் சாரதாவக் கூப்பிடக்கூப்பிட விட்டிட்டுப் போறாளடா.. எப்பன் நல்ல பிள்ளையெல்லே உந்தக் கடைக்கொருக்கா போட்டுவாடா”

“நான் இப்ப நல்லபிள்ளை யெண்ணுவாயெணை! கடையால வந்த பிறகு உனக்குப் பாத்து வாங்கத் தெரியாதோ! கண்ணை எங்க வச்சுக் கொண்டு வாங்கினாய் எண்டு கத்துவாய். தாயே நீயே போய் வாங்கிக் கொண்டு வாம்மா”

அவன் சிலுப்பிப் போட்டு போறான்டா..பின்ன பிள்ளையள பெத்து வளத்துப் பாரன். எட ஒரு வாய்க்கு வெத்தில போடுவமெண்டா சுண்ணாம்பு இல்லையடா அதைத்தான் பாத்து வாங்கேலாதாம். ம்.. நல்ல வேளை இப்பான் வெள்ளையடிச்ச சுவர் அதில தடவெண்ணாமப் போனான். எல்லாம் நேரந்தான்

புலோலியூர் வேல் நந்தன்

புதுப்புனல் - 01

புதிய இலக்கியப் பிரதிகள் அறிமுகம்

நீரூறிய சொற்கள்: துயரத்தின் மையம்

தீம்புனல் பத்திரிகையின் புதுப்புனல் என்ற இப் பகுதியூடாக ஈழத்தில் இருந்து வெளிவந்த, வெளிவந்துகொண்டிருக்கும் இலக்கியப் பிரதிகள் குறித்த அறிமுகத்தை உங்களுக்கு வழங்க இருக்கிறேன்.

அந்த வகையில் இவ்வாரம் புதுப்புனலாக இடம் பெறுவது ந.குகபரன் அவர்களின் முதலாவது கவிதைத் தொகுதியாகிய நீரூறிய சொற்கள் என்பதாகும். ஆகாயம் பதிப்பகத்தின் அழகிய அட்டைப் பட வடிவமைப்புடன் இது வெளிவந்துள்ளது. பெருமளவிற்கு முகநூல் வழி அவர் எழுதிய காத்திரமான கவி மொழியின் தொகுப்பாக இது அமைகிறது.

இத்தொகுப்பைத் தந்துள்ள திரு.ந.குகபரன் தீம்புனல் வாசகர்களுக்கு புதியவர் அல்லர். வாராவாரம் இலக்கியப் பகுதியை தீம்புனலில் வழங்கிக் கொண்டிருப்பவர். அடிப்படையில் இவர் நாடறிந்த மிகச் சிறந்த தமிழ் ஆசிரியர். வளவாளர். புலரி என்ற சிற்றிதழின் ஆசிரியர், புலரி வெளியீடாகத்தான் இந்நூலும் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டார். தான் கற்பிக்கும் பாடசாலைகள் தோறும் மாணவரிடையே வாசிப்பு, எழுத்தாக்க ஆர்வத்தைத் தூண்டுவதில் முன்னின்று உழைப்பவர். தமிழில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் குறித்த ஆய்வு மூலம் முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பெற்று அதனை நூலாகவும் வெளியிட்ட சிறப்புக்குரியவர். பழகுவதற்கு இனிய நண்பன். இவரது கவிமுகத்தின் முகவரியாக மலர்ந்திருப்பதே “நீரூறிய சொற்கள்” என்ற கவிதைத் தொகுப்பாகும். பெருமளவிற்கு இத்தொகுப்பில் உள்ள கவிதைகள் இரக்கமும், அவலமும் கொண்ட சுவையை கட்டிறுக்கமான, படிமமான மொழியில் வெளிப்படுத்தும் சிறப்புக்கொண்ட கவிதைகளாய் அமைந்துள்ளன. இத் தொகுதிக்கு மனம் வடுக்களால் நிரம்பிய கவிமனம் என்ற தலைப்பினில் பிற்குறிப்பு ஒன்றை வரைந்துள்ள இவரது நண்பனும் ஆய்வாளரும் விரிவுரையாள ருமான செல்வமனோகரன் அவர்கள், துயரமே இக் கவிதைகளின் மையமாகிறது என்பதற்கு.

பற்றைகளால் மூடுண்டு கிடக்கிறது.

“சிதறுண்ட பெருங்கனவு....
மன இடுக்குகளெங்கும்
நெய்வற்றி
எரிந்தழிந்த திரிகள்
சுடர்கின்றன”

என்ற கவி வரிகளைச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார். இவரது கவிதைத் தலைப்புகள் கூட வித்தியாசமான தன்மை கொண்டன வாய் அமைந்து சிறப்புப் பெறுகின்றன. எளிய கட்டிறுக்கமான மொழி, யதார்த்தம், சமகாலப் பிரச்சினைகள் என வாசகரை உடன் பயணிக்க வைக்கும் நீரூறிய சொற்களாய் குளிர்ந்த மண்ணாய் எம் வேர்களைப் பற்றிப் பிடிக்கிறது இக் கவிதைத் தொகுப்பு. நீண்ட காலத்தின் பின் காத்திரமான கவிதைத் தொகுதி ஒன்றை வாசித்த அனுபவத்தை இத் தொகுதி தருகிறது.

“மன இடுக்குகளெங்கும்
நெய்வற்றி
எரிந்தழிந்த திரிகள்
சுடர்கின்றன. என்றும்
இருண்ட வழியில்
சுவடுகள் பதிந்த
கரையையும் விழுங்குகிறது
கடல் என்றும்
கனவும் கனவுகளாகத்
தொங்குகிறது
காலம்” - என்றும் இவரது கவிதைகள் எம்மைத் தைக்கின்றன. இவரது கவிப்பயணம் தொடர வாழ்த்துகிறது புதுப்புனல்.

நிலைக்கண்ணாடி

விம்பம் - 05

✍ தரிசனன்

தற்கொலை முடிவு எனும் பெரும் துயரம்

ஒவ்வொரு மனிதனும் இந்த வாழ்க்கையை மகிழ்ச்சியோடு வெற்றிகரமாக முன்னெடுக்கவே விரும்புகின்றான். தான் எதிர்ப்பட நேரிடுகின்ற தடங்கல்களையும் சோதனைகளையும் எப்படியோ வென்று கடந்து நிமிர்ந்த நடையோடு தனது இலக்குகளைச் சென்றடைய வேண்டுமென்றே அவன் ஆசைப்படுகிறான்.

அத்தகைய ஆசைகள் எல்லோருக்குமே சுலபமாக நிறைவேறி விடுவதில்லை. மனிதன் விரும்பிய ஒன்று சுலபமாக நடந்தேறுவது என்பது அவனால் தனித்து நடாத்தி முடிக்கப்படுவதில்லை. அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் எமது தேவைகளுக்காக அடுத்தவர்களை எதிர்பார்க்கவும் அடுத்தவர்களில் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போகிறது. இந்த நிலையில் தமது செயற்பாடுகளில் அடுத்தவர்களின் தலையீடுகள் தவிர்க்க இயலாதவைகளாகிப் போகின்றன. எனவே எமது செயற்பாடுகளில் அடுத்தவர்களின் விருப்பம், அவர்களின் எதிர்பார்ப்பு என்பவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுப் போகிறது.

சில சமயங்களில் நன்றியறிதலின் நிமிர்த்தம் அடுத்தோரை அனுசரித்துப் போகும் கட்டுப்பாடு தோன்றுவதைத் தவிர்க்க முடிவதில்லை. ஆயினும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் சிலவற்றில் எமக்கான முடிவுகளை அடுத்தவர் மேற்கொள்ளுவதும் நாம் எடுக்கும் முடிவுகளை மற்ற வர்களால் மாற்றிக்கொள்ள நேர்வதும் துக்கரமான நிலைமைகளாகி விடும். நமது சமூகத்தின் குடும்ப அமைப் பில் பெற்றோர் பிள்ளைகள் என்ற உறவு நிலைகள் இடையே மேற்சொன்ன நெருக்கடிகள் உருவாவது உண்டு.

பொதுவாக நமது சமூகத்துப் பெற்றோர் கல்வித் துறையில் தமது பிள்ளைகள் சாதிக்க வேண்டும் என விருப்பித் தமது பிள்ளைகளை நிர்ப்பந்திப்பதும் நெருக் கடி கொடுப்பதும் நிகழக் காண்கின்றோம். பெற்றோரின் விருப்பத்திலுள்ள நியாயத்தையும் அடிப்படையில் அது தமது வெற்றிக்கான ஒரு எதிர்பார்ப்புதான் என்று பிள்ளைகள் புரிந்து கொள்ளும்போது மகிழ்ச்சிகரமான விளைவுகளையே நாம் காண்கின்றோம். அது மிக நல்ல விஷயம். ஆனால் சில சமயங்களில் கல்வியில் பெற்றோர் எதிர்பார்த்த நிலைக்கு உயர முடியாத ஒரு பிள்ளை எதிர்கொள்ள நேரிடும்.

உள நெருக்கீடுகள் மிக துன்பகரமானவையாகவும் அவற்றினால் தோன்றும் விளைவுகள் சில சம யம் எதிர்மறையாகவும் துயர் மிக்கவையாகவும் ஆகிப் போவதுண்டு பரீட்சையில் தோல்வியுற்ற பிள்ளைகள் பெற்றோரதும் பெரியோரதும் கடும் போக்காலும் கண்டிப்பாலும் பிள்ளைகள் மனம் உடைந்து தம்மைத் தாமே அழித்துக் கொள்ள நேரிட்ட சம்பவங்கள் பலவற்றை நாம் அறிந்திருக்கிறோம். இது நாம் குறிப்பாக வளர்த்தோரும் பெற்றோரும் பொறுப்பானவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒரு விடயம். பிள்ளைகளின் உணர்வு பற்றி கனவு காணும் உரிமை பெற்றோருக்கு எவ்வளவு தூரம் உண்டோ அவ்வளவு தூரம் பிள்ளைகளின் இயலுமை, இயலாமைகளை அறிந்து வைத்திருக்க வேண்டிய கட்டாயமும் பெற்றோருக்கும் பெரியாருக்கும் உண்டு.

இது விடயமாக மூத்தோர் யாவருமே உணர்ந்திருக்க வேண்டிய ஒரு பேருண்மை உடல்நிலை உளப்பக்குவம் ஒன்றைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் திறன் ஒரு நிலையை எதிர்கொள்வதற்கு வேண்டிய மனமுதிர்ச்சி இவை பற்றி மூத்தோர் புரிந்து கொண்டிருப்பது கட்டாயமாகும். பெற்றோர் பரீட்சைத் தோல்விகளைக் கண்டித்தமையால் தற்கொலை புரிந்து இறந்த பிள்ளைகளின் கதை நமது தேசத்தில் நிறைய உண்டு. இப்படி நிகழ்ந்த போதும் கூட நன்றி கெட்ட பிள்ளை பெற்றோர் பட்ட பாடுகளை மறந்து கோழைத்தனமாய் தன்னை அழித்துக் கொண்டதே என்று கண்டிப்போரைத்தான் நாம் காணுகின்றோம்.

பெற்றோர் இந்தப் பிள்ளைகள் எமக்கு வந்து பிறக்க வேண்டும் என விண்ணப்பித்தவர்கள் அல்லர். எனவே அவர்களின் நல் வாழ்வையும் மகிழ்ச்சியையும் வேண்டி நாமே தான் அதாவது மூத்தோர்தான் விட்டுக் கொடுத்து புரிந்து கொண்டு அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்கள். இது அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை. ■

அன்பின் வழி

✍ நா.கு.கபரன்

“உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்றார் விபுலானந்த அடிகள். மகிழ்வான வாழ்வு அன்பில் உயிர்த்திருக்கிறது. கூடிவாழ்வதற்கான ஆதாரமே அன்புதான். தன்னைப் போல் மற்றவரையும் நேசிக்கும் பண்பு அமையப் பெறின் வாழ்வில் எப்போதுமே வெறுமை சூழாது. இன்னா செய்தார்க்கும் இனியனவே செய்யும் சால்பு அன்பின் வழியதே. இந்த அன்பு உள்ளத்துள் இயல்பாய் ஊறிச் சுரக்க வேண்டும். அப்பொழுதே வாழ்வு சிறக்கும். “அன்பின் வழியது உயிர்நிலை” என்ற வள்ளுவரின் தரிசனம் உயிர்களனைத்துக்கும் பொதுவானது.

மனப்பான்மையின் வெளிப்பாடானது உடல்மொழியில், சொற்களில், செயலில் வெளித் தெரியும். இவை வெளிப்படுவதற்கு முன்பதான உளத்தின் உரையாடல் அகத்துள் அருவமாய் பரவும். தம்முள் முரண்படும். முடிவுதேடும். இந்த உள்ளத்தின் மொழியை ஊடுகாட்டும் திறன் கவிஞர்க்கு உண்டு. அப்படியொரு காட்சி இது.

பகற்பொழுது. வீட்டு முற்றத்தில் முன்னைக் கொடியும் முசுண்டைக் கொடியும் அடர்த்தியாய் படர்ந்துள்ளன. குளிரை இறைக்கும் அப்பந்தற் கீழ் வேட்டைக்குச் சென்று மீண்ட தலைவன் ஆறித் துயில்கிறான். அந்தப் பொழுது நிகழ்ந்த சம்பவத்தை விவரிக்கிறது புலவர் வீரை வெளியனார் எழுதிய புறநானூற்றுப்பாடல்.

“முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலாத்தூங்கு நீழல்
கைமான் வேட்டுவன் களைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்துவிளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி யாவதும்
இல்வழங் காமையின் கல்லென ஒலித்து
மான்அதள் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியொடு இதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவுஆர்ந் திட்ட முழுவள் ஞரம்
இரும்பே ரொக்கலொடு ஒருங்குஇனி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே”

ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளவன் யானைவேட்டையாடும் மறவன். அந்தப் பொழுதில் மான்களைப் பிடிப்பதற்காகப் பழக்கப்பெற்ற இளம்பெண்மானும் (பார்வை மான்) கலைமானும் புணர்ந்து மகிழ்ந்து களிக்கின்றன. முற்றத்தில் மான் தோலில் பரப்பிவைத்துள்ள தினை அரிசியை கானக் கோழிகளும் காடை கௌதாரிகளும் தின்று திளைக்கின்றன. அதைக் கண்ணுற்ற தலைவியின் உள்ளம் தடுமாறுகிறது.

ஒருபுறம் இயற்கையில் கூடித்திளைக்கும் மான்கள், அருகே அயர்ந்து தூங்கும் கணவன், உணவுக்காக உலர்த்திய தினையரிசியை உண்ணும் பறவைகளை விரட்ட முயன்றால் மான்களின் மகிழ்ச்சி கெடும். தன் தலைவனின் துயில் கலையக்கூடும். அவள் நேயம் மிக்கவள். தினையைக் காக்க முனைந்து ஏனையரின் மகிழ்வைப் பறிக்க அவள் விரும்பவில்லை. ஓசையற்றவாறு ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொள்கிறாள்.

அத்தலைவி தன்னை நாடி வருவோரை அன்போடு உபசரிப்பவள். சந்தனக் கட்டையில் மூட்டிய தீயில் இறைச்சியை வாட்டி ஆரல் மீனின் மணங்கமழ சமைத்து உபசரிக்கும் பாங்குடையவள். பரிசிலர்க்கு குறைவுறாது கொடையளிக்கும் தன்நேயம் மிக்க அரசனைப் புகழ்பவள். பெருஞ் சுற்றமோடு அங்கு வந்த பாணனை உணவு உண்டு ஏகுமாறு வேண்டுகிறாள். அவளின் ஈரஉள்ளம் இலக்கியத்தில் வாழ்கிறது.

காட்டில் இரண்டு மான்கள் தாக மிகுதியால் நடந்து வருகின்றன. நீரைத் தேடிய நெடும் பயணத்தில் ஒரு வெளிச்சம். தூரத்தே ஒரு சுனை தெரிகிறது. வாடிச் சோர்ந்த கலைமானினதும் பிணைமானினதும் நடையில் புத்துயிர்ப்பு. நீரை நெருங்கும் வேளை அதன் அளவை அளந்து விடுகிறது கலைமான். இங்குள்ள சிறிதளவு நீர் ஒருவரின் தாகம் தணிப்பதற்கே போதுமானது. இதற்கு யாது செய்யலாம் என்ற அதன் உணர்வின் மொழியை விரிக்கிறார் ஐந்திணை ஐம்பது புலவர்.

“சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டி கலைமான்
தன் கள்ளத்தின் ஊச்சும் சுரம் என்பார் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி”

இருக்கும் நீரின் அளவோ சிறிது. எனவே இதனைத் தான் குடிக்காது தவிர்த்து தன் துணை யைக் குடிக்குமாறு கோரினால் அதனைப் பிணைமான் நிராகரிக்கும். எனவே இதற்கு வழிதான் என்னே என்று எண்ணிய கலைமானிற்கு ஒரு எண்ணம் உதித்தது. தானும் உண்ணுவது போல பாவனை செய்வது பிணைமானிற்கு சந்தேகம் வராதவாறு நீரை அருந்தாமல் வெறுமனே அருந்துவதுபோல ஒலி எழுப்புவது. இதனால் தன் துணை எந்த மனத்தடங்கலும் இல்லாது நீரருந்தும். தன் நோக்கமும் நிறைவுறும். எண்ணம் செயலானது. நீரருந்திய பிணைமானின் வயிறு நிறைந்தது. கலைமானின் உள்ளம் குளிர்ந்தது. இதுவே காதலரின் அன்புநெறி என்றார் புலவர்.

மான்கள் நீரருந்தும் காட்சி புலவரின் சிந்தனையை இவ்வாறு சிந்திக்க வைத்துள்ளது. இதன் ஊடாக வெளிப்படும் அகக்காட்சி வாழ்க்கையில் நிலை பெற்றிருக்க வேண்டிய அன்பை அழுத்தமாக உரைத்துள்ளது. இந்த அன்பினைத் தாழிட்டு அடைக்க முடியாது. அது எப்போதும் பெருகும் ஜீவ ஊற்று. ■



தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி தமிழர்களின் மீட்சிக்கானதா?

“வடக்கைப் பொறுத்தவரையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்பு வலுவானதாக இருக்கப்போவ தில்லை என்பதை அரசும் சீனா வும் நன்றாகவே அறிந்திருகின் றன. இப்போதிருக்கின்ற அரசு தன்னிச்சையாகச் செயற்படும் அரசு, அது எல்லாவற்றையும் இராணுவ மயப்பட்டே சிந்திக்கின் றது. எனவே பெரும்பாலும் அது எந்தத் தீர்வையும் இராணுவ வழிமுறையிலேயே தீர்க்கவும் முயலும். கொரோனாவை அரசு கையாளும் முறையிலிருந்தே இதனை விளங்கிக் கொள்ள முடியும்.”

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சி, கடந்த காலங்களைப் போலவே சவால் கள் நிறைந்ததாக இருக்கப்போகிறது. ஏற்கனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே தங்களுக்குள் முரண்பட்டுக்கொண்டு இருக்கின்ற நிலையில் புதிதாக தொடங்க விருக்கும் கூட்டு, ஆரோக்கியமான கூட் டாக இருக்குமா? என்ற சந்தேகம் எழு கின்றது. கூட்டமைப்புக்குள் நிலவுகின்ற முரண்பாடுகளே இப் புதிய கூட்டின் உருவாக்கத்திற்குக் காரணம் எனவும் கருத இடமிருக்கின்றது. கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்காத ஓரளவுக்கு செல்வாக் குள்ள கட்சிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியையும் கையாள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. ஏலவே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பது பிற தமிழ்க்கட்சிகளால் தீண்டத்

தகாத கட்சியாகவே பார்க்கப்பட்டு வருகின்றது. அது அரசின் பங்காளிக் கட்சியாகவும் இருக்கின்றது. ஆகவே ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி தன்நிலைப்பாட் டிலிருந்து இணங்கி வருவது சாத்திய மில்லை என்பதோடு பிற தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஈழமக்கள் ஜனநாயக் கட் சியை இணைப்பதை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியை புறமொதுக்கிவிட்டே தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டு அமையவிருக்கின்றது. மறுபுறம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருக்கின்றது. முன்னணிக்கும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்புக்குமான முரண்பாடுகள் நீண்ட காலமாகவே நிலவி வருகின்றன. இவ் விரண்டு கட்சிகளும் தேர்தல் காலங் களில் ஒன்றையொன்று கடித்துக் குதறியே வாக்குகளைச் சேகரிக்க முனைந்திருக்கின் றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியை இணைப்பதிலும் சவாலே இருக் கப் போகின்றது. கூட்டமைப்பின் நடை முறை அரசியற் தோல்விகளின் விளை வாக உருவாகிய கட்சியாகவே தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் இருக்கிறது. ஏற்கனவே கூட்டு முயற்சிகள் இருக்கின்ற நிலையில் இப் புதிய கூட்டு நிச்சயமாக தனித்துவமான ஒன்றாக இருக்கின்ற போதே அர்த்தமான கூட்டாக இருக்க முடியும். செல்வம் அடைக்கலநாதனால் தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டி ருந்தது. எனினும் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.சிறிகாந்தா, அனந்தி சசிதரன் மற் றும் பொ.ஐங்கரநேசன் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை.

வடக்கில் சீனாவின் ஆதிக்கம் தலை தூக்குகின்றது என்ற பிரச்சினை வலுப்பெ றுவதற்கு முன்பே தமிழ் மக்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் அதிகமா-கவே இருக்கின்றன. அப்போதெல்லாம் இவை எந்தளவுக்கு இணைந்து செயற் பட்டிருக்கின்றன என்பது கேள்விக் குரியதே. ஆக சீனாவின் ஆதிக்கத்தை முதன்மைப் படுத்திய இந்த இணைவு என்பது பெயரளவிலான முயற்சியாக அமையுமே தவிர ஆக்கபூர்வமானதாக அமையாது. முதலில் இந்தக் கட்சிகள் தமக்குள் ஜனநாயகப் பண்புகளை கட்டியெழுப்ப வேண்டும். அடிப்படை யில் இவற்றுக்குள் துளிகூட ஜன நாயகப் பண்பில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ ரசுக் கட்சியினர் தம்மையே முன்னிலைப் படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு பங்காளிக் கட்சிகளால் தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன. அது போல முன்னணிக்குள்ளும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரசை முன்னிலைப்படுத்தியே சிந்திக்கின்றார் என்ற முரண்பாடுகளும் இருக்கின்றன. இந்த நிலையில் அடிப்படையில் ஜன நாயகப் பண்புகளற்ற கட்சிகளின் இணைவு என்பது ஜனநாயகத் தனத் தோடு மக்கள் பிரச்சினைகளை அணுகும் என எதிர்பார்க்க முடியாது. முதலில் இவை தாம் மக்களோடு இருக்கின்றோம் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண் டும். எனவே தங்களைத் சுயவிமர்சனத்துக் குள்ளாக்கி தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். இதிலிருந்தே புதிய கூட்டு முயற்சி முன்னெடுக்கப்பட வேண் டும். இதற்கு புதிதாக உருவாக்கப்படும் கூட்டுக்குள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்கள் நலன் சார்ந்த கொள்கை வகுப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

செயல்திறன், சமூக அக்கறை கொண் டவர்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

பிரதேச வாரியாக அப் பிரதேசங்க ளின் நலன் சார்ந்து செயற்படக்கூடிய மக்கள் அமைப்புக்களைக் கட்டமைக்க வேண்டும்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத் துவதற்கான பொருளாதாரத் திட்டங் களை வகுக்க வேண்டும்.

திறந்த மனதுடன் துறைசார்ந்த நிபு ணர்களின் உதவியை நாடுதல் வேண்டும்.

இவை சாத்தியமாகாத போது கட் சிகளின் இணைவு என்பது வெறும் பெய ரளவிலான இணைவாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வடக்கைப் பொறுத்த வரையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்பு வலுவானதாக இருக்கப் போவதில்லை என்பதை அரசும் சீனாவும் நன்றாகவே அறிந்திருகின்றன. இப்போதிருக்கின்ற அரசு தன்னிச்சை யாகச் செயற்படும் அரசு, அது எல்லா வற்றையும் இராணுவ மயப்பட்டு சிந்திக் கின்றது. எனவே பெரும்பாலும் அது எந்தத் தீர்வையும் இராணுவ வழிமுறை யிலேயே தீர்க்கவும் முயலும். கொரோ னாவை அரசு கையாளும் முறையி லிருந்தே இதனை விளங்கிக் கொள்ள முடியும். சுகாதாரத் துறையினரின் கருத் துக்களை செவிமடுக்காது அது தன்னிச் சையாகச் செயற்படுவது கொரோனா தீவிர நிலையை அடைந்ததற்குக் கார ணம் என பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. இந்த நிலையில் சீனா மீது காட்டப்படுகின்ற மக்கள் எதிர்ப்பை அது எப்படிப் கையாளும் என்பது ஊகிக்கக் கூடியதே. இதில் எப்படியோ நெருக்கடிகளையும் பாதிப்புக்களையும் சந்திக்கப்போவது மக்கள்தான். குறைந்த பட்சம் மக்களால் சுயமாக முன்னெடுக்கப்ப டுகின்ற எதிர்ப்புக்களையும் திரண்ட தாக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான கட்சிகளோ கட்சி சாராத அமைப்புக் களோ இல்லாமல் இருப்பதென்பது தமிழர் அரசியலில் பெரிய குறைபாடா கவே இன்றளவும் பார்க்கப்பட்டு வரு கின்றது.

யுத்த காலத்தில் மீனவர்கள் நெருக் கீடுகளைச் சந்தித்ததைப் போலவே யுத்த முடிவின் பின்னும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். தென்னிலங்கை, தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் கப்பல் எரிவு, சீனாவின் இறால் வளர்ப்பு மையங்கள், கொரோனா என தொடர்ச் சியாக பாதிப்புக்கு உள்ளாகி வருகின்ற னர். கடல் தொழில் அமைச்சரும் தமிழ ராகவே இருக்கின்றார். என்ற போதும் அரசின் நிலைப்பாட்டை அவரால் மீறிச் செயற்பட முடியாது என்பது வெளிப் படை. இந்த நிலையில் தமிழ்த்தேசியக் கட்சிகளும் எந்தளவுக்கு முனைப்போடு மக்களுக்காக குரல்கொடுக்கப் போகின் றன என்பதும் கேள்வியாகவே இருக் கின்றது. சீனாவின் பிரவேசம் தொடர் பாகத் தென்னிலங்கையிலும் எதிர்நி லைப்பாடுகள் வலுப்பெற்றே வருகின் றன. இந்த நிலையில் சீன எதிர்ப்பு என் பது பல வழி களில் சவாலுக்குரிய ஒன்றா கவே அமையப் போகின்றது. வெறும் ஊடக அறிக்கைக ளால் கடந்து போகக் கூடிய விடயமல்ல இது.

சீனாவின் நுழைவு என்பது அமெரிக்காவாலும் இந்தியா வாலும் விரும்பப்படவில்லை. இவை இலங்கை மீதான தமது அதிருப்தியை பல வழிகளிலும் வெளிப்படுத்தியே தீரும் என் பதில் ஐயமில்லை. என்ற போதும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு எவ்வாறு அமையப் போகின்றது என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது. இந்தியாவுக்கும் அமெ ரிக்காவுக்கும் விசுவாசமாக இருப்பதன் மூலம் அவற்றினை பயன்படுத்தி இலங் கைக்கு நெருக்கீடுகளைக் கொடுக்கப் போகின்றதா? அல்லது அரசு மீது தென் னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற எதிர்ப் பலையை சாதகமாகப் பயன்படுத்தப் போகின்றனவா? அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் விசுவாசமாக இருப்ப தென்பது கடந்த காலங்களில் எவ்வகை யிலும் பயனளிக்கவில்லை. இவை இரண்டுமே தங்கள் நலனுக்காக தமிழ்க் கட்சிகளைப் பயன்படுத்தவே விரும்பும். இந்தியாவைப் பொறுத்த வரையில் தமிழர் நலம் என்பது அதற்கு ஒரு பொருட்டேயில்லை. எவ்வாறிருந்தா லும் சீனா, இந்தியாவுக்கு எதிராக இலங்கையைத் தளமாகப் பயன்படுத் தாத வரை இலங்கையை இந்தியா பகைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. தென்னிலங்கைக் கட்சிகளு டன் இணைந்து செயற்படுவது என்ப திலும் கசப்புணர்வுகள் அதிகமாகவே இருக்கின்றன. எல்லே குணவங்ச தேரர், சகல இன மக்களையும் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்குத் தயாராகு மாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார். இவ்வாறான கோரிக்கைகள் பலவீனமா னவை என்பது வெளிப்படை. சிறு பான்மை மக்களின் மீது அரசு மேற் கொள்கின்ற அடக்குமுறைகள். ஆக்கிர மிப்புக்கள் குறித்து குரல் கொடுக்காத நிலையில் நாடு வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றது என்னும் கொதிநிலை யில் சிறுபான்மை மக்களை தம்மோடு இணையக் கோருவது என்பது அபத்த மானது. அதேவேளை சிறுபான்மை மக்களை மேலும் சிக்கலுக்கு கொண்டு வருகின்ற தீர்மானமாகவே அமையும். இதனைவிட தெற்காசியப் பிராந்தியத் தில் இந்தியாவின் ஆதிக்கம் வலுவிழந்து போய்க்கொண்டிருக்கின்றது. சீனா தலைதூக்கியிருக்கின்றது. சீனாவை பகைப்பதென்பதும் தற்போதைய நிலையில் சிக்கலுக்குரியதே. பிராந்திய அரசுகளை பகைப்பதென்பது எதிர் காலத்தில் தமிழர் அரசியலிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே இருக் கும். இந்த நிலையில் தமிழ்த்தரப்பு முரண்பாடான மூன்று விளிம்புகளுக் கிடையேதான் செயற்பட வேண்டியிருக் கின்றது. இதைத் தமிழ்த்தரப்புக்கள் எவ் வாறு கையாளப் போகின்றன என்பதில் தான் கட்சிகளின் இணைவின் பலன் தங்கியிருக்கின்றது. தமிழ்த் தரப்பின் இராஜதந்திர நகர்வை வெளிப்படுத்து வதற்கான சந்தர்ப்பமாக இதைக் கருதிக் கொள்ளலாம்.

இந்த இணைவுக்கான அழைப்பை தமிழ்க்கட்சிகள் சரியான வழியில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். மீளவும் மீளவும் வரலாற்றுத் தவறிழைப்பதென் பது தமிழ்க் கட்சிகள் கடந்த காலத் திடமிருந்து எதனையும் கற்றுக்கொள்ள வில்லை என்பதையே காட்டுவதாகி விடும். வரலாற்றிடமிருந்து கற்பதற்கு இன்னும் நிறைய இருக்கின்றது. கடந்த காலங்களில் தவறவிடப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களின் விளைவே இன்னும் தொடர்கின்ற துயரங்களுக்கு காரணமா கவும் இருக்கின்றது. இந்தப் புரிதலோடு இணைந்து செயற்படுவதுதான் முக்கி யமானது. தமிழ்க்கட்சிகள் வாய்ப்பை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றன என பொறுத்திருந்து பார்க் கலாம். ■

அவற்றோரன்ன இவற்றோரன்ன

மாடத்தி

மாற்றுச்சினிமாவின் திசையிலொரு பயணம்



தமிழ்நாட்டின் தென்மாவட்டக் கிராமம் ஒன்றின் காவல் தெய்வம் மாடத்தி. யோசனா என்னும் பதின்ம வயதுப் பெண், மாடத்தி என்னும் காவு வாங்கிய துடியான தெய்வமாக ஆன கதை, வாய்மொழி மரபில் சொல் கதையாக இருக்கிறது. அக்கதைக்குப் பின்னால் இருந்த சாதி ஒதுக்கலையும், பெண்கள் மீது ஆண்கள் செலுத்தும் பாலியல் வன்முறையையும் பார்வையாளர்களுக்குக் கடத்தியிருக்கிறது லீனா மணிமேகலையின் மாடத்தி என்னும் புதுவகைச் சினிமா.

துணிகளைச் சலவை செய்து தருவதற்கெனச் சாதிய இந்(து)தியா உருவாக்கியிருக்கும் சாதியின் பெயர் வண்ணார். அவ்வண்ணார்களுக்குள் புதிரைவண்ணார்கள் தீண்டாமைக்குள்ளான சாதியினருக்குத் துணி வெளுப்பவர்களாகவும், சாவு மற்றும் தீட்டுத்துணி துவைப்பவர்களாகவும் மேலும் ஒதுக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள். அவர்களைக் கண்ணால் கண்டாலே தீட்டு என ஒதுக்கி வைக்கும் சமூகம் இந்தியப் பொதுச்சமூகம். அவர்களின் வாழிடவெளி பெரும்பாலும் நீர்ச்சுரப்புள்ள காட்டுப்பகுதி. இந்தப் பின்னணியிலிருந்து உருவான தெய்வமான மாடத்தியின் கதையை லீனாவின் புதிய சினிமா பொறுப்போடு விரித்துக்காட்டியுள்ளது.

இணையடுக்குதல் கொண்ட திரை மொழி

பரந்து விரிந்த காட்டுக்குள் தாவித்திரியும் காட்டுயிர்கள் ஒவ்வொன்றின் பகுதியாக மாறித்திரியும் இன்னொரு காட்டுயிர் யோசனா என்னும் பதின்மபருவப் பெண். யோசனாவைப் பற்றிய படிமங்களை லீனாவின் சினிமா இப்படித்தான் அடுக்கிக் காட்டுகிறது. காட்டுப் பாதையில் சிறகெனக் கைகளை விரித்துப் பறக்கும் பறவை அவள் தாவித்திரியும் முயற் குட்டிகளுக்குத் தனது உணவைப் பங்கிட்டுப் பாதுகாக்கும் தோழி, ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களைக் குரங்குகளோடு பகிர்ந்துண்ணும் பங்காளி, நீருக்குள் வாலசைத்து நீந்தித்திரியும் மீன்களோடு நீந்தித்திரியும் மீனாக இருப்

பவள். இலவம் பஞ்சு மரத்தில் தொங்கும் இலவம் பஞ்சுக்காயாய்த் தொங்கும் இன்னொரு காய். அதே நேரத்தில் அவளது பருவ வயதுக்கான ரகசியங்களும் கொண்டவள். ஆண்களின் உடலைப் பார்ப்பதில் ஆர்வம் கொண்டவள்.கிளர்ச்சியை உணரும் பருவத்தினள். குரல்களைக் கேட்கச் செவியைத் தருபவள். காட்டுயிர் போல் திரியும் யோசனாவுக்குள் ஒரு பதின்மபருவப் பெண்ணின் உணர்வுகளும் வளர்ந்துகொண்டே இருந்தன என்பதையும் காட்சிகள் இணைநிலையாகக் காட்டிக்கொண்டே இருக்கின்றன. முழுநிர்வாணமாக நீருக்குள் குதிக்கும் ஆடவனின் உடலைப் பார்த்துக் கிறங்கிப் போகும் காட்சியின் ஆழம் இதனை உணர்த்துகிறது.

பதின்ம வயதில் இருக்கும் அவளுக்கு, அவளது அம்மையும் அப்பனும் பாட்டியும் ஊர்க்காரர்களுக்கு அடிமைப்பட்டவர்களாக இருப்பது பற்றியோ, ஒதுக்கப்பட்டு இருட்டு வாழ்க்கை வாழ்வது பற்றியோ பெரிதாக ஒன்றும் தெரியாது. அவர்களைப் போல அல்லாமல், தனது சித்து வேலைகளையும் மாய மந்திரங்களையும் ஊருக்குக் காட்டுவதற்காக இருட்டு வாழ்க்கையைத் துறந்து துறவியாகத் திரியும் தாத்தாவின் மீது ஒரு பிரமிப்பும், வாஞ்சையும் இருக்கிறது. அவருக்கும் இந்தப் பெண் யோசனா, “ சாதாரணப் பெண்ணாக முடிந்து விடப் போகிறவளல்ல தெய்வமாகப் போகிறவள்” என்ற முன்னறிவு இருக்கிறது..

கானுயிர்களாய்க் காட்டுக்குள் அலைந்து திரியும் யோசனாவின் அலைவைப் படிமங்களால் சொல்லும் லீனா, ஊர் மக்களின் நடப்பும் இருப்பும் சாதிய ஆதிக்கத்தாலும், குயுக்தியான தந்திரங்களாலும் ஆனது எனக் காட்டுவதற்குப் பாத்திரங்களை உருவாக்கியிருக்கிறார். தலையாரி அல்லது நாட்டாமை, அவர் சொல் கேட்டு நடக்கும் சாதிஜனம், அவரது செயல்பாடுகள் மீதும் கேள்விகள் கொண்ட அடுத்த தலைமுறை இளைஞர்கள் என உருவாக்கப்பட்ட பாத்திரங்களுக்குள் சாதித்திமிரும், ஒழுங்கற்ற பாலியல் இச்சைகளும் கொண்டவர்கள் ஆண்கள் என முன்வைக்கிறது.

படத்தின் கட்டமைப்பு

கடந்தகாலத்துக் கதையை, நிகழ்காலத்து மனுசிக்கு - புதுதாய்க் கல்யாணமாகித் தனது கணவனின் காவல் தெய்வமான மாடத்தி கோயிலுக்கு வந்தவளுக்கு- ஓவியங்கள் வழியாகக் கடத்தும் சொல்முறையைப் படத்தின் சொல்முறையாகக் கையாண்டுள்ளார். அழுக்கு மூடையோடு விடியாத இரவுப் பொழுதில் துணிவெளுக்கும் ஆற்றுத்துறையை நோக்கிச் செல்லும் புதிரை வண்ணாத்தியும் அவள் கணவனும் நடக்கும் ஓவியத்தை முதல் ஓவியமாக்கி, கண்ணவிந்த ஊர்க்காரர்களின் கூட்டத்தைக் கடைசி ஓவியமாக்கிக் கதையை நிகழ்த்திக் காட்டும் சினிமா, அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவனின் வாரிசே அந்தப் பெண்ணின் கணவனும் என்பதாகக் காட்டுகிறது. தனது காவல் தெய்வமான மாடத்தி கோயிலுக்குப் புதுமனைவியை அழைத்துப் போகும் கணவனின் வெள்ளைச் சட்டையில் பதிந்த குங்குமத்தின் தீற்றுகள் ஓவியத்திற்குள் இருப்பவனின் சட்டையில் கிடப்பதின் வழியாக அது உணர்த்தப்படுகிறது.

முதல் ஓவியத்தையும் கடைசி ஓவியத்தையும் இணைத்து ஊரின் சாதி ஆதிக்கத்தின் கதையாகவும் தங்களின் சாவுத்துணிகளையும் தீட்டுத்துணிகளையும் வெள்ளாவியில் வைத்து வெளுத்துக் கொடுத்த புதிரை வண்ணார் குடும்பத்தின் மீது செலுத்தும் உழைப்புச் சுரண்டலையும் பாலியல் அத்துமீறல்களையும் சொல்லிக் கொண்டே போகும் ஓவியச் சிறுவன் எல்லாவற்றையும் ஆறும் மழையுமான நீர்நிலைகள் பொறுமையாகப் பார்த்துக்கொண்டே இருந்தன என்று அந்தப் பெண்ணிடம் சொல்கிறான். தெய்வத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் ஊர்மக்கள் ஒருபுறம் அம்மனாகப் போகும் யோசனாவைப் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கும் போதையேறிய இளையோர் கூட்டம் மறுபுறம் எனக் காட்சிப்படுத்தும் படம், ஒட்டுமொத்தக் கிராமமும் - ஆண், பெண் என அனைவரும் இதற்கு உடந்தை என்பதைக் காட்ட கடைசிக் காட்சியை விரித்துள்ளது.

எந்த நிலையிலும் ஊருக்குள் வராத - இருட்டில் வாழ்ந்த வண்ணாத்தியின் குடும்பம் தன் மகளுக்கு நியாயம் கேட்டு வந்தபோது ஒட்டு மொத்த ஊரும் அவர்களுக்கு எதிராக இருந்தது எனக் காட்டுகிறார் இயக்குநர். தொடர்ச்சியாகப் பெண்கள் இருவரும்

அள்ளித்தூவிய மண் மழையாகவும் காற்றாகவும் மாறிக் கோயிலை இடித்துக் கண்களை அவித்துக் குருடாக்கியது என முடிக்கிறார்.

லீனாவின் விமர்சனம்

கிராமத்து மனிதர்களால் வழிபடப்படும் நாட்டார் தெய்வங்களில் பலவும் கொலை செய்யப்பட்ட மனிதர்களின் கதையோடு தொடர்பு டையன. தனிமனிதர்கள் தங்களின் மனச்சாட்சியைத் தூர விலக்கிவிட்டு, ஊர், சாதி, சமயச் சடங்கு போன்றவற்றால் உருவாகும் கூட்டு மனச்சாட்சியால் நிகழ்த்தப்பெற்ற கொலைகளோடு தொடர்புடையன. கொலையை நிகழ்த் திய கூட்டத்தின் கூட்டு மனச்சாட்சிக்கு ஏற்படும் அச்சவுணர்வே பின்னர் கொலை செய்த பெண்ணை அல்லது ஆணைத் தங்களின் காவல் தெய்வமாகவோ, குலதெய்வமாகவோ ஆக்கிக் கொண்டனர் என்பதை மானுடவியல் ஆய்வுகள் விளக்கியுள்ளன.

மேற்குலகப் பண்பாட்டையும் கீழ்த்திசைப் பண்பாட்டையும் பாரதூரமாகப் பிரித்துக் காட்டும் அடையாளங்களில் ஒன்று தெய்வங்கள் பற்றிய பார்வை. தெய்வ உருவாக்கத்திலும் அவற்றின் மீதான நம்பிக்கையிலும் கிழக்குக்கும் மேற்குக்கும் பெரிய வேறுபாடுகள் உண்டு. பேரமைப்பாக விளங்கும் தேவாலயம் அல்லது புனிதத் தலம் என்ற ஈடுபாட்டிற்குப் பதிலாகச் சின்னச் சின்ன எல்லைகளையும் பரப்பையும் கொண்ட தெய்வங்களை வாழ்க்கையின் பகுதியாக ஆக்கிக் கொண்ட மனிதர்களால் நிரம்பியது கீழ்த்திசைப் பண்பாடு. இந்தப் பண்பாடு இந்தியாவில் மட்டுமல்ல கீழ்த்திசை நாடுகள் பெரும்பாலானவற்றிலும் நிரம்பியிருக்கிறது. அந்த வகையில் லீனாவின் மாடத்தி கீழ்த்திசைப் பண்பாட்டின் மீது கவனத்தைத் திருப்பிய படம். அந்தக் கவனம்,

பேராசிரியர்
அ.ராமசாமி

அதனைப் பாராட்டிப் போற்றிக் கொண் டாடும் கவனம் அல்ல. அதன் மீதான கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ள படம்.

மாற்றை உருவாக்குதல்

நடைமுறையில் செல்வாக்குடன் இருக்கும் வணிக சினிமாவுக்கு மாற்றை முன்வைக்கும் இயக்கநிலை முயற்சிகளுக்கு நீண்ட வரலாறு உண்டு. நவீனத்துவ அரசியலோடு தொடர்புடைய அதன் வரலாறு கடந்த 30 ஆண்டுகளில் துண்டு துண்டாக உடைந்து ஏறத்தாழ முடிந்து விட்டது. அதன் தொடர்ச்சியில் அந்த முயற்சிகளைத் தனிநபர்கள் தங்களுக்குரியதாக ஆக்கிக்கொண்டு வருகிறார்கள். அப்படியொரு தனிநபராக - திரைக்கலைஞராக லீனா தன்னை அடையாளப்படுத்தி வந்துள்ளார். கைக்கடக்கமான படப்பதிவுக்கருவி, கணினிவழி இசைக் கோர்ப்பும் படத்தொகுப்பும் எனப் புதிய தொழில் நுட்பம் வழங்கியுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் அது சாத்தியமாகிறது.

படமாக்கலிலும் தொகுத்தலித்துள்ள நிலையிலும் இடைவெளிகள் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்ட வாய்ப்புகள் உண்டு. அதே நேரம், தேர்வுசெய்த கதைக் களம், படிமங்களாலும் காட்சிகளாலும் அடுக்கும் சொல்முறை, நிகழ்வுகள் நடந்திருக்கக் கூடிய இடங்கள் என்று நம்பக்கூடிய இடங்களிலேயே படமாக்கியுள்ள தனித்தன்மை, அங்கிருக்கும் மனிதர்களையே நடிகர்களாக்கிக் கொண்டு குறைவான பாத்திரங்களுக்கு மட்டும் நடிகர்களின் உதவியை நாடியிருக்கும் முயற்சி போன்ற வற்றின் மூலம் தனது சினிமாவை இப்போதுள்ள வணிக சினிமாவுக்கு மாற்றாக முன்வைத்துள்ளார் இயக்குநர்.

தமிழின் பெண்ணியக்கவியாக அறியப்பெற்ற லீனா மணிமேகலையால் தயாரித்து இயக்கப்பெற்றுள்ள இச் சினிமாவில் இன்னும் சில கவிகளும் வேலை செய்திருக்கிறார்கள். திரைக்கதை மற்றும் வசனச் சேர்க்கையில் யவனிகா ஸ்ரீராமும், பாடல்களின் குரலில் என்.டி.ராஜ்குமாரின் பங்களிப்பும் இருந்துள்ளது. ஊர்ப் பெரியவராக நடித்துள்ள ஓவியர் புருசோத்தமனும், தனது நடிப்பு மூலம் புதிரை வண்ணாரப் பெண்ணின் துயரத்தை முழுமையாக்கியிருக்கும் செம்மலர் அன்னமும் மாற்று நாடக முயற்சிகளில் பங்கெடுத்து வருபவர்கள். பாத்திரங்களாக நடித்தவர்களுக்கும் கிராமத்து மனிதர்களுக்கும் நடிப்புப்பயிற்சி அளித்துப் பங்களிப்புச் செய்தவர் புதுவை நாடகப்பள்ளி மாணவர் கோபி. தொழில் நுட்ப அளவில் பங்களிப்பு செய்தவர்களும் நேரடியாக வணிக சினிமாவுக்குள் இயங்காமல் மாற்று முயற்சிகளில் ஈடுபாடு கொண்டவர்களாகவே அறியப் படுகிறவர்கள். இவர்கள் அனைவரையும் இணைத்துப் படமாக்கிப் புதிய வெளிப்பாட்டுத் தளமான இணை யம் வழியாகப் பார்வையாளர்களுக்குத் தந்துள்ள இயக்குநரின் இந்த முயற்சி முழுமையான மாற்றுச் சினிமாவை நோக்கிய முக்கிய திருப்பம் எனச் சொல்ல வேண்டிய ஒன்று.



உட்கட்டாசனம்

தற்காலத்தில் வேலைத்தளங்களில் மட்டுமின்றி பாடசாலை மற்றும் வீட்டிலும் கூட நாற்காலியில் இருக்கும் நேரம் அதிகரித்துள்ளது. கூடவே உடல், மன ரீதியான பாதிப்புகளும் அதிகரித்துக் காணப்படுகிறது, அதிகரித்த உடல் எடை, நீரிழிவு, இதயநோய், கழுத்து, தோற்ப்பட்டை இறுக்கம் மற் றும் சில வகையான புற்றுநோய்களையும் நீண்ட இருக்கையின் பாதிப்புகளாகக் கண்டிருக்கிறார்கள். இது மட்டுமின்றி மன - அழுத்தம், பதற்றம் போன்ற மனதோடு சம்பந்தப்பட்ட பாதிப்புகளும் அவதானிக்கப்பட்டுள்ளன. எமது முதுகுத்தண்டுவட ஆரோக்கியத் துக்குப் பொருத்த மற்ற வகையில் எமது இருக்கை அமைவதால், முதுகுவலி, தண்டுவடச் சில்லுகள் அமுக் கப்படல் (compression of discs) போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. மனித உடலானது நேராக இருப் பதற்கு என்றே உருவாகி வந்துள்ளது. இருந்தும் பல காரணங்களால் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகி றது. இதற்கு நம் இயற்கையான முள்ளந்தண்டுவட வளைவுகளை அனுசரித்துப் போகும் நாற்காலிகளைப்



பயன்படுத்துவதால் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள லாம்.

எமது இருக்கை நிலையைக் குறைத்து, இயக்க நிலையை அதிகரிக்க பல உபாயங்கள் உண்டு, இவை ஒன்றும் எமக்குத் தெரியாதவையல்ல. மோட்டார் வாகன பாவனையைக் குறைத்து துவிச்சக்கர வண்டியை மீண்டும் உபயோகிப்பதன் மூலம் ஆரோக்கியம் மேம் படுவது நமக்கு மட்டுமல்ல, நாம் வாழும் சூழலுக் குந்தான். பொதுப் போக்குவரத்துகளில் பயணப்படும் போது, நாம் இறங்க வேண்டிய நிறுத்தத்திற்கு முன்பாகவே இறங்கி வீட்டுக்கு நடந்து போகலாம். வேலையில் அதிக நேரம் இருந்து வேலை செய்பவர் கள் அடிக்கடி எழுந்து நடப்பது, உடலை தளர்த்தும் பயிற்சிகளைச் செய்வது என்று சிறிய இடைவேளைக ளை எடுத்துக் கொள்ள வேண்டும். நின்ற நிலையில் கணினியுடன் வேலை செய்யக்கூடிய மேசைகள் தற் போது பாவனை யில் உள்ளது, இளம் வயதினர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நீண்ட நேரம் பார்க் காமல் பாடசாலை விளையாட்டுகள், யோக ஆசனங்க ளைப் பயிலுவதன் மூலம் ஆரோக்கியத்தைப் பேணுவ துடன், படிப்பிலும் திறமையை வெளிப்படுத்த முடி யும்.

நாற்காலியில் நீண்ட நேரம் இருப்பது உடலுக்குப் பல பாதிப்புகளைக் கொண்டு வரும் என்று பார்த்தோம். ஆனால் இருப்பது போல் சிறிது நேரம் பாவனை செய்வது பல நன்மைகளைக் கொண்டு வரும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். யோகாசனத்தில் இதனை உட்கட்டாசனம் என்பர்.

செய்யும் முறை

- கால்கள் சேர்ந்து இருக்க நிமிர்ந்து கைகள் உடலுக்குப் பக்கத்தில் இருக்க தடாசனத்தில் நிமிர்ந்து நிற்க வேண்டும்.
- மூச்சை உள்ளே இழுத்தவாறு கைகளை தரைக்குச் செங்குத்தாக இருக்குமாறு மேலே தூக்க வேண்டும். தோற்ப்பட்டை தளர்வாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- மூச்சை வெளிவிட்டவாறு முழங்கால்களை மடக்க வேண்டும். இயலுமானவரை மட்டும் தரைக்குச் சமாந்தரமாக வரலாம். இந்நிலையில் உடலின் முண்டப்பகுதி கால்களின் தொடைப்ப குதியுடன் 90 பாகை கோணத்தைப் பேணும்.
- கைகளை நேராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வும். முதுகுத்தண்டு நீட்டப்பட்ட நிலையை உணர வேண்டும். கழுத்துப்பகுதி முள்ளந்தண்டின் தொடர்ச்சியான நேர்கோட்டில் இருக்கும்.
- இந்நிலையில் ஆழமான, இயல்பான மூச்சு நிலையை பேண வேண்டும். ஆரம்பத்தில் முடிந்த அளவு நேரம் இருந்து விட்டு, மூச்சை உள் இழுத்தவாறு நிமிர்ந்த நிலைக்கு வந்து, மூச்சை வெளிவிட்ட வாறு தடாசனத்துக்கு வர வேண்டும்.
- ஆசனம் முதன்முதலாக செய்பவர்கள் கால்களுக் கிடையில் சிறிது இடைவெளி விட்டு நின்று செய்யலாம்.
- கால்கள் சமாந்தரமாகவும், முள்ளந்தண்டும் ஆசனப் பகுதியும் நேர்கோட்டிலும், உடல் எடையின் பெரும்பகுதி குதிகளிலும் இருப்பது போன்ற நுணுக்கங்களை ஆசனத்தைச் சரியாகச் செய்து வரும் போது உணரலாம். Chair Pose என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டாலும் சக்திவாய்ந்த ஆசனம் என்பதே இதன் பொருள்.

பயன்கள்

- இந்த ஆசனத்தை சில நிமிடங்கள் செய்வது நீண்ட தூரம் நடப்பதால் கிடைக்கும் பலனைத் தரவல்லது.
- தொடைகள் பலமடைகின்றன.
- முழங்கால்கள் உறுதியடைகின்றன.
- கணுக்கால்கள், இடை, ஆசனப்பகுதி, முள்ளந் தண்டு மற்றும் தோற்ப்பட்டைப் பகுதி உறுதியும் நெகிழ்வுத் தன்மையும் பெறுகிறது.
- சுவாசிக்கும் திறன் மேம்படுகிறது.
- மூட்டு, இடுப்பு, குதிக்கால் வலிகளைக் குறைக்க முடிகிறது.
- நரம்பு மண்டலம் புத்துணர்ச்சி பெறுவதோடு, எமது சக்திநிலையும் அதிகரிக்கிறது.
- மன உறுதி அதிகரிக்கிறது.

யாரெல்லாம் செய்யக்கூடாது - எலும்பு பலவீனமாக உள்ளவர்களும், வயதானவர்களும், உடல் பருமன் மிக அதிகமாக உள்ளவர்களும், குறைந்த இரத்த அழுத் தம் உள்ளவர்களும் வைத்தியரின் ஆலோசனையின் படி, யோக ஆசிரியர் மூலமாக தங்களால் முடிந்த அளவுக்கு இந்த ஆசனத்தைச் செய்யலாம்.

முரளீதரன் நவரத்தினம்
MSc in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

ஏலியன்சின் கதை



UFO (Unidentified Flying) என்பது அமெரிக்காவில் தற்போது பறக்கும் தட்டுக்கள் தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட ஓர் அதிகார பூர்வ அமைப் பாகும். இதன் பொருள் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத பறக்கும் பொருட்கள் எனலாம். தமது அணியுடன் தெற்கு கலிபோர்னியா வான்பரப்பில் சென்று கொண்டிருந்த லெப்டினன்ட் கொமாண்டர் அலெக்ஸ் விண்ணில் விவரிக்க முடியாத நிகழ்வு ஒன்றினைக் கண்டுள்ளனர். இது வேற்றுக்கிரக வாசிகள் தொடர்பில் மீண்டும் விவா தத்தை ஏற்படுத்தியுள்ளது. காற்றைக் கிழித்தபடி மேற்குப் புறமாக மணிக்கு 222 கிலோமீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்த தட்டு வடிவிலான வான் பொருளை அவர்கள் கண்டனர். அதனை வீடியோ வடிவில் படமும் பிடித்தனர். எவ்வளவு வேகமாகச் சென்றும் அலெக்ஸ் குழுவினரால் அதனைப் பின்தொடர முடியவில்லை. இத னைப்பற்றி அலெக்ஸ் பின்வருமாறு கூறுகின்றார். அது மிக மிக வேமாகப் பயணித்துக் கொண்டிருந்தது. அது எந்தப் பக்கம் செல்லும், அதன் சூட்சுமம், உந்து விசை அமைப்பை எங்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை என்கிறார். இவ் நிகழ்வு தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் வானில் ஏற்பட்ட அதிசயம் ஏலியன்சினாலும் ஏற்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? முதன்முதலாக 1947 ஆம் ஆண்டு அமெரிக்க மாநிலமான நியூ மொசிக் கோவில் ரோஸ்வெப் எனும் இடத்தில் உள்ள விவசாயி ஒருவர் முதலில் பறக்கும் தட்டுக்கள் என்று கூறப்பட்ட கருவிகளின் சிதிலமடைந்த பாகங்களைக் கண்டுபிடித்தார். அப்போதிருந்து வேற்றுக் கிரகங்களிலிருந்து வரும் பொருட்கள் குறித்து விவாதங்களும் தொடங்கின. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 இல் விண்வெளித் தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உடு ஒன்று பிரபஞ்சத்தின் ஒரு திசையில் இருந்து வந்த செய்தியைப் பெற்றது. வாவ் (Wow) சிக்னல் எனப்படும் இச் செய்தி ஏறத்தாழ 70 செக் கன்கள் வரை நீடித்தது. பரவசமடைந்த விஞ்ஞானிகள் அச் செய்தி 200 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருந்து வந்ததை உறுதி செய்தனர். அதற்கு உடனடியாகப் பதில் சமிஞ்ஞையும் அனுப்பப்பட்டது. ஆனால் நாம் கொடுத்த பதில் சமிஞ்ஞை அவ்விடத்துக்கு மீண்டும் செல்ல 200 ஆண்டுகள் ஆகும். அதற்கு பின்புதான் அச் சமிஞ்ஞை உண்மையில் வேற்றுக்கிரக வாசிகளால் அனுப்பப்பட் டிருப்பின் நாம் இந்தப் பூமிப் பந்தில் இருப்பது அவர்க ளுக்குத் தெரிய வரும். அதற்கு பின் அவர்கள் ஒளியின் வேகத்தில் வந்தாலும் இன்னும் ஒரு 200 ஆண்டுகள் எடுக்கும். மொத்தத்தில் 400 ஆண்டுகள் என்று கணித் தால் அது வரைக்கும் இந்த பூமி அழியாமல் இருந்தால் எமது ஆறாவது சந்ததி அவர்களுடன் கைகுலுக்கக் கூடும்.

சபா.விஜயகுமார்

வாவ் சிக்னல் இரண்டு நட்சத்திரங்களின் மோதுகையால் ஏற்பட்டதல்ல. சஜிட்டாரியால் நட்சத்திரக் கூட்டங்களி டையே இருந்து தான் அந்த சிக்னல் பூமிக்கு வந்தது. அதா வது அங்குள்ள ஓர் இடத்தில் இருந்து வேறு ஒரு இடத் துக்கு நேரடியாக கருவிகள் மூலம் நடந்த ஒரு உரையா டல் ஆகத்தான் அது இருக்க முடியும். ஆனால் அந்த நேரத்தில் பூமியில் உள்ள ரீசீவர் கருவிகளின் திறன் போதா மையினால் அந்த சிக்னலை பின் தொடர்ந்து அவதானிக்க முடியவில்லை. வாவ் சிக்னல் என்பது ரேடியோ சிக்னலாக இருப்பினும் அதை நிச்சயம் யாரோ அங்கு உருவாக்கி இருக்க வேண்டும். அந்த யாரோ என்பது ஏலியன் களாகத் தான் இருக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய வாதந் தான். ரொக்கட் மூலம் விண்வெளி செல் லும் எல்லா விண்வெளி வீரர்களும் பூமியுடன் இப்படிப் பட்ட ரோடியோ அலைவரிசை மூலமாகவே உரையாடு வார்கள். செவ்வாய்க்குச் சென்ற விண்கலங்கள் செய்திகளையும் புகைப்படங்களையும் அனுப்புவது வாவ் சிக் னலை ஒத்த முறையில் தான். இதே வேளை 1994 யூலை 23 இல் அமெரிக்காவின் கிரீன்பார்ச் விண் வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிந்த டான் மெரிக் அவர்களுக்கு அதிகாலை 3 மணிக்கு ரேடியோ சிக்னல் கிடைத்தது. ஆனாலும் அமெரிக்க அரசு இவ் விடயங்களைப் பெரிது படுத்தவில்லை.பத்திரிகையாளர் கூட்டத்தில் பதிலளித்த அரச அதி காரி அந்தச் சம்பவம் நடந்தது உண்மை தான் ஆனால் அது பற்றி அபிப்பிராயம் எதுவும் கூறப் போவதில்லை எனக் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டார். அப்படியானால் இல்லாத ஒன்று எனக் கருதும் ஏலியன்களுக்காக அவை பற்றிய ஆராய்ச்சிக்காக வருடத்துக்கு 20 மில்லியன் டொலர் பணத்தை ஏன் அமெரிக்கா செலவளிக்க வேண்டும்? அத்தோடு வெளிக் கிரக உயிரினங்களை கண்டுபிடிப்பதற்கு என்று ஏன் SETI (Search For Extra Terrestrial Intelligence) என்ற உலகளாவிய அமைப்பையும் உருவாக்க வேண்டும்? எங் கேயோ இடிக்கிறது எனத் தோன்றும் உங்கள் மன உணர்வே எனக்கு ஏற்படுகின்றது. ஏலியன்கள் தொடர்பான மேலதிக விடயங்களுடன்

மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்...

கோவிட்-19 பேரவல காலத்து இளைஞர்கள்: கரிசனை கொள்ள வேண்டிய பாதிப்புகளும் பரிகாரங்களும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் என்று வசதிகருதி பருமட்டாக வரையறுத்துக் கொள்ளலாம். அந்த வயதெல்லைக்குட்பட்ட வர்களில் கூட விசேடமான வகுதியினர் உள்ளடங்கியுள்ளனர். இடைநிலை வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்கள், உயர்தர வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்கள், உயர்தரத்துக்குப் பின்னான உயர்கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டு கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளைப் பெற்றுவரும் மாணவர்கள் முதலானோரை உள்ளடக்கிய பெற்றோரில் முழுமையாக தங்கியிருந்து கல்வி கற்று வரும் இளைஞர்கள் எனலாம். இவர்கள் ஏறத்தாழ 23 வயது வரை ஏதோ ஒரு கல்வி ஏற்பாட்டினுள் தங்களை உட்படுத்தியிருப்பர். இன்னொருபுறம் இதே வயதுப்பிரிவினர் கல்வியைத் தொடராது அல்லது கல்வியிலிருந்து இடைவிலகி தொழில்களைச் செய்பவர்களாகவோ அல்லது தொழிலின்றிப் பெற்றோரில் தங்கி வாழ்பவர்களாகவோ இருப்பர். பொதுப்பரீட்சைகளின் நிறைவில் அல்லது உயர்கல்வியின் நிறைவுடன் கல்விக் காலத்தை முடித்துக்கொண்டு பெற்றோரில் தங்கியிருப்பவர்களும் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றபின்னரும் பெற்றோருடன் வாழ்பவர்களும் இன்னொரு வகுதியினர். இவ்வாறான பல்வேறு வகுதியினர் இருப்பினும் 29 வயதுக்குட்பட்ட ஒருவர் திருமணமாகிவிட்டால் அவரை இளைஞர் என்று வரையறுக்கலாமா எனும் வழமையான கேள்வியொன்றும் உள்ளது. வரையறைகள் எதுவாயினும் தங்கள் திருமணம் வரை பெற்றோரில் தங்யிருந்து அல்லது பெற்றோருடனிருந்து வாழும் ஆண்-பெண்கள், திருநங்கைகள் போன்ற விசேட பிரிவினர், விசேட தேவையுடையவர்கள், மாற்றுவலுவுடையவர்கள் முதலான பலரும் இதில் உள்ளடங்குவர். இவர்கள் யாவரையும் கருத்தில் எடுத்துத்தான் இளைஞர் மீதான கோவிட்-19 தாக்கத்தைச் சரிவர விளங்கிக்கொள்ள முடியும். சூழலியல் முறைமைக் கோட்பாட்டின்படி (ecological system theory) இளைஞர்கள் வாழ்வின் உடனடியான சூழமைவிலிருந்து தங்களுக்கான மேலும் விரிந்துசெல்லும் பெரிய சூழல்வரை தமக்கான சூழலை மூன்று மட்டங்களில் கொண்டிருப்பர். அத்தகைய சூழலானது நுண்ணிலை, இடைநிலை, பருநிலை மட்டங்களைக் கொண்டிருக்கும் என்று விளக்கப்பட்டுள்ளது. இளைஞர் ஒருவரின் குடும்பம் மற்றும் வீட்டு வாழ்வுச் சூழலிலிருந்து உருவாகும் காரணிகள் நுண்ணிலை மட்டத்தில் உள்ளடங்கும். இளைஞர்கள் ஊடாடும் பாடசாலை, சுகாதாரப் பராமரிப்பு போன்ற பரந்துபட்ட சமூக முறைமைகளிலான மாற்றங்களால் உருவாகும் காரணிகள் இடைநிலை மட்டத்தில் உள்ளடங்கும். இளைஞர்களின் குடும்பங்களை மறைமுகமாகப் பாதிக்கும் பரந்த சமூக நம்பிக்கைகள், பண்பாடு, நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றுடன் சமூகத் தொழிற்பாட்டுக்கான ஊக்கமும் தொடர்பான காரணிகள் பருநிலை மட்டத்தில் உள்ளடங்கும். இளைஞர்களின் வாழ்வியற் சூழமைவைத் தீர்மானிக்கும் இந்த மூன்றுவகைக் காரணிகள் மீதும் கோவிட்-19 கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய தாக்கம் இளைஞர்களைப் பல்வேறுவகையில் பாதிக்கின்றது. இவ்வாறு மூன்று வேறு மட்டங்களில் விளக்கம் பெறுகின்றபோதிலும் அவை ஒன்று இன்னொன்றுடன் பின்னிப்பிணைந்த தொடர்புடையவையே.

இளைஞர் ஒருவரின் குடும்பம் மற்றும் வீட்டு வாழ்வுச் சூழலில் கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் எவை? அந்தப் பாதிப்புகள் இளைஞர்களின் வாழ்வில் நுண்ணிலையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது? என்பதைப் பல ஆய்வுகள் அறிக்கைப்படுத்தியுள்ளன. அவை குடும்ப உறுப்பினர்களின் தனிமைப்படுத்தல், சமூகத் தனிமைப்படுத்தல், குடும்பங்களின் இழப்பு, குடும்பங்களிலிருந்து பிரிந்திருத்தல், தனிமைச் சூழலிலிருந்து தப்பிக்கொள்ளக் கைக்கொள்ளும் ஆரோக்கிய மற்ற வழிமுறைகள் என்பவற்றால் இளைஞர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்று கூறுகின்றன. இளைஞர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களில் குறிப்பாக தந்தை, தாய் போன்றவர்களிலிருந்து தனிமைப்படுத்தப்படுவதால் பல உளரீதியான தாக்கங்களுக்கு உட்படுகின்றனர். தங்கிவாழும் நிலையில் குறித்த தனிமைப்படுத்தல்கள் அவர்களுக்கான அடிப்படையான தேவைகளை நிறைவேற்றுவதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பவற்றில் குறைவு ஏற்படும் நிலையில் குடும்ப வாழ்வில் வெறுமையை உணர்கின்றனர். நாளாந்த கடமைகளின் கட்டமைப்பை கோவிட்-19 நிலவரம் மாற்றியுள்ளது. இது இளைஞர்களின் விளையாட்டுப் போன்ற பௌதிகச் செயற்பாடுகளின் அளவை வெகுவாக குறைத்துள்ளது. அதிகநேரம் நோக்கற்று வீடுகளில் வெறிதான ஓய்விலிருத்தல் பிள்ளைகளின் நித்திரை செய்வதற்கான கால அட்டவணையில் குழப்பத்தை உண்டாக்கி நித்திரைக்குழப்பத்தின் வழியான பல பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இளைஞர்களின் சமூகத் தனிமைப்படுத்தலின் முதன்மையான விளைவு அவர்கள் தமது சகபாடிகளுடனான ஊடாட்டத்தை பௌதிக ரீதியாக இழத்தல். பாடசாலை மற்றும் சமூக மட்டங்களில் உள்ள தமக்கான சகபாடிகளை இழத்தல் தொடர்ச்சியான தனிமையை உருவாக்கும். அதனால் தொடர்பாடல் சாதனங்களில் நண்பர்களுடன் நீண்ட நேரம் தொடர்பு கொண்டு பேசுவர் அரட்டைகளில் ஈடுபடுவர். அது அவர்களை மூத்தவர்களின் வெறுப்புக்கு ஆளாக்கும். வெறிதான தனிமையிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணிம தொழில் நுட்பங்களில் பயிற்சிமிக்க இளைஞர்கள் அவற்றோடு தங்கள் பொழுதைக் கழிப்பர். எண்ணிம தொழில்நுட்பப் பயிற்சியற்ற பெற்றோர் அவற்றை நிராகரிக்க முற்படுவர். வீடியோ விளையாட்டுகள், கைத்தொலைபேசி முதலானவற்றுடன் வரையறையற்ற சகவாசத்தை ஏற்படுத்திக்கொள்வர். இது அவர்களின் நடத்தை மற்றும் உளச் சுகாதாரத்தில் பல்வேறு பிறழ்வுகளை நீண்ட நாட்களில் உருவாக்கலாம். கல்வியைத் தொடரும் பிள்ளைகளானால் ஒரு புறத்தில் கல்வி ஏற்பாடுகளின் நிர்ப்பந்தத்தால் நடைபெறும் நிகழ்நிலை வகுப்புக்களைத் தொடர்வதற்கு மேலதிகமாகப் பொழுதைக் கழிப்பதற்கான எண்ணிமத் தொழில்நுட்ப சாதனப் பயன்பாட்டையும் சேர்த்து முழுநேரம் கருவிகளோடு புழங்குபவர்களாக மாற்றமுறுகின்றனர். உயிர்மை மிக்க சகபாடிகளின் பிரசன்னத்துக்கு சாதனங்கள் மாற்றாக அமையும்போது அது பல நடத்தைப் பிறழ்வுகளை இளைஞர்களிடம் ஏற்படுத்த வாய்ப்பாகும். பெற்றோரைப் பொறுத்தவரை பிள்ளைகளின் நன்னிலைக்கான பல பராமரிப்புத் தேவைகளையும் பாதுகாப்புத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய மேலதிக வேலைப்பழுவைச் சுமக்கின்றனர். குறிப்பாக வேலைக்குச் செல்லும் பெற்றோர் பாடசாலை செல்லாது வீட்டில் தங்கியிருக்கும் இளைஞர்களுக்கு பல்வேறு பாதுகாப்புப் பொறிமுறைகளைச் சிந்தித்து நடைமுறைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இது காலவோட்டத்தில் இளைஞர்கள் வீட்டுச்சூழலிலேயே துஸ்பிரயோகங்களில் ஈடுபாடு கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிவிடும். வீட்டுச்சூழலில் இருந்தபடியே தனிமையை உணரும் இளம் பிள்ளைகள் மகிழ்வை மறுப்பவர்களாகவும் (anhedonia), சமூகப் பின்வாங்கிகளாகவும் (socialwithdrawals), நோக்கற்றவர்களாகவும்(hopelessness) மாறுகின்றனர். தனியன்களாக ஒவ்வொரு இளைஞர்களும் தங்களால் தினமும் செய்யக்கூடிய பெருமளவிலான செயற்பாடுகளைத் திடீரென இழந்துள்ளனர். இது அவர்களின் நாளாந்த வாழ்வில் பதற்றம் சம்பந்தமான பிரச்சினைகளாக மாறும். அவை நீண்டகாலத்துக்குத் தொடரும் நிலையில் மனச்சோர்வுக்கான அறிகுறிகளாக மாறிவிடும்.

இளைஞர்கள் ஊடாடும் பாடசாலை, சுகாதார பராமரிப்பு போன்ற பரந்துபட்ட சமூக முறைமைகளிலான மாற்றங்களால் உருவாகும் காரணிகளாலான இடைநிலை மட்டப் பிரச்சினைகள் பலவற்றை குறித்து கவனமெடுக்க வேண்டுமென ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன. உலகில் 188 நாடுகளில் ஏறத்தாழ 1.5 பில்லியன் மாணவர்கள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகச் சூழலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கல்விக்கான சூழலில் வழமையாகப் பெற்றுக் கொள்ளும் உளச் சுகாதாரத்தைப் பேணும் வளங்கள் மற்றும் வழிமுறைகளை இழந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இயல்பான சூழலில் கல்விச்சாலைகளுக்குச் செல்லும் இளம் பிள்ளைகளுக்கு சுகாதார பராமரிப்புகள், பழக்க வழக்கங்கள் தொடர்பில் தகுந்த வழிகாட்டல்கள் மற்றும் விழிப்புணர்வு என்பன தொடர்ச்சியாக வழங்கப்படும். கலைத்திட்டங்கள் வாயிலாகவும் சுகாதாரப் பிரிவினரின் தலையீடுகள் மூலமாகவும் அவை சாத்தியமாக்கப்படும். உளவளத் துணைக்கும், வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலுக்கும் ஏற்பாடுகள் இருக்கும். இளம் பிள்ளைகளுக்கான நம்பிக்கைவாய்ந்த அறிவுரையாளர்களாக ஆசிரியர்கள், சகபாடிகள், சிரேஸ்ட மாணவர்கள் ஆகியோர் விளங்குவர். கோவிட்-19 பேரவலத்தினால் இளம் பிள்ளைகள் இவற்றை இழந்துள்ளனர். நீண்டகாலம் வீட்டிலான சிறைவாசம் உளரீதியான சுகாதாரத்துக்கான இடர்காரணியாகிவிடுகின்றது. கல்விச்சாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகளாயினும் சரி, ஏனைய இளம் பிள்ளைகளாயினும் சரி தமக்கான உளப்பூரிப்பை இழந்துவிடும் நிலையில் அவர்களுக்கான மன வெழுச்சி மற்றும் ஊக்கல் என்பவற்றை இழந்து விடுவர்.

இளைஞர்களின் குடும்பங்களை மறைமுகமாகப் பாதிக்கும் பரந்த சமூக நம்பிக்கைகள், பண்பாடு, நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றுடன் சமூகத் தொழிற்பாட்டுக்கான ஊக்கமும் தொடர்பான காரணிகளையும் கோவிட்-19 வெகுவாக பாதித்துள்ளது. இந்தப் பாதிப்புகளை பருநிலை மட்டத்தில் அணுகவேண்டும். ஒரு சமூகத்தின் கட்டமைப்பு, அவற்றின் இயக்க முறைமைகள், தொழிற்படு உறவுகள், பண்பாட்டு உள்ளடக்கங்கள் முதலான விரிவு பெறுகின்ற சமுதாயத்திலிருந்து இளைஞர்களுக்கு கிடைக்கவேண்டிய பல்வேறு விடயங்கள் கிடைப்பதில்லை. ஏற்கனவே வேலையின்மை, கீழுழைப்பு முதலான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த இளைஞர்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாளாந்தக் கூலியுழைப்பை நம்பியுள்ள இளைஞர்கள் தமக்கான தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். தனியார் துறைகளில் வேலைசெய்து வந்த இளைஞர்கள் ஆட்குறைப்பு மற்றும் நாட்குறைப்பு நடவடிக்கைகளால் பொருளாதார உழைப்பில் சீரின்மைகளை அனுபவிக்கின்றனர். முறைசார துறைகளில் வேலை செய்பவர்களின் சேமிப்புகள் குறைந்து வறுமைநிலைக்குள் வீழ்கின்றனர். தனியார் துறைகளில் தேசிய பாதுகாப்பு அளவீடுகளுக்கு மேலாக சுரண்டலும் துஸ்பிரயோகமும் நடைபெறுகின்றது. இது யுவதிகளைப் பெரும்பாலும் பாதிக்கின்றது. இளைஞர் கழகங்களின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. விளையாட்டுக் கழகங்கள் வெறிச்சோடிப் போயுள்ளன. இளைஞர்கள் தங்கள் மனவெழுச்சிகளுக்கு வடிகால் தேடும் சமூதாயமட்டக் களங்கள் வெறிதாகியுள்ளன. எப்போதுமே சமூகக் கட்டமைப்பு மற்றும் அரச கட்டமைப்புகளில் மாற்றங்கள் நிகழவேண்டும் என்பதை புரட்சிகரமாக விரும்புகின்ற, சமத்துவம் மற்றும் சனநாயகம் என்பவற்றுக்காக கோசமெழுப்புகின்ற சுபாவமுள்ள இளைஞர்களால் இன்று வெகுஜனத் தளத்தில் எதிர்ப்பைக் காட்டுபவர்களாக (mass protestors) தொழிற்பட முடியவில்லை. இது நீண்ட காலத்தில் நேர்முகமான மாற்றத்தை அவாவிநிற்கும் இளைஞர்களின் இயல்பை வலுவற்றதாக்கிவிடும். இதனால் இளையோரின் சமுதாயப் பங்கேற்பு, அரசியல் பங்கேற்பு, பண்பாட்டுப் பிரதிநிதித்துவம் என்பன நீண்ட காலத்தில் சரிவுறும். சமுதாய வாழ்வில் அதிகளவு பங்கேற்கும் நிலையில்தான் பண்பாட்டுரீதியான அம்சங்கள் மூத்தவர்களிடமிருந்து இளைஞர்களுக்கு பரிவர்த்தனை செய்யப்படும். சமுதாய வாழ்விலான இடைவினைகள்தான் இளைஞர்களுக்கு சமூக விழுமியங்கள் மற்றும் நியமங்களை பகிர்ந்துகொள்ளச் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. நடைமுறையிலுள்ள சமூக இடைவெளிகள் பௌதிகரீதியிலும், பண்புரீதியிலும் இதனைப் பெரிதும் பாதிக்கின்றது.

இளைஞர் என்ற வகையில் உள்ளடங்கியுள்ள கவனிக்கப்படாத அல்லது வலுவற்ற பிரிவினரின் பிரச்சினைகள் தனித்த கவனம் பெறவேண்டும். போரினால் பெறுமதிமிக்க ஒரு இளஞ்சந்ததியை காவுகொடுத்த சமூகத்தில் அதன் பாதிப்புக்களோடு வாழ்ந்துவரும் அவையவங்களை இழந்த இளைஞர்கள், மாற்றுவலுவுடைய இளைஞர்கள், விசேட தேவையுடைய இளைஞர்கள், விசேட வகைமைக்குட்பட்ட இளைஞர்கள், போதைக்கு அடிமையான இளைஞர்கள் போன்றோர் சாதாரணநிலையிலுள்ள இளைஞர்களிலும் அதிக பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். சமூக ஊடாட்டம் குறைந்த நிலையில், ஏற்கனவே குறைந்த நிலையிலுள்ள அவர்களுக்கான குடியியல் வெளி(civics space) மேலும் சுருங்கியுள்ளது. இந் நிலை வீட்டை மாத்திரம் குடியியல் வெளியாகக் காணும் நிலையை உருவாக்கும். ஆகக்குறைந்தது அவர்களுக்கான பொழுதுபோக்கு, இலாவகமாக்கல் போன்றவற்றுக்கே சவால்கள் ஏற்பட்டுள்ளன. போதை மற்றும் மதுப்பாவனைக்கு அடிமைப்பட்ட இளைஞர்களை வீட்டில் வைத்துக் கையாழ்தல் குடும்பங்களில் பாரிய பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளது.

கோவிட்-19 இளைஞர்கள் மீது ஏற்படுத்தியுள்ள இத்தகைய தாக்கங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் சாத்தியமான வழிகளைச் சிந்திக்கவேண்டும். அது ஏற்கனவே குறிப்பிட்டுள்ள நுண்ணிலை, இடைநிலை, பருநிலை மட்டங்களைக் கருத்திலெடுத்து மேற்கொள்ளப்பட வேண்டும். இடைநிலை மற்றும் பருநிலை மட்டங்களில் தீட்டவேண்டிய திட்டங்கள் விசாலமான நோக்குகளுடன் அமைதல் வேண்டும். அத்தகைய விசால மான திட்டமிடல்களில் வாண்மைத்துவமும் நிபுணத்துவமும் உள்ளவர்களின் பங்கு முதன்மையானது. எனினும், ஆகக்குறைந்தது நுண்ணிலையில் குடும்ப மட்டத்தில் இளைஞர்களைக் கையாழவும் வழிநடத்தவும் பொருத்தமான உபாயங்கள் உடனடியான தேவையாகின்றது. குடும்பத்தில் இளைஞர்களுக்கு உறுதுணையான சூழலைக் கட்டியமைக்க வேண்டும். இளைஞர்களின் உளச் சுகாதாரத்தைக் கையாள்வதற்கு வல்லுனர்களின் ஆலோசனையுடன் ஊடகங்கள் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு ஒலி-ஒளிபரப்புச் செய்யவேண்டும். மனிதர்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள இந்தக் காலத்தில் ஊடகங்களின் உணர்திறன்மிக்க பங்கு முதன்மையானது. இடர்மிக்க காலமொன்றில் இளைஞர்கள் மத்தியில் மனவழுத்தத்தை முகாமைசெய்தல், உணர்வுமுகாமை செய்தல் போன்றவற்றுக்கான வழிகாட்டல்களைச் செய்யும் நிகழ்ச்சிகளை இளைஞர்கள் அதிகம் உபயோகப்படுத்தும் ஊடகங்கள் வாயிலாக வழங்க முன்வருதல் வேண்டும். உள அமைதிக்கும், உள ஆற்றுப்படுத்துலுக்கும் உதவத்தக்க படைப்பாக்கங்களை உருவாக்க வேண்டும். அவை குறும்படங்களாகவோ, ஆவணப்படங்களாகவோ, நேர்காணல்களாகவோ, கலை-கலாசார படைப்புக்களாகவோ அமையலாம். மொழிக்கல்வி, பண்பாடு மற்றும் மரபுரிமைகள் தொடர்பான ஆர்வமூட்டவல்ல அறிவூட்டல் நிகழ்ச்சிகள் வழங்கப்படவேண்டும். வலுவிழந்துபோயுள்ள இளைஞர் கழகங்களின் செயற்பாடுகளை நிகழ்நிலை வழிமுறைகளால் உயிர்ப்படைய வைத்தல் வேண்டும். இளைஞர்கள் தங்கள் கருத்துக்கள், இலட்சியங்கள், எதிர்பார்ப்புக்களை குடும்பங்களோடு சேர்ந்தே முன்வைக்கத்தக்க கருத்தாடல் வெளிகளை சமூக ஊடகங்களின்வழி உருவாக்கவேண்டும். அவற்றின் வழி தன்னம்பிக்கை, உயர்ந்த சுயமதிப்பீட்டை உருவாக்கவேண்டும். ஆகக் குறைந்தது ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலேனும் குடும்பநல வழி காட்டல்-ஆலோசனைக்கான குழுவின் மூலம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் நன்னிலை தொடர்பில் தொடர்ச்சியான கரிசனை ஏற்படுத்தப்பட வேண்டும். எதிர்கால சந்ததியொன்று பிறழ்வுக்குள்ளாகி எம் கண்முன்னே தொலைந்து போவதை மேலும் அதிகப்படுத்தவல்ல இந்த சூழ்நிலையையும் நாம் வெற்றி கொண்டேயாக வேண்டும். ■

விளையாட்டு வீரர்களும் தனிமனித ஒழுக்கமும்

சி.விமலன்

இலங்கை அணி வீரர்களான குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல, தனுஸ்க குணதிலக ஆகிய மூவரும் இங்கிலாந்தில் உயிர்ப் பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியேறி சுற்றித் திரிந்தது தெரிய வந்ததால் அவர்கள் மூவரும் இலங்கைக்கு உடனடியாக திருப்பி அழைக்கப்பட்டதோடு விசாரணை முடியும் வரை மூவரும் போட்டிகளில் பங்குபற்ற இடைக்காலத் தடையும் விதிக்கப்பட்டது.

கிரிக்கெட்டைப் பொறுத்த வரை இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது புதிதில்லை. சென்ற வருடம் இந்தியா, அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பொழுது றோகித் சர்மா, ரிஷப் பன்ட், சுப்மன் கில் ஆகியோர் உயிர்ப் பாது காப்பு வளையத்தை விட்டு வெளியேறியமை தெரிய வந்ததையடுத்து அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு பின்னர் விளையாட அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். அதுபோல கார்த்திக் பாண்டியாவும் கே.எல்.ராகு லும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பெண்கள் குறித்தும் பாலியல் குறித்தும் வெளிப்படையாகத் தெரிவித்த கருத்துகளும் அதிர்ச்சியை ஏற்படுத்தி பலரது கண்டனத்திற்கும் ஆளாகி இருந்தது. இதையடுத்து அவர்கள் மீதும் ஒழுக்காற்று விசார

ணை நடத்தப்பட்டு சில போட்டிகளில் விளையாடத் தடையும் விதிக்கப்பட்டது. அதுபோல அவுஸ்ரேலியாவில் நடை பெறும் பிக்பாஸ் தொடரில் கலந்து கொண்ட கிறிஸ் கெயில் பெண் ஊடகவியலா ளரிடம் வார்த்தைகளில் எல்லை மீறியதும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

அதுபோல இங்கிலாந்து வீரர்களான பென் ஸ்ரோக்ஸ், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகியோர் குடிபோதை யில் இரவு விடுதியில் சண்டையிட்டதன் காரணமாக கிரிக்கெட் சபையின் தண்டனைக்கும் ஆளாகி இருந்தார் கள். சமீபத்தில் இங்கிலாந்தின் றொபின்சன் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் இனவெறியை வெளிப்படுத் தும் விதமாக ருவிற்றரில் வெளியிட்ட கருத்துக்களால் தற்போது அவரும் தடைக்கு ஆளாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவை சில உதாரணங்கள் மாத்தி ரமே. இவை அனைத்தும் உணர்த்துவது, வீரர்கள் விளையாட்டில் மாத்திரமல்லாமல் தனி மனித ஒழுக்கத்தி லும் சிறந்து விளங்க வேண்டும் என்பதைத் தான்.

விளையாட்டு வீரர்களும் சாதாரண மனிதர்கள் தான் என்றாலும் அவர்கள் எத்தனையோ பேருக்கு குறிப்பாக இளஞ்சந்ததியினருக்கு ஆதர்ஷமாக விளங்குபவர்கள். இது தனியே கிரிக்கெட் வீரர்களுக்கு மாத்திர மல்லாமல் அனைத்து விளையாட்டு வீரர்களுக் கும் பொருந்தும். எனவே விரும்பியோ விரும் பாமலோ தனி மனித ஒழுக்கத்துடன் முன் மாதிரியாக வாழ வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

சில சம்பவங்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் கண்டும் காணாமல் விடுவதும் இத்தகைய தவறு செய்தவர்களுக்கு அதிக பட்ச தண்டனை வழங்காமல் குறைந்த பட்ச தண்டனையும் மன்னிப்பும் வழங்குவதுகூட இத்தகைய தவறுகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. 2005 காலப் பகுதியில் மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணியினர் ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியதும் வெற்றிக் கொண்டாட்டத்தில் சில வீரர்கள் ஆடுகளத்தின் மீதே சிறுநீர் அடித்ததும் வீரர்க ளின் தனிமனித நடத்தைப் பிறழ்வுகளே.

தனிமனித ஒழுக்கம் ஒவ்வொருவருக்கும் முக்கியம் என்றாலும் அதையும் மீறிய ஒழுக்க மீறல்களில் கலாசா ரப் பார்வைகள் செலுத்தும் தாக்கமும் இத்தகைய பிரச்சி னைகளின் தீவிரத்தை மேலோங்கச் செய்கிறது எனலாம். புகைப் பிடித்தல், மதுப்பாவனை போன்ற விடயங்க ளில் மேலைத்தேய கலாச்சாரத்தில் ஊறிய ரசிகர்களுக் கும் கீழைத்தேய கலாசாரத்தில் ஊறிய ரசிகர்களுக்கும் அடிப்படையில் உள்ள வேறுபாட்டை காணொலியில் குசல் மெண்டிஸ் புகைப்பிடிப்பதைக் கண்டித்து வெளி வந்த பெரும்பாலான பதிவுகளில் இருந்து அறியக்கூடிய தாக உள்ளது. அதனால் தான் ஐ.பி.எல் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட வருடங்களில் போட்டி முடிவடைந் ததும் நடத்தப்பட்ட இரவு விருந்துகள் விமர்சனத்தை ஏற்படுத்தி இருந்ததையும் இந்த இடத்தில் சுட்டிக் காட்டலாம்.

மேலே குறிப்பிட்ட பல சம்பவங்கள் கிரிக்கெட் உலகில் நடைபெற்றாலும் இலங்கை அணியின் மூன்று வீரர்களும் தற்போது அதிகம் கண்டனத்திற்கு உள்ளா னது இங்கிலாந்துடனான இருபதுக்கிருபது தொடரை இழந்த பின்பும் இதற்கு மறுநாள், ஒருநாள் தொடர் ஆரம்பமாக இருந்த நிலையிலும் அதனைப் பற்றி எந்தக்கவலையும் இன்றி சுற்றுலாவிற்குச் சென்றவர்கள் போலச் செயற்படுவது தான் இன்னும் வேதனையை இலங்கை ரசிகர் களுக்கு ஏற்படுத்தியுள்ளது

கடந்த சில வருடங்களாகவே ஸ்ரீலங்க கிரிக்கெட்டில் நிலவும் அரசியல் தலையீ டுகள், ஒவ்வொரு வடிவத்திற்கும் பொருத்தமான வீரர்களைத் தெரிவு செய்யாமை, அதிக வீரர்களை அறிமுகப்படுத்தும் அளவுக்கு அவர்களுக்குப் போதிய வாய்ப்புக்களை வழங்காமை, தெரிவு செய்யப்படும் வீரர்களும் பொறுப்புணர்ந்து விளை யாடாதமை, உள்ளூர் கிரிக்கெட்டை வளர்ப்பதற்கான ஒழுங்கான திட்ட மிடல் இன்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பின்னடைவுகளைச் சந்தித்து வரும் இலங்கை அணி மீது வெறுப்பிலிருக்கும் ரசிகர்களுக்கு இது போன்ற சம்பவங்கள் வேதனையையும் ஆத்திரத்தையும் ஒருங்கே அளித்துள்ளன.

அந்தவகையில் மூன்று வீரர்களதும் இந்தச் செயற்பாடு ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுக்கும் இலங்கை அணிக்கும் இலங்கை ரசிகர்களுக்கும் அவமானத்தை ஏற்படுத் தியுள்ளது.

குசலும் தனுஸ்கவும் ஸ்ரீலங்க கிரிக்கெட்டின் ஒழுக்காற்று விசாரணையால் தண்டிக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும். தற்போது இவர்கள் மூவரும் தவறை ஒப்புக் கொண்டதால் ஸ்ரீலங்க கிரிக் கெட் இவர்கள் மூவரும் ஒரு வருட காலம் சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தடை விதித்துள்ளது. ஆனாலும் இப்பத்தி எழுதும் வரை உள்ளூர் போட் டிகளுக்கும் இத்தடை தொடருமா என்பது குறித்தும் இவர்களுக்கு விதிக்கப்பட இருக்கும் அபராதத் தொகை குறித்தும் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அதேவேளை உயிர்ப்பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியே வருவதென்பது இன்றைய காலத்தில் சாதாரண ஒரு விடயம் அல்ல. அது உயிர் சம்பந்தப்பட்டது. கொரோனாத் தொற்று டர்ஹம் நகரில் அதிகரித்து வரும் நிலையில் முகக்கவசமும் இன்றி இவர்கள் வெளியே வந்துள்ளார்கள். தற்போது காணொலி மூலம் இவர்கள் வெளியே வந்தது தெரிய வந்ததால் ஏனைய வீரர்களிடமிருந்து தனிமைப்படுத்தப் பட்டே இவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளார்கள். இந்த விடயம் காணொலி மூலம் தெரிய வராது விட்டால் சொல்லாமற் கொள்ளாமல் இவர்கள் ஏனைய வீரர்களுடன் ஒன்றாகவே இருந்திருப்பார்கள். எனவே எதிர்மறையாக ஏதும் நடைபெற்றிருந்தால் அனைத்து வீரர்களதும் கதி என்னவாகி இருக்கும். எனவே இந்த விடயத்தில் கவனக்குறைவாக இருந்த அணியின் முகாமையாளரும் தண்டிக்கப்படல் அவசியமானதே. ■

வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- .....

தரம்:- .....

கற்கும் பாடசாலை:-.....

விலாசம்:- .....

.....

தொலைபேசி இலக்கம்:-.....

பிள்ளைகளே!

உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.

அனுப்பவேண்டிய இறுதித் திகதி ***14.07.2021***

சூழ்ச்சிக்காரப் பூனை



இளம் வயதில் வலுவாக இருந்த காலத்தில் நிறைய சுண்டெலிகளை அந்தப் பூனை வேட்டையாடி இருக்கிறது. அப்போது அந்தப் பூனையைக் கண்டால் சுண்டெலிகள் எல்லாம் அஞ்சி நடுங்கும். ஆனால், வயதான பிறகு, அந்தப் பூனையால் ஒரு சுண்டெலியைக் கூடப் பிடிக்க முடியவில்லை .

ஒரு நாள், சூழ்ச்சி செய்து சுண்டெலிகளைப் பிடிப்பதென அந்தப் பூனை திட்டமிட்டது. மல்லாக்கப் படுத்துக் கொண்டு அசையாமல் கிடந்தது அந்தப் பூனை. அந்தப் பூனையைப் பார்த்த ஒரு சுண்டெலி, பூனை இறந்துவிட்டதாக நினைத்தது. தன்னுடைய நண்பர்களிடம் ஓடிச்சென்ற சுண்டெலி, "அந்தப் பூனை இறந்து விட்டது வாருங்கள், ஆடிப் பாடி விளையாடலாம்" என்று அழைத்தது.

எல்லாச் சுண்டெலிகளும் ஆடிப்பாடி விளையாடின. அவை எல்லாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தன. அந்தப் பூனையைச் சுற்றிச் சுற்றி வந்து நடனமாடின. ஆனால், அந்தப் பூனை அசையவே இல்லை. அப்போது, பூனையின் தலையின் மீது ஒரு சுண்டெலி குதித்து,

"என்னைப் பாருங்கள்! நீங்கள் எல்லாரும் பக்கத்தில் வாருங்கள்! இந்த மோசமான பூனை இறந்து போய்விட்டது. அதன் தலையின் மீது நடனமாடலாம்!" என்றது.

ஆனால், திடீரென அந்தப் பூனை குதித்தெழுந்து அந்தக் குறும்புக்காரச் சுண்டெலியை எட்டிப் பிடித்தது. மற்ற சுண்டெலிகள் எல்லாம் முடிந்தவரை வேகமாக அந்த இடத்தைவிட்டுத் தப்பியோடி விட்டன.

சுண்டெலிகளே! மறந்து விடாதீர்கள்! ஒருபோதும் பூனையை நம்பாதீர்கள்!

நன்றி: ஆபிரிக்க பழங்கதைகள்

பூவோடு வசித்தல்

வண்ண வண்ண பூக்கள்
வாசம் தரும் பூக்கள்
மனதைக் கவரும் மலர்கள்
மாலைக்கு உதவும் மலர்கள்
பூஜைக்கு ஏற்ற பூக்கள்
புத்தம் புதிய பூக்கள்
மெல்லவென விரியும் மலர்கள்
சில்லென குளிரும் மலர்கள்

வி.சுவர்ணவி,
யா/அச்சுவேலி புனித சென்.திரேசா மகளிர் கல்லூரி

கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில்
பரிசை வெல்பவர்
செல்வி கருணாகரன் கிரிசானா
தரம் - 08
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

சிறுவர் பகுதிக்கான
உங்கள் சொந்த ஆக்கங்களை
எங்களுக்கு உடனே
அனுப்பி வையுங்கள்

தீம்புனல்
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564

யாழ்ப்பாணத்தில் கட்டுமானத் துறையில்
கால்பதிக்கும் Needa குழுமத்தினர்

Needa Group of Companies (pvt) Ltd.

Needa Engineering

உங்கள் காணியில் ஓர் அழகிய இல்லத்தினை
அமைத்துக் கொள்ளுங்கள்.

வங்கிக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும் NDB bank

கனகசபை கட்டடத் தொகுதி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

தொடர்புக்கு - 0771102395

வாடகைக்கு வீடு தேவை

நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு உத்தியோகத்தர்கள் வசிக்கக்கூடிய வீடு தேவை.

தொடர்புக்கு – 0769894190

விற்பனைக்கு

பருத்தித்துறை, மந்திகை பகுதியில்
7,1/2 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு - 0769894190

தேவை

பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி
ஆகிய பகுதிகளில்
2 அல்லது 3 பரப்பில்
வீடு கட்டக்கூடிய காணி தேவை.

தொடர்புகளுக்கு:- 0769894190

வேலை வாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு
Marketing Excutive,
Marketing Manager,
Proposal writer, Accountant,
Draftsman

தொடர்புக்கு - 0771686895

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 10.07.2021 அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.